

KALKI
22.10.2006 ரூ.8.00
80 பக்கங்கள்
கல்கி
குடும்பத்துடன் படிக்க...
ாவளிச்
றப்பிதழ்
ாரம் ஒரு
பாசுரம்!
புடைவை நாகரிகம்
தலைகீழ்!



- **ALOE CARE MOISTURISING CREAM:** Dual action (Moisturizer and antiseptic) it acts as an effective base. Ideal to use on hands, feet & sun exposed areas, it restores the skin integrity to soft, baby soft skin. Protects from UV radiation.
- **ALOE MULTIPURPOSE GEL :** A natural moisturizer, it has a soothing effect on burns, rashes etc. Effective for nappy rashes. Supportive in facials and aroma therapy.
- **ALOE CARE FAIRNESS OIL :** Prepared using organic cold process technology with absolutely no synthetic ingredients, it is an excellent sun screen and fairness formula.
- **ALOE CARE FACIAL GEL :** A natural moisturizer, it helps healing of cracked skin, removes dark circles & prevents pimples

& a wide range of Aloevera based beauty products

For trade enquiries, please contact :
teamhealthshoppe@drraoholdings.com
Team Health Shoppe, Team House,
GST Road, Vandalur, Chennai - 48.

Team EUBIO CARE For Wellness

Shortly @ Indira Nagar, Adyar

TEAM EUBIO CARE
(DIVISION OF CHEMFAB ALKALIS LIMITED)

VANDALUR	Team House - GST Rd. Ch- 48. Ph: 2275 0502
ANNA NAGAR	Plot 1200, Z Block, 6th Avenue Ch - 40, (Opp. Kokino Karate School) Ph : 4269 3332

E-mail : teamhealthshoppe@drraoholdings.com ■ Web : www.teamhealthshoppe.com

Member Dr. Rao's Group of Companies

கல்கி

CONTENTS

22.10.2006



ஜக்கி வாசுதேவ்

பசுமையைப் பாதுகாப்போம்!

"நம் தமிழகம் நாளுக்கு நாள் வறட்சியின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கிறது. பருவ மழை பொய்த்துவிட்டது. இப்போது பெய்கின்றதுகூட புயல் மழைதான். விவசாயத்துக்கு ஏற்றவகையில் கால, நேர முறைப்படி பெய்யும் பருவ மழையைப் பார்த்து இருபத்தைந்து வருடங்கள் ஆகிவிட்டன" என்கிறார் ஜக்கி வாசுதேவ். தமிழகத்தில் நிலவும் பசுமையின்மை குறித்து இந்த ஞானி கவலைப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

"நான் கோவைக்கு வந்த காலகட்டத்தில் நிலத்தடி நீர் சுமார் நூற்றியிருபது, நூற்று முப்பது அடிகளில் கிடைத்தது. இன்றைய நிலவரமோ, ஆயிரம் அடி, ஆயிரத்து ஐந்நூறு அடி தோண்டினாலும் நீர் இல்லை.

இன்று கோவையில் வீட்டுக்கு ஒரு போர்வெல். சில பெரிய வீடுகளில் நான்கு போர்கள் கூட உண்டு. பம்பு செட்டுகளை ஆயிரக்கணக்கில் உற்பத்தி செய்து நிலத்தடி நீரை நாம் உறிஞ்சிக் கொண்டே இருக்கிறோம். ஆனால் மரங்கள் என்ன செய்யும்? எப்படி நீரை ஏற்கும்?

நீங்கள் கோவையிலிருந்து சத்திய மங்கலம் போகும்போதோ அல்லது மதுரைக்குப் போகும்போதோ பனை மரங்கள்கூட பட்டுப்போயிருப்பதை பார்க்க முடியும். பனை மரங்கள் பாலைவனத்தில் கூட செழிப்புடன் இருக்கக் கூடியவை. ஆனால் இங்கு பனை மரமேகூட பட்டுப் போகிறது என்றால், பாலைவனத்தைவிட மோசமான நிலையை இந்த மாநிலம் அடைந்து விட்டது என்றுதானே அர்த்தம்.



அண்மையில் UNICEF நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலின்படி, 2025-ல் தமிழ்நாட்டில் அறுபது சதவிகித நிலங்கள் விவசாயத்துக்கு உதவாத நிலங்களாக மாறிவிடும்.

ஏன் இந்த நிலை? எதனால் இந்தப் பேராபத்து? மரங்கள் இல்லை; அதனால் மழை இல்லை. மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது– ஆனால் இருக்கிறதா

கனடாவில் கிரீன் கவர் எனக் கூறப்படும் காட்டுப் பகுதியின் சதவிகிதம் ஐம்பத்தைந்து. ஜப்பானில் அறுபத்தொன்பது சதவிகிதம்.

தமிழ்நாட்டில் பதினேழு சதவிகிதம்தான் இந்த கிரீன் கவர் பகுதி. இந்தப் பதினேழு சதவிகிதத்திலும் பாதிக்குப் பாதி மோசமான நிலையிலேயே இருக்கின்றது" என்று விசனப்படும் ஜக்கி வாசுதேவ், இந்நிலையை மாற்ற அருமையான திட்டமொன்றையும் கையிலெடுத்துள்ளார்.

"வருங்கால சமூகத்துக்கு வளம் சேர்க்க, இந்தப் பூமியில் சந்தோஷமாக, நிம்மதியாக அடுத்த சந்ததி வாழ, ஈஷா ஃபவுண்டேஷன் 'பசுமைக் கரங்கள்' என்ற புதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் ஒரே நாளில் ஏழு லட்சம் மரக்கன்றுகள் நடப்படவிருக்கின்றன. டிசம்பர் 15-ஆம் தேதி, முதல் கன்றை முதல்வர் நட, கடைசிக் கன்றை கவர்னர் ராஜ்பவனில் நடவிருக்கிறார். ஏற்கெனவே 2.5 லட்சம் மரக்கன்றுகள் இத்திட்டத்தின் மூலம் நடப்



பட்டுள்ளன. பல்வேறு தன்னார்வத் தொண்டர்களின் துணையுடனும் (ஏறக்குறைய 2,20,000 பேர்) தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடனும் இந்த நிகழ்வு நடைபெறப் போகிறது.

இதுபோன்ற சாதனைகள் முறியடிக்கப்பட்டு, ஏழு லட்சம் எட்டாக, பத்து பதினைந்தாகத் தொடருமானால் நான் மகிழ்ச்சியடைவேன். எதிர்வரும் பத்து ஆண்டுகளுக்குள் 11.4 கோடி மரக்கன்றுகள் நட்டு முடிப்பதே பசுமைக் கரங்களின் திட்டம்" என்கிறார் ஜக்கி.

- அருணா

கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

துள்ளித் திரிந்த காலம்

'மிர்ச்சி' சுசித்ரா

நினைத்துப் பார்த்தால் வேடிக்கையாகவும் வினோதமாகவும் இருக்கிறது. மனத்தில் கடுகளவுகூட கவலையில்லாமல், சிறகடித்துப் பறந்திருக்க வேண்டிய பள்ளி, கல்லூரிக் காலங்களில், நான் ஒரு சமர்த்துப் பெண்ணாக, பெற்றோருக்கும் ஆசிரியைகளுக்கும் அடங்கி ஒடுங்கிக் காலம் கழித்து வந்திருக்கிறேன்.

அப்பா ராமதுரை மருந்து கம்பெனியில் அதிகாரி. என்னுடைய முதல் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை எர்ணாகுளம் வாசம். அப்புறம் பதினோராம், பன்னிரண்டாம் வகுப்புகள் திருவனந்தபுரத்தில். டிபிகல் மிடில் கிளாஸ் குடும்பம். பழைய சம்பிரதாயங்களை முடிந்தவரை கடைப்பிடித்து, கொஞ்சம் கட்டுப்பாட்டுடன்தான் வாழ்ந்தோம்.

பள்ளியில் படிக்கும்போது முழுத் தேர்வு எப்போது முடியும் என்று காத்துக் கொண்டிருப்போம். காரணம் வருட வெகேஷனில்தான் அப்பா எங்களை சென்னைக்குக் கூட்டிக்கொண்டு வருவார். குரோம்பேட்டையில் அத்தை வீடு. ஒன்றரை மாதம் போவதே தெரியாது. அத்தைக்கும் பசங்கள் உண்டு. அவர் வீட்டில் நான்கைந்து பசு மாடுகள் வேறு. காலையில் எழுந்து மாட்டுக்குத் தவிடு காண்பித்து, பாலைக் கறந்து, அதன் பின் வருகிற கஸ்டமர்களுக்கு அரை ஆழாக்கு, ஓர் ஆழாக்கு என்று அளந்து கொடுக்கவே பத்து மணிவரை அத்தைக்கு நேரம் சரியாக இருக்கும். வாண்டுகளாகிய நாங்களும் மாட்டுக்கார அலமேலுகளாய் ஓடியாடி அத்தைக்கு உதவிக் கொண்டிருப்போம். சமயத்தில் மாட்டின் வாலை இழுத்து விளையாட, மாட்டுக்குக் கோபம் வருகிறதோ இல்லையோ, அத்தைக்கு வரும் ஆத்திரத்தை கைகொட்டி ரசிப்போம்.

திருவனந்தபுரத்தில் பட்டப்படிப்பு. ஒரு கண்டிப்பான கிறிஸ்தவக் கல்லூரியில். கேம்பஸுக்குள் ஏதாவது பையனுடன் பேசியதை செக்யூரிட்டி பார்த்துவிட்டால், கமிஷன் ஆஃப் என்கொயரி போட்டு விடுவார்கள். அது முடித்து கோவை பி.எஸ்.ஜி.யில் எம்.பி.ஏ. சேர்ந்துவிட்டேன். மலையாளச் சூழலை விட்டு முற்றிலும் தமிழ்ச் சூழல். நேந்திரம், புட்டு, கண்டல் என்று டிபனுக்கு டாடா சொல்லிவிட்டு, இட்லி, தோசை என்று தமிழ்க் கலாசார குறியீடுகளை வெளுத்துக் கட்டலாம் என்று ஆசையுடன் வந்தால், சுத்த மோசமான மெஸ். ஆறே மாதம் தான் ஹாஸ்டல். அதன்பின் அங்கேயிருந்து கிளம்ப ஒரு சம்பவம் சாக்காக அமைந்தது. எம்.பி.ஏ. படிப்பவர்களின் கனவு, ஒரு மல்ட்டி நேஷனல் கம்பெனியில் வேலை வாங்குவதாகத்தான் இருக்கும். எனவே கேண்டீன், மரத்தடி என்று எல்லா இடத்திலும் புத்தகமும், கனவுமாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு வேளையில், ஹாஸ்டல் டைமிங்கை மீறி கேண்டீனில் படித்துக் கொண்டிருந்தேன். பிறகு 'ஐயோ' என்று அலறி நண்பனின் பைக்கில் சென்று இறங்கினால், வார்டன் வரிந்து கட்டிக்கொண்டு வந்துவிட்டார். அவருக்கு 'பை' சொல்லிவிட்டு, ஜாகையை வெளியே மாற்றிக்கொண்டேன்.

அதன் பின் பெங்களூரில் ஒரு விளம்பர கம்பெனியில் வேலை கிடைத்தது. ரொம்ப சோஷியலைஸ் பண்ண வேண்டிய லைஃப். பிடிக்குதோ இல்லையோ, நண்பர்களுடன் சேர்ந்து மாலையில்

ஞாபகம்

Pub-க்குப் போக வேண்டும். இரவு லேட்டாகும். வீட்டுக்குள் வந்தால் தலை முடி முதல் கால் நகம் வரை சிகரெட் நாற்றம் வீசும். கொஞ்சம்கூட பிடிக்காமல் சென்னை ஒ அண்ட் எம் என்ற விளம்பர கம்பெனிக்கு வந்துவிட்டேன். இங்குதான் உமா எனக்குத் தோழியானாள். கிருஷ்ணமோகன்,

இடையில் பொது நண்பர்கள் மூலம் அறிமுகமானார் கார்த்திக். பெரியவர்கள் ஆசியுடன் திருமணம் நடந்தது. கல்யாணத்துக்கு முன் dating அது இது என்று சுற்றித் திரிந்தது கிடையாது. ஆனால் இப்போது இருவரும் பணி காரணமாக காபி ஷாப்பிலும், ரெஸ்டாரெண்டிலும் சந்தித்து பேசிக் கொள்ள நேரிடுகிறது.




நான் வேலை செய்யும் மிர்ச்சி ரேடியோ அலுவலகம் பார்ப்பதற்கு ஐந்து நட்சத்திர ஸ்டைலில் இருக்கும். ஆனால் உள்ளே எல்லாம் பேட்டை ராவடிதான். மிர்ச்சி ஒரு மினி கல்லூரி என்றுகூடச் சொல்லலாம். எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாது இருப்பது போன்ற சூழல். ஆனால் எல்லா வேலையும் குறித்த நேரத்தில் சரியாக நடக்கும். இங்குதான் உண்மையில் நான் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கிறேன். என் குரலுக்கு ரஸிகர் பட்டாளம் அதிகரித்துக் கொண்டே போகிறது. நான் சொல்லும் நல்ல விஷயங்களுக்கு நிறைய வரவேற்பு. ஜொன்னு

வாழ்வின் மறக்க முடியாத நாட்கள் பற்றி பிரபலங்கள் பேசும் பகுதி

'போட்டோ' வெங்கட் ஆகியோர் என்னைவிட மிகப் பெரியவர்கள். ஆனால் எனக்குச் சமமாய் பழகியது மட்டுமல்லாமல், பல கட்டங்களில் நல்ல வழிகாட்டிகளாகவும் இருந்திருக்கிறார்கள்.

விடும் ஆசாமிகளும் உண்டு. அது தப்பென்று சொல்ல மாட்டேன். ஓ.கே. நண்பாஸ்... இன்னும் கொஞ்சம் காலம் கழித்து வாருங்கள்... சில்லென்று இருக்கும் மிர்ச்சி காலத்தைப் பற்றிப் பேசுவோம்.

தொகுப்பு: **ப்ரியன்**



ஜாலி போட்டி - 1




இதனால் அறிவிப்பது என்னவென்றால்...

இந்த இதழில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ள புகைப்படங்களில் இருந்து ஒரு பகுதி மட்டும் இங்கே பெரிதாகக் கொடுக்கப்பட்டிருக்கு படங்கள் இடம்பெற்றுள்ள பக்கங்களையும் அந்தப் பகுதிகளின் பெயர்களையும் கண்டுபிடித்து, அஞ்சலட்டையில் எழுதி அனுப்புங்க. அதோடு கல்கி பற்றி நச்சுன்னு ரெண்டு வரியில ஒரு வாசகம் எழுதியனுப்புங்க. இரண்டாயிரம் ரூபாயை அள்ளுங்க. நிறையப் பேர் சரியான விடையெழுதி இருந்தா 'நச்' வாசக அடிப்படையிலும் குலுக்கல் மூலமும் எட்டுப் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு பகிர்ந்தளிக்கப்படும்.













முடிவு தேதி : 23.10.06.

சீக்கிரம்! சீக்கிரம்!

தமிழகம் முழுக்கவே விளம்பரங்களில் கொடிகட்டிப் பறப்பது துணிக் கடைகள்தான். அதிலும் புடைவைக்குத்தான் முன்னுரிமை. ஐம்பதாயிரம் கலர் புடைவை, ரிவர்சபிள் புடைவை என்று எங்கெங்கும் காணினும் புதுமைகள்தான்...

முன்பெல்லாம் குடும்பத் தலைவிகளிடம் இப்போதுபோல் புடைவைகள் இருந்ததில்லை. அதிகபட்சம் பத்தில் அடங்கி விடும். ஆனால் இன்றைக்கு எல்லாமே தலைகீழ்!

"தென்னிந்தியாவின் பாரம்பரிய உடையான புடைவைக்கு இளைய தலைமுறையினர் மத்தியில் விருப்பம் குறைந்து வருவது போல் தோன்றுவது மாயைதான். இன்றைக்குப் பெண்கள் பெருமளவில் வேலைக்குப் போகிறார்கள். ஜீன்ஸ் மற்றும் சுரிதார் அணிவது பஸ் மற்றும் இரண்டு சக்கர வாகனப் பயணத்துக்குச் சௌகரியமாக உள்ளது'' என்று கூறும் ஆர்.எம்.கே.வி. சிவகுமார்,

"ஆனால் இதை அப்படியே விட்டுவிட நாங்கள் தயாராக இல்லை. பாவாடை தாவணிக்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் முன்பு சின்ட்ரெல்லா பட்டுப் பாவாடையினை அறிமுகப்படுத்தினோம். இப்போது ரிவர்சபிள் பட்டுப் பாவாடையினைக் கொண்டு வந்திருக்கிறோம். எத்தனை நவீன உடைகள் வாங்கினாலும், பெண்கள் புடைவை வாங்குவதை குறைத்துக்கொள்ளவில்லை'' என்கிறார்.

"இன்றைக்கு உலக அளவில் புடைவைக்கு அந்தஸ்து இருக்கிறது. சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற சர்வதேசக் கண்காட்சி ஒன்றில் ஸ்டால் எடுத்தோம். வியாபாரம் எப்படி இருக்கும் என்கிற ஐடியா இல்லாததால் முதல்நாள் சிறிய அளவில்தான் புடைவை ஸ்டாக் வைத்திருந்தோம். ஆனால் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுக்காரர்கள் ஸ்டாலுக்குள் நுழைய, நீண்ட வரிசையில் நிற்கும்படியானது.

இன்றைக்கும்கூட திருமணம் போன்ற விசேஷங்கள் என்றால் பலரும் விரும்பி அணிவது புடைவைகளைத்தான். அதில் கிடைக்கும் மரியாதையும், கௌரவமும் வேறு எதிலும் கிடைக்காது. இதை நான் சொல்லவில்லை, என் கடைக்குக் கல்யாண ஜவுளி வாங்க வரும் வாடிக்கையாளர்கள் பலரும் சொல்கிறார்கள்'' என்கிறார் நல்லி குப்புசாமி செட்டியார்.

'இன்று ஏராளமாக செலவு செய்து நீளமான புடைவை; இத்தனை ஆயிரம் வண்ணங்கள் கொண்ட புடைவை; கின்னஸ் சாதனைப் புடைவை என்றெல்லாம் உருவாக்கி விளம்பரப்படுத்துவதன் நோக்கம் என்ன? இவ்வளவு பணத்தை விளம்பரங்களுக்காகச் செலவு செய்தால், அது வாடிக்கையாளர் தலையில்தானே விழும்' என்று கேள்விகளை அடுக்கினால்,


"எந்த ஒரு ஜவுளிக் கடையும் தங்களது மொத்த பிசினசில் ஒன்றரை அல்லது இரண்டு சதவிகிதத்துக்கு மேல் விளம்பரத்துக்குச் செலவு செய்வது சாத்தியமில்லை. புதிய கடை திறக்கும் போது வேண்டுமானால் விளம்பரச் செலவு சற்று அதிகமாக இருக்கலாம். அதற்கு மேல் செலவு செய்தால் கட்டுப்படியாகாது. வெறும் விளம்பரங்களால் மட்டுமே வாடிக்கையாளர்களைக் கவர்ந்துவிட முடியாது. விளம்பரங்களால் கவரப்பட்டு, மக்கள் முதல்முறை கடைக்கு வரலாம். ஆனால் அவர்களைத் துணி வாங்க வைப்பதும், மீண்டும் கடைக்கு வரவழைப்பதும் தனிக் கலை.

• நல்லி குப்புசாமி



• ஆர்.எம்.கே.வி. சிவகுமார்





கவர் ஸ்டோரி



கடைக்கு வரும் கஸ்டமர்கள் முதலில் கேட்கிற கேள்வி 'என்ன புது டிசைன் வந்திருக்கு?' என்பதுதான். அதுவும் இல்லாமல் இன்று மார்க்கெட்டில் கடும் போட்டி நிலவுகிறது. எனவே, புதுமையாக ஏதாவது செய்துகொண்டே இருக்க வேண்டி இருக்கிறது.

முதலில் ஜோதிகாவை வைத்து ஐம்பதாயிரம் கலர்கொண்ட புடைவையினை அறிமுகப்படுத்தியபோது, உடனடியாக சுமார் நானூறு புடைவைகள்தான் விற்பனையாயின என்றாலும், கடைக்கு வந்த கஸ்டமர்கள் பலர், வாங்காவிட்டாலும் அந்தப் புடைவையை ஒரு முறை பார்க்க வேண்டும் என்று ஆர்வம் காட்டினார்கள். அடுத்து ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம்

புடவை நாகரிகம் தலைகீழ்!


கலர்கள் கொண்ட புடைவையைப் பார்க்க வந்த கஸ்டமர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் என்றால் மிகை இல்லை. வியாபாரத்துக்கு இந்த மாதிரியான ஆர்வத்தை ஏற்படுத்தி ஈர்ப்பது மிக முக்கியம்" என்கிறார் சிவகுமார்.

"எத்தனை ஆயிரம் செலவு செய்து ஜீன்ஸ், சுரிதார் என்று அணிந்து கொண்டாலும் புடைவைக்கு கிடைக்கும் மதிப்பே தனிதான். தலைகீழாக நாகரிகம் மாறினாலும் துணி வகைகளில் நிலைத்து நிற்பது புடைவையாகத்தான் இருக்கும்'' என்று அடித்துச் சொல்கிறார் நல்லி.

- எஸ்.சந்திரமௌலி

மாடல் : **ஜானு ஐயர்**

அட்டை மற்றும் படங்கள் : **ஸ்ரீஹரி**





வட்டமேஜை

சுதா சேஷய்யனின் ஸ்ரீலலிதாவில் பல புரியாத வினாக்களுக்கு பதில் கிடைக்கிறது.

-இரா.முனீஸ்வர சர்மா, கடலூர்

ஒரு மதச்சார்பற்ற அரசின் கடமைகள் என்னவென்பதை பட்டியலிட்டு அற்புதமாக எழுதப்பட்டிருந்தது தலையங்கம்.

- கே.ரெங்கநாதன், திருவாரூர்



ராயல் சல்யூட்!

காந்தி கண்ணதாசன் கருத்துக்கள் எழுத்தாளர் - பதிப்பாளர் உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கியது.

- வயலூர் இராம.பார்த்திபன்



தனித்தன்மையுடன் முன்பு கல்கிக்கு பேட்டி தந்த திருமா, இன்று தி.மு.க. அணிக்குச் சென்றதன் மூலம் தம் தனித்தன்மையை இழந்துவிட்டார்.

- ஆர்.குமாரசுப்பிரமணியன், நாகர்கோவில்

அருள்வாக்கின் 'ஆனந்தத்தின் ரகசியம்' உள்ளத்தை பதப்படுத்தியது.

- வே.ஈஸ்வரன், இராஜபாளையம்

பார்ப்பதற்கு சோளக் கொல்லை பொம்மைபோல் இருந்தாலும், நஷ்டத்தில் இயங்கி வந்த ரயில்வே துறையை லாபத்தில் செலுத்திய லாலுவுக்கு ராயல் சல்யூட்!

- வி.கே.சுப்பிரமணியன், ஈரோடு

'வலுத்தவன் வாழை போடணும்' என்பதை விவசாயி பொன்னுராமன் நிரூபித்துவிட்டார்.

- கே.வி.ராமன், சென்னை

'புதிய பாதை'யைத் தவிர வேறு எந்த கமர்ஷியல் ஹிட்டும் கொடுக்கவில்லை என்றாலும் புதிய பாதையில் நேராகச் செல்லும் பார்த்திபன் புதுமையானவர்தான்.

- சி.கார்த்திகேயன், சாத்தூர்

'முடியாதென்பது மூடத்தனம். முடியுமென்பதே மூலதனம்!' சுப்பிரமணி அய்யர் கலக்கிவிட்டார்.

- எஸ்.ஏ.கேசவன், இனாம்மணியாச்சி

அட்டைப்படம் அபாரம். திருஷ்டி சுத்திப் போடுங்க.

- எஸ்.டீனா, ஸ்ரீரங்கம்

உங்களில் பலருக்கு


எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபி

ஒரு மரபாகும்

EFG ESTATE FRESH Coffee



வெகு காலமாக, புதிதாக தயாரிக்கப்பட்ட தரம் வாய்ந்த காபியை உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில், உங்கள் ஒவ்வொருவருக்கும் நாங்கள் வழங்கி வருவதை நீங்கள் நன்கறிவீர்கள். மறுக்கவியலாத மற்றும் மிக உயர்ந்த தரத்துடன் எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபி உற்பத்தி செய்யப்படுவதால், பன்னெடுங்காலமாக எங்கள் வாடிக்கையாளர்களால் அது பெரிதும் விரும்பப்பட்டு வருகிறது. தரத்தை விரும்பும் எங்கள் வாடிக்கையாளர்களின் வசதிக்காக, அவர்களுக்கு அருகாமையில் உள்ள கடைகளில் எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலம் காலமாக உங்கள் ஆதரவையே எங்கள் நோக்கமாக கொண்டுள்ள நாங்கள், உங்கள் பகுதி மற்றும் தமிழ்நாடு முழுவதிலும் எங்களது தரம் வாய்ந்த தயாரிப்பான எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபியை புதிய எழில்மிகு மற்றும் சிறப்பான பேக்கிங்கில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உங்கள் ஒவ்வொருவரின் நாவின் சுவையை திருப்தி செய்து, நீங்கள் சுவைக்கும் காபியின் மணம் உங்கள் நாவில் நெடுநேரம் நிலைத்திருக்கச் செய்யவே இன்றைக்கு நாங்கள் இங்குள்ளோம். எனவே, உடனே உங்கள் அருகாமையிலுள்ள பலசரக்கு கடைக்குச் சென்று, எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபியை கேட்டு வாங்கிப் பருகி, உங்கள் காபியின் விசேஷ மணம் மற்றும் சுவையை அனுபவித்து மகிழுங்கள்.







"இதுபோன்ற நிறைவில்லை வேறெந்த காபியிலும்"

COFFEE 85% CHICORY 15%



EFG

Estate Foods & Grains

சென்னை மற்றும் தமிழகமெங்கும் வியாபார விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்பு கொள்க: Chennai:9841221796, Rest of Tamilnadu: 9486263342

நவீன மருத்துவ உலகின் தலைநகரமாகிவிட்டது சென்னை. இங்கு கிடைக்காத சிகிச்சைகளே, மருத்துவர்களே இல்லை என்னும் நிலை உருவாகி ரொம்ப நாட்களாகிவிட்டன. சென்னையின் நவீன மருத்துவம், இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமின்றி வெளிநாட்டவருக்கும் அதிகமாகப் பயன்படுகின்றது. குறிப்பாக, நமது அண்டை நாடுகள் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றன. தேசம் கடந்த மருத்துவ சேவை (Medical Tourism) என்று





கூறப்படும் இத்திட்டத்தின் மூலம் பல வெளிநாடுகளுக்கும் சென்று சிகிச்சையளித்து வருகிறார், சென்னை மைலாப்பூர் ஜெயா க்ளினிக்கைச் சேர்ந்த டாக்டர் சாய்ரமணன். அவரிடம் பேசியிலிருந்து...

"தேசம் கடந்த மருத்துவ சேவை என்பது கீழ்மட்டத்தில் அல்லது மருத்துவ சேவை முறையாகக் கிடைக்கப் பெறாத மக்களுக்குச் சிறந்த மருத்துவ வசதிகளை ஏற்படுத்தித் தரும் வழிமுறையாகும்.

எம்.ஆர்.ஐ. ஸ்கேன், லேசர் அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சையில் பயன்படும் 'காமா நைப்' எனும் நுட்பம் என்று பல்வேறு புதுப்புது மருந்து நுட்பங்கள் நாளுக்கு நாள் சென்னை மருத்துவமனைகளில் அறிமுகமாகிக் கொண்டேயிருக்கின்றன. இந்தச் சேவையைப் பெற்றிட இந்தியாவிலிருந்தும், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் நோயாளிகள் வந்து கொண்டே இருக்கிறார்கள்.

இந்த மருத்துவ வசதிகள் அனைத்தும், நம்மைவிட மருத்துவ வசதிகள் குறைந்த நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலத்தீவுகள், நேபாளம், பூடான், பர்மா, மொரீஷியஸ் தீவு, செஷாய் தீவு போன்ற நாடுகளுக்கும் பயன்பட வேண்டுமென எண்ணினோம்.

இதன்படி 'Calaxy Rescue Air Ambulance 999' எனும் நோயாளிகளுக்கான விமானச் சேவை தொடங்கப்பட்டது. இந்த விமானத்தில் மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் வசதிகளைப் போன்ற அனைத்து வசதிகளும் இருக்கும். செயற்கை முறையில் சுவாசிக்கும் கருவி, இருதயத் துடிப்பை சீராக வைக்க உதவும் கருவி, இரத்த அழுத்தத்தைக் கண்டறிய உதவும் கருவி, ஈ.சி.ஜி., நுரையீரலில் சுரக்கும் ஒரு விதத் திரவத்தை கண்டறிய உதவும் 'சக்ஷன்' கருவி என்று பல்வேறு மருத்துவ உபகரணங்களைக் கொண்டதாக இந்த விமானத்தின் அவசர சிகிச்சைப் பிரிவு இருக்கும்.

கிழக்கத்திய நாடுகளில் உள்ள

கடல் கடந்து...





ஆகாயத்தில் ஐ.சி.யூ!

நோயாளிகள், எங்களின் இணையதளம் மூலம் சென்னையில் உள்ள 'கேலக்ஸி ரெஸ்க்யூ ஏர் ஆம்புலன்ஸ் 999'ஐத் தொடர்புகொள்ளலாம்.

இது போன்ற நோயாளிகளுக்கான விமான மருத்துவச் சேவையை US Air Ambulance என்னும் அமெரிக்க நிறுவனம் சில ஆண்டுகளாகச் செய்து வருகின்றது. இதன் சேவையை நோயாளி பெறுவதற்கு ஆகும் செலவை, சென்னையின் 'கேலக்ஸி ரெஸ்க்யூ ஏர் ஆம்புலன்ஸ் 999' சேவையுடன் ஒப்பிட்டால், மூன்றில் ஒரு பங்குதான்.

இந்த விமானத்தில் மருத்துவர்கள், செவிலியர்கள் அடங்கிய குழுவும் செல்கிறது. இந்த மருத்துவக் குழு நோயாளி உள்ள நாட்டுக்குச் சென்று, முறையான மருத்துவப் பரிசோதனைகளைச் செய்து அவரை அழைத்து வரும்.

மிகவும் முற்றிய நிலையில் உள்ள நோயாளிகளுக்கு 'ரெஸ்க்யூ ஏர் ஆம்புலன்ஸ் 999' தேவைப்படுகிறது. அதேசமயத்தில் நோயாளி ஓரளவு தெம்புடன் இருந்தால், பயணிகள் விமானம் மூலம் அவரை அழைத்து வர முடியும். ஆனால் நோயாளியுடன் கண்டிப்பாக மருத்துவ உதவியாளரும் வர வேண்டும். இந்த சிகிச்சையெல்லாம் முடிந்து நோயாளி பத்திரமாக அவர் நாட்டுக்குத் தனி விமானம் மூலம் அனுப்பி வைக்கப்படுவார்.



• டாக்டர் சாய்ரமணன்

ஆரம்ப நாட்களில் நான் இந்திய எரிவாயு மற்றும் எண்ணெய்க் கழகத்தில் மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றி வந்தேன். அந்த நாளில் நடைபெற்ற ஒரு சம்பவம்தான் இந்த தேசம் கடந்த மருத்துவ சேவைக்கு அடிப்படை. எண்ணெய்க் கிடங்கில் பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியர் ஒருவர் எதிர்பாராத விதமாக விபத்தில் சிக்கினார். அவருடைய கை விரல்கள் அனைத்தும் சிதறித் துண்டாயின. இந்தச் சம்பவம் நடந்தபோது மணி இரவு பன்னிரண்டு. நான் உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்று ஊழியரைத் தூக்கிக் கொண்டு, சிதறிய விரல்களை ஒரு திரவத்தில் வைத்துச் சேகரித்துக் கொண்டு ஹெலிகாப்டர் மூலம் மருத்துவமனைக்கு விரைந்தேன். பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலமாக ஊழியரின் துண்டான விரல்களை ஓரளவு பொருத்த முடிந்தது. இந்த விபத்தின் அடிப்படையில் உருவானதுதான் இந்த கேலக்ஸி ரெஸ்க்யூ ஏர் ஆம்புலன்ஸ் 999 எனும் திட்டம்'' என்கிறார் டாக்டர் சாய் ரமணன்.

- ராகவ்குமார்

படம்:

பொள்ளாச்சி சுந்தரம்



கல்கி



2006 அக்டோபர் 22
விய ஐப்பசி 5
மலர் : 65
இதழ் : 12

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்.*


புத்தம் புது வீடு!


“இந்தப் பத்திரிகைக்கு மூன்று நோக்கங்கள் உண்டு - முதல் நோக்கம் தேச நலன்; இரண்டாவது நோக்கம் தேச நலன்; மூன்றாவது நோக்கமும் தேச நலன்தான்!”

- ஆகஸ்ட் 1, 1941 தேதியிட்ட முதல் கல்கி இதழில் இவ்வாறு எழுதினார் - அதன் ஆசிரியரும் ஸ்தாபகர்களுள் ஒருவருமான கல்கி கிருஷ்ணமூர்த்தி. அறுபத்தைந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் அந்த மூன்று நோக்கங்களிலிருந்தும் சிறிதும் மாறாமல் உங்கள் கல்கி இதழ் தொடர்கிறது. நிறுவன ஆசிரியர் வகுத்த நெறியில் இன்னும் ஆழ்ந்து ஈடுபடுவோம் என்று இந்தத் தீபாவளி நன்னாளில் வாசகர்களுக்கு உறுதி அளிக்கிறோம்.

‘மூன்று’ நோக்கங்களை இறுதி இலக்காகக் கொண்டு, ஐந்து பிரிவுகளின் மூலம் வாசகர்களுடன் உறவாட இந்த இதழ் முதல் முற்படுகிறோம் (அந்த ஐந்து பிரிவுகள் எவை என்று சற்று கூர்ந்து பார்த்து நீங்களே புரிந்துகொள்ளுங்களேன்!). அசைக்க முடியாத பழைய அஸ்திவாரத்தின் மீது கட்டிய ஒரு புது வீடாக இந்த வார கல்கி உங்கள் கைகளில்.

இந்தப் புது வீட்டில் உங்களுக்கான இடம் விஸ்தாரமாக இருக்கிறது. வரவேற்கிறோம் - உங்களையும், உங்கள் சீரியஸ் சிந்தனைகளையும் குஷியான அனுபவங்களையும். எழுத்துச் சித்திரங்களால் புது வீட்டை அலங்கரிக்க





அழைக்கிறோம்.

அனைத்து வயதினருக்கும் இந்த வீட்டில் சௌகரியமான மூலைகள் உண்டு. ஒய்யாரமாய்ச் சாய்ந்து உட்காரலாம்; கால் நீட்டிப் படுத்துக் கொள்ளலாம்; உற்சாகம் பீறிட தொம் தொம்மென்று குதிக்கலாம். தனிப்பட்ட ரசனைகளைத் தூண்டி, அனைவரையும் ஈர்க்குமாறு தருவதே எங்கள் நோக்கம்.

உங்கள் வாழ்க்கை அனுபவங்களைப் போல் கல்கி வாசிப்பு அனுபவங்களையும் தாராளமாக எழுதுங்கள். 'தலையங்கம் நன்கு அலசி ஆராய்ந்தது'; 'சினிமா விமர்சனம் சூப்பர்' போன்ற ரெடிமேட் வாசகங்களுக்குப் பென்ஷன் கொடுத்து விட்டு, பேனாவில் 'புது-மை' புகுத்தி ஓட விடுங்களேன், பார்ப்போம்!

யுகபாரதி உழைத்து உழைத்து எழுதிவரும் தொடர் 'நேற்றைய காற்று' திரையுலகையும் இலக்கிய உலகையும் இணைக்கும் இனிய தெம்மாங்கு - சில வாரங்களாகவே ஒலித்து வருகிறது.

'ம்' என்று தலைப்பில் மட்டுமின்றி கதையிலும் விறுவிறு வித்தியாசம் காட்டி வருகிறார் பட்டுக்கோட்டை பிரபாகர்.

டாக்டர் சுதா சேஷய்யன் அண்மையில் தொடங்கி எழுதி வரும் 'ஸ்ரீ லலிதா' தொடருக்குக் கிடைத்து வரும் கரம் குவிந்த வரவேற்பு நெஞ்சை நிறைக்கிறது.

இந்த இதழ் தொடங்கி சுஜாதா 'வாரம் ஒரு பாசுரம்' விவரிக்கிறார் - எளிமையுடன் தமிழ்ப் பாசமும் தவழும் இத்தொடர் அலாதியான அனுபவம்.

இத்தகைய படைப்புகளை கல்கியில் மட்டுமே வாசிக்க முடியும் என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும்.

அடுத்தடுத்த வாரங்களில், இதுபோல் 'கல்கி'யில் மட்டுமே கிடைக்கக்கூடிய அம்சங்கள் புதிது புதிதாகப் பூக்கப் போகின்றன. வேறெங்கும் கிட்டாத சத்தான விஷயங்களுக்கு எட்டு ரூபாய் எட்டாத விலை அல்ல. தொடர்ந்து வாசித்து மகிழுங்கள்; பிறரையும் வாங்கி வாசிக்கச் செய்யுங்கள். தீபாவளி வாழ்த்துக்கள்! ●

இனி இவன் புதியவன்!



மீண்டும் வந்துவிட்டார் ரகுவரன். பல்வேறு பிரச்னைகளில் அடிபட்டு, அனுபவப்பட்டுத் திரும்பியிருக்கிறார். தெளிவும் தீர்க்கமும் பேச்சில் துள்ளி விளையாடுகின்றன. அவருடனான சந்திப்பிலிருந்து...

எப்படி இருக்கிறீர்கள்?

"முன்பைவிட நன்றாகவே இருக்கிறேன். அதற்குக் காரணம் நான் கும்பிடும், சுவாசிக்கும் கடவுள்தான். எத்தனை பிரச்னைகள் எனது வாழ்க்கையில் குறுக்கிட்டாலும் அதை எல்லாம் தாண்டி என்னால் வர முடியும். நான் ஒரு நம்பிக்கை நாயகன்."

நடுவில் சினிமாவை விட்டு விலகியிருந்தது ஏன்?

"எனக்கும் என் மனைவிக்கும் ஏற்பட்ட சின்னச் சின்ன மனஸ்தாபங்கள்தான் என் ஒன்றரை வருட வனவாசத்துக்குக் காரணம். நாங்கள் இருவருமே தொழிலை தெய்வமாக மதிப்பவர்கள் 'அதுதான் பிரச்னையின் மூலகாரணமாகவும் அமைந்துவிட்டது. நான் எப்போதும் ஷூட்டிங் ஷூட்டிங் என்று அலைந்துகொண்டிருக்க, ரோகிணி என்னிடம் எதிர்பார்த்த விஷயங்கள்... அவளிடம் நான் எதிர்பார்த்த விஷயங்கள் என்று மனதளவில் ஒரு சின்ன வேற்றுமை, விரிசல் ஏற்பட்டுவிட்டது. முன்னேறிக் கொண்டிருக்கும் போது எல்லோருக்கும் திடீரென்று ஒரு கெட்ட நேரம் வரும். அப்படித்தான் எனக்கும் வந்ததாக நினைத்துக் கொள்கிறேன்"

இப்போது எல்லா பிரச்னைகளிலிருந்தும் மீண்டு விட்டீர்களா?

"ஆமாம். இப்போது என் மனைவியும் மகனும் என் வீட்டுக்கு வந்து செல்கிறார்கள். ரோகிணி எனக்கு நல்ல நண்பராகி விட்டார். மனசு விட்டு நிறைய விஷயங்களைப் பேசுகிறோம், பழகுகிறோம். இந்த சந்தோஷம் என்னைத் திரும்பவும் சினிமா உலகுக்குக் கொண்டு வந்துவிட்டது. இனி எந்தப் பிரச்னையும் இல்லை."

புதிய வில்லன்கள் எத்தனையோ பேர் வந்துவிட்டார்கள்... உங்களுக்கான

இடம் தமிழ் சினிமாவில் அப்படியே இருக்குமென்று நம்புகிறீர்களா?

"புதிய வில்லன்களைப் பார்க்கும் போது எனக்கு ரொம்ப பரிதாபமாகத் தான் இருக்கிறது. எனக்கென்று இருக்கும் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. அது இன்னும் வெற்றிடமாகத்தான் இருக்கிறது. ரகுவரனுக்கு நிகர் ரகுவரன் தான். பெரிய பெரிய இயக்குனர்களிடம் பணிபுரியும் உதவி இயக்குனர் களின் ஒவ்வொரு கதையிலும் 'ரகுவரன்' என்று பெய ரிட்டு ஒரு கேரக்டர் இருப்பதை நான் கண் கூடாகப் பார்க்கிறேன்."

உங்கள் சொந்த ஊருக்கு இருபத்தி

- மீண்டும் ரகுவரன்

"ரோகிணி இப்போது என் நண்பராகிவிட்டார்!"



மூன்று வருடங்களாக நீங்கள் போகவே இல்லை என்கிறார்களே... உண்மையா?

"ஆம்... என்னுடைய சொந்த ஊர் கோயம்புத்தூர். ஆனால் நான் சினிமா வுக்கு வந்த பிறகு இன்னும் அங்கு செல்ல வில்லை. மிகப்பெரிய வெற்றிக்குப் பிறகுதான் அங்கு போக நினைக்கிறேன். நான் வெற்றி அடைந்து விட்டேன் என்று சொல்ல முடியாது. வெற்றியின் விளிம்பிலிருந்து ஒரு முழு வெற்றியை நோக்கிப் பயணித்துக் கொண் டிருக்கிறேன்."

இப்போது கைவசம் எத்தனைப் படங்கள் இருக்கின்றன?

"இருபது படங்கள் என் கைவசம் இருக்கின்றன என்று சொல்லிப் பெருமை அடித்துக்கொள்ள மாட்டேன். நான்கு படங்கள் இருக்கின்றன. நான்குமே நச்சென்று மக்கள் மனத்தில் ரீச் ஆகும் படங்கள். கண்டிப்பாக முந்தைய ரகுவரனை இனி நீங்கள் பார்க்க மாட்டீர்கள். இனி இவன் புதியவன்!"

- ம.மனோ

படங்கள் : பொள்ளாச்சி சுந்தரம்



அருள்வாக்கு

கோயிலுக்குப் போகிறோம். பிள்ளையார் ஸந்நிதியில் நிற்கிறோம். அப்போதைக்கு ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் மனஸு குவிந்த மாதிரிதான் இருக்கிறது. அப்புறம் கையைக் காலை சொறிந்து கொள்கிறோம். மனஸு பிய்த்துக்கொண்டு கிளம்பி விடுகிறது! அப்படியே எந்தக் குப்பைத்தொட்டிக்கு வேண்டுமானாலும் ஓடட்டும் என்று விட்டுவிடுவதா? அப்படி விட்டுவிடாமல் நல்லதிலேயே, தெய்வ ஸம்பந்தமாகவே அந்த மனஸை இழுத்தால்தானே தேவலை? எப்படி இழுப்பது? பாழும் மனஸுக்கு இந்த விக்நேச்வரமூர்த்தி, தொப்பையும் தொந்தியுமாக இத்தனை அழகாக உட்கார்ந்திருந்துங்கூட, அவரிடமே தொடர்ச்சியாக ஒட்டிக்கொண்டிருக்க முடியவில்லையே! 'பரவாயில்லையப்பா!' என்று இங்கேதான் நம் ஸமயாசார புருஷர்கள் ஆறுதல் தர வருகிறார்கள். 'மனஸின் நேச்சர் அப்படித்தான் அப்பா! அதைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் திருத்தி நிலையாக ஒருமுகப்படுத்த முடியுமப்பா! அதற்கு எதிலும் 'சேஞ்ச்' வேண்டும். தெய்வ ஸம்பந்தமாகவுங்கூட அப்படி வேண்டும். அதையும்தான் நம்முடைய மதம் தருகிறதே! விக்நேச்வரரிடம் ஈடுபாடு குறைகிறதா, அழாதே! இதோ 'சேஞ்சா'க ஸுப்ரஹ்மண்யர் ஸந்நிதி. அப்புறம் இன்னும் பல 'சேஞ்ச்'கள் - அம்மன், ஸ்வாமி, தக்ஷிணாமூர்த்தி, துர்க்கை, நடராஜா, மநுஷ்ய ரூபத்தில் வந்த அறுபத்து மூவர் என்று எல்லாம் ஒன்று சேர்த்துத்தானே கோயில் என்று வைத்திருக்கிறோம்? ஒவ்வொன்றிடமும் ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் மனஸ் ஈடுபட்டுக் கும்பிட்டு விட்டுப் போயேன். மொத்



மனஸ்...

தத்தில் ஒரு கணிசமான நாழி உன் மனசு தெய்வ ஸம்பந்தமாகவே ஈடுபட்டிருக்கும்' என்கிறார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

பேர் சொல்லும் பிள்ளை!

கபிலன் வைரமுத்து

அது வளமானதொரு கிராமம். இளமை குறையாத புல்வெளிகள். மௌனமாக ஒரு நதி. அழகான வீதிகள். அளவான வீடுகள். நிறைய குழந்தைகள்.


முனியப்பனின் வீடு பரபரப்பாக இருந்தது. 'ஒலகத்த ஆளுவானப்பா ஒன் மகன்' உற்சாகமாய் ஜோசியம் சொன்னான் முனியப்பனின் நண்பன். அன்றுதான் முனியப்பனுக்கும் அவன் மனைவி லக்ஷ்மிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்திருந்தது. உறவினர்களுக்கெல்லாம் ஒரே குதூகலம்!

அன்று வந்தவர்களையெல்லாம் கவனித்துவிட்டு படுக்கப் போவதற்கு இரவு மணி பதினொன்று ஆகிவிட்டது. தம் மனைவியின் அருகே சென்று சற்று நேரம் உட்கார்ந்திருந்தான் முனியப்பன். அப்பொழுது லக்ஷ்மி, "ஏங்க... நம்ம குழந்தைக்குப் பேரு..." என்று பயந்து பயந்து ஒரு கேள்வி எழுப்பினாள். அடுத்த நிமிடம் தேநீர்க் கோப்பை விசிறியடிக்கப்பட்டது.

"எத்தன தடவ சொல்லியிருக்கேன்... என் விருப்பத்துக்கு மாறா ஏதாவது நடந்தது... தொலச்சிடுவேன், ஜாக்கிரத..." அவன் எழுந்த வேகத்தில் தலைக்கு மேல் சுற்றிக்கொண்டிருந்த கொசுக்களுக்கு அதிர்ச்சியில் மாரடைப்பு வந்திருக்கும். லக்ஷ்மி கண்களை மூடிக்கொண்டு அழுதுகொண்டிருந்தாள். அதற்குக் காரணம் இருக்கிறது.

முனியப்பனுக்கு ஒரு கொள்கை. தம்முடைய குழந்தைக்கு யாரும் பெயர் சூட்டக் கூடாது. அந்தக் குழந்தையே தமக்குப் பெயர் சூட்டிக்கொள்ள வேண்டும். 'உனக்குப் பெயர் சூட்டப்படவில்லை' என்றும் 'பத்து வயதுக்குள் உனக்கான பெயரை நீயே தேர்வுசெய்துகொள்ள வேண்டும்' என்று நான்கு வயதில் அந்தக் குழந்தையிடம் தெரிவிக்கப்பட வேண்டும். பத்து வயதில் குழந்தை தேர்வு செய்யும் பெயர்தான் அதற்குச் சூட்டப்பட வேண்டும். இதுதான் அந்தக் கொள்கை. எந்தத் தாய்தான் இதற்கு அழாமல் இருப்பாள். முனியப்பனுக்கு அவனுடைய சொந்தப் பெயர் மீது வெறுப்பு. ஏதோ ஒரு பெயர் சூட்டப்பட்டு, எங்கே தம்முடைய குழந்தைகளும் இப்படித் தங்கள் பெயர்கள் மீது வெறுப்பை வளர்த்துக்கொள்வார்களோ என்று எண்ணி இந்தக் கொள்கையை உருவாக்கிக்கொண்டான்.


லக்ஷ்மி இதை மற்ற உறவினர்களிடம் சொன்னபோது, "இது என்ன பைத்தியக்காரத்தனம்!" என்று அவர்கள் ஆச்சரியப்பட்டாலும் இதைப்பற்றி நேரடியாக முனியப்பனிடம் கேட்டபோது, அவனுடைய கொள்கைப் பிடிப்பு மற்றவர்களை வாயடைக்கும்படி செய்தது. பெரியவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு முடிவுக்கு வந்தான். "இந்தக் குழந்தைத் தனக்குத்தானே பெயர் சூட்டிக்கொள்ளும். ஆனால் அந்தப் பெயர் சூட்டப்படும் வரை தன் தாத்தா பெயரால் குழந்தையை அழைக்கலாம்". இதற்கு வேறு வழியில்லாமல் எல்லோரும் சம்மதித்தார்கள். காளியப்பன் என்பது தாத்தா பெயர். அன்று முதல் குழந்தையை "காளி...காளி" என்று அழைக்கத் தொடங்கினான் லக்ஷ்மி. "யேய்... நிறுத்துடி... ரொம்பக்



சிறுகதை

"கூப்பிடாத... அதுதான் அவன் பேருன்னு பதிவாய்ர போவுது..." முனியப்பன் அடிக்கடி மூக்கை நுழைத்தான். தலையில் அடித்துக்கொண்டாள் லக்ஷ்மி. முனியப்பன் அருகில் இருக்கும்போது குழந்தையை யாரும் பெயர் சொல்லி அழைக்கத் தயங்கினர்.

குழந்தை வளரத் தொடங்கியது. பல சமயங்களில் முனியப்பன் "காளியப்பன்" என்று குழந்தையை அழைத்துப் பார்த்திருக்கிறான், குழந்தை திரும்பிப் பார்க்காமல் இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க.



நான்கு வயதாகிவிட்டது. அந்தப் பெயர் சூட்டப்படாத குழந்தைக்கு. ஒருநாள் லக்ஷ்மியும் முனியப்பனும் குழந்தையை அழைத்து விஷயத்தைச் சொல்லிவிடுவது என்று முடிவு செய்தனர். முனியப்பன் தொடங்கினான்... "டேய்... கண்ணு... உனக்கு நாங்க பேர் வைக்கல..."

குழந்தை விழித்தது.

லக்ஷ்மி விளக்கம் கொடுக்க முயன்றாள். இப்படி நான்கு வயதில் அவனுக்கு விளக்கத் தொடங்கி, ஒரு வருட காலம் சிரமப்பட்டு, சிறுவனுடைய ஐந்தாவது வயதில்தான் புரியவைக்க முடிந்தது அவர்களால். இதைப் புரிந்துகொண்டதும் அவன் உடனே ஓடிப்போய் முனியப்பனின் காதைத் திருகி, "ஏம்பா... எனக்கு நீ பேர் வைக்கல... உன் பேச்சு டூ...போ..." என்று கோபித்துக்கொண்டான். முனியப்பன் எதுவும் பேசவில்லை.

அன்று முதல் சிறுவனின் பெயர் தேடல் தொடங்கியது. ஏற்கெனவே ஐந்து வயது ஆகிவிட்ட நிலையில் இன்னும் ஐந்து வருடங்களில் தாம் ஒரு பெயரைச் சூட்டிக்கொள்ள வேண்டும் என்பதை மனத்தில் நன்கு பதிவு செய்துகொண்டான்.

பார்ப்பவர்களிடமெல்லாம் பெயர்களைக் கேட்டுக் கொண்டிருந்தான் சிறுவன், தமக்குப் பிடித்த பெயர்களை ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளத் தொடங்கினான்.

அம்புலிமாமா, சிந்துபாத், ஹீமேன் போன்ற பெயர்கள் இடம் பெற்றன.

லக்ஷ்மியும் சிறு

வனும் ஒருநாள் தோட்டத்தின் பக்கம் நின்றிருந்தபோது ஒரு பட்டாம்பூச்சி பறந்துகொண்டிருக்க, "அம்மா... அது பேர் என்னம்மா?" என்றான் சிறுவன். எங்கே இந்தப் பெயர் அவனுக்குப் பிடித்து விடப் போகிறதோ என்றெண்ணி, "அது பேர் இராமன்" என்றாள்.

அப்பொழுது தோட்டத்துக்குள் நுழைந்த முனியப்பன், லக்ஷ்மியை அதட்டி, "அதுபேர் பட்டாம்பூச்சிடா செல்லம்" என்று தர்மம் காத்தான். தம் கணவரைத் திருத்த ஆண்டவனாலும் முடியாது என்று நினைத்துக் கொண்டாள் லக்ஷ்மி. இதேபோல் 'மழை', 'நதி' என்ற பெயர்களும் அவன் பட்டியலில் இடம்பெறத் தொடங்கின. தாம் பெயர்களைக் குறித்துக் கொள்ளும் புத்தகத்தை சிறுவன் யாரிடமும் காட்டவில்லை.

"தாத்தா, இந்த சீரியல் எப்ப ஆரம்பமாச்சு?"

"எனக்குத் தெரியாது. அடுத்த ரூம்ல என்னோட தாத்தா இருக்கார் பாரு. அவரைக் கேளு, கரெக்டா சொல்லிடுவாரு!"

- அனிதா ராமச்சந்திரன்



ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்த இந்தப் பயணம் முடிவுக்கு வந்தது. அடுத்த வாரம் சிறுவனின் பத்தாவது பிறந்தநாள்.

"உன் பர்த்டே அன்னிக்கு இதுவரைக்கும் நீ குறிச்சிருக்குற பேர்களை சீட்டு குலுக்கிப் போட்டு அதுல ஒரு பேர உனக்கு செலக்ட் பண்ணுவோம். சரியா?" சிறுவனிடம் திட்டத்தை வெளியிட்டான் முனியப்பன். "ஓ.கே..." என்று உடன்பட்டான் சிறுவன்.

எப்படா வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த நாள் வந்துவிட்டது. கல்யாணம் நடப்பது போல் வீட்டில் உற்சாகம். உறவினர்கள் திரண்டு வந்திருந்தனர். வீடு முழுக்க பலூன்கள் கட்டப்பட்டிருந்தன. சிறுவனின் நண்பர்கள் பலரும் அங்கே கூடியிருந்தனர். கேக் வெட்டுவதற்குத் தயாரானான் சிறுவன். வந்திருந்த கூட்டம் வட்டமிட்டு நின்றது. இந்த நேரத்தில் எழுதி மடித்துச் சுருட்டிய காகிதங்களோடு வந்தான் முனியப்பன்.

"என் ரொம்பநாள் ஆசை இன்னிக்கு நிறைவேறுது. கேக் வெட்றதுக்கு முன்னாடி, இந்தச் சீட்டுகளைக் குலுக்கிப் போடறேன். என் மகனே ஒரு சீட்டு எடுக்கட்டும். அதுல வர்ற பேருதான் இனி என் மகன் பேரு..." என்று அறிக்கைவிட்டுத் தொடங்கினான். சீட்டு குலுக்கிப் போடப்பட்டது. காகிதங்கள் மேஜையில் உருண்டோடி விழுந்தன. சிறுவன் தம் பிறந்தநாள் கேக்கின் மீது விழுந்திருந்த காகிதத்தை எடுத்தான்; பிரித்தான். அவ்வளவுதான்... வீடே அதிரும்படி சிரித்துவிட்டு, "யேய்... நா மகாத்மா... நா மகாத்மா..." என்று துள்ளிக் குதித்தான். தம் பாடப் புத்தகத்தில் இடம்பெற்றிருந்த மகாத்மா காந்தியடிகளின் பெயரில் மகாத்மா என்ற அடைமொழியை மட்டும் அவன் குறித்து வைத்திருக்கிறான் என்பது அனைவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

மகாத்மாவின் நண்பர்கள் கைதட்டினார்கள். கேக் வெட்டி விழா தொடங்கியது.

அந்த விழாவில் கலந்துகொண்ட சிறுவர்கள் ஒவ்வொருவரும் வீடு திரும்பியதும், தங்கள் பெற்றோர்களிடம் "நீ ஏன் எனக்குப் பேர் வச்ச... ஒத்துக்க முடியாது... அடுத்த பர்த்டேக்கு நாம சீட்டு குலுக்கிப் போடலாம்" என்று புலம்பத் தொடங்கிவிட்டனர்.

அந்தக் கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிலும் சிறுவர்கள் இதை மிகப்பெரிய பிரச்னையாக எழுப்பிக்கொண்டிருந்தார்கள். ○

''எல்லோராலும் சாதிக்க முடியும். தடையாக இருப்பது தன்னம்பிக்கை இல்லாமைதான்'' என்கிறார் கீதா சங்கர். 'சென்டர் ஃபார் கம்யூனிகேஷன் எக்ஸலென்ஸ்' நிறுவனர். 'எல்லோருக்கும் முன்னேற்றம்' என்பதை லட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இவர், இந்திய வேலையாட்களைத் தேடி வரும் அந்நிய நாட்டு கம்பெனிகளில் பணிக்குச் செல்லத் தேவைப்படும் அத்தனை விஷயங்களையும் தமது நிறுவனம் மூலம் கற்றுத் தருகிறார். 25,000 நபர்களுக்கு மேல் தனிப்பட்ட முறையில் வேலை வாய்ப்புக்கான கவுன்சிலிங் கொடுத்திருக்கிறார். இனி அவரது தன்னம்பிக்கை டிப்ஸ்...

நோ நெகட்டிவ்!

நமது குழந்தைகளை பாசிட்டிவ் எண்ணங்கள் கொண்டவர்களாக வளர்த்தெடுக்க வேண்டியது அவசியம். 'அங்கே போகாதே! இதைத் தொடாதே! இது ஆபத்து! அது அசிங்கம்!' என்கிற நெகட்டிவ் எண்ணங்களிலிருந்து முற்றாக விடுபட வேண்டும்.

அவர்களைத் தொட்டிச் செடியாக வளர்க்காமல் தானாகவே இந்தச் சமூகத்தில் பழக, கற்றுக்கொள்ள, அணுகுமுறை பெறுவதற்கான சுதந்தரத்தைத் தர வேண்டும்.

இன்றைக்கு ஒரு கல்லூரி மாணவன், தம்மையும் தமது நண்பர்களையும் படிக்கும் கல்லூரியையுமே உலகமாக எண்ணி வாழ்கிறான். அந்தக் காலகட்டம் முடிந்து யதார்த்த சமூகச் சூழலுக்கு வரும்போது, அவனால் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. சமூகத்துடனான தொடர்புகொள்ளல் என்பது பிரமிப்பாக, தடுமாற்றமாக, அச்சம் தருவதாக அவனுக்கு அமைந்துவிடுகிறது.

உள்ளநீ

• கீதா சங்கர்



இந்தத் தயக்கம் நேர்முகத் தேர்வு, அலுவலகம், தொழில் துறை என்று எல்லா இடத்திலும் அவனுக்குச் சங்கடத்தை ஏற்படுத்துகிறது. எல்லாம் எதனால்? இந்த நெகட்டிவ் பிரச்னையால். ஆக, பாசிட்டிவுக்கு மாறுவோம்.

உன்னை நீ அறிவாய்!

தத்துவ மேதை சாக்ரடீசின் பொன்மொழி இது. தன்னையறிதல் என்பது மிகவும் முக்கியம். நம்முடைய பலம் என்ன, எத்தகைய திறமைகள் நம்முள் ஒளிந்து கிடக்கின்றன என்பதைத் தெளிவாகக் கண்டுபிடித்து, அந்தத் திறனை பட்டை தீட்டினால்

ஒளிவிடக்கூடிய தீபங்களாய் வாழ்வில் நாம் திகழ முடியும். நம் நாட்டில் அறிவு ஜீவிதத்துக்கும், புத்திசாலித்தனத்துக்கும் பஞ்சம் இல்லை. ஆனால், அதை வெளிக்கொண்டு வருவதில்தான் சிக்கல், நம்மில் பலருக்கும்.

இன்றே... நன்றே!

எல்லோருமே ரிஸ்க் எடுக்க வேண்டும். அதிலிருந்துதான் வெற்றி, தோல்வியின் ஆரம்பமே அமைகிறது. நேற்று என்ன செய்தோம், ஐந்து வருடங்களாய் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பது விஷயம் இல்லை. இன்று என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியம். ஒரு புத்தகம் படிப்பதாக, ஒரு கவிதை எழுதுவதாக, ஒரு ரெசிபி கற்றுக்

அஜய்!

கொள்வதாக... எதுவாகவும் இருக்கலாம். ஆனால் இன்று செய்தோமா; அதை நன்று செய்தோமா என்பதே அவசியம்.

புதிதாய்ப் பிறப்போம்!

சுயமாய் எதுவும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை வளர வேண்டும். செயலில், எண்ணத்தில், சுதந்தர மனப்போக்கு அவசியம். பெற்றோரை, உறவினர்களை, அலுவலகத்தை, அரசாங்கத்தைக் குறை கூறித் தப்பித்தலை விட்டொழிக்க வேண்டும்.

மற்றவர்களைக் காரணம் காட்டி நம் புத்தியை நாமே கைது செய்து வைத்திருப்பதை உணர வேண்டும். ஐந்து வருடங்கள் முன்பு என்ன பேசினோமோ, அதே பேச்சுத்தான், அதே நினைப்புத்தான் என்றிருப்பது தேக்கத்தையே உருவாக்கும். 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்ற பாரதியின் வார்த்தைகள் அர்த்தம் பொதிந்தவை.

வலை விரிக்கும் வெற்றி!

உலகத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்து கிருஷ்ணரிடம் கூறிய துரியோதனனுக்கு எல்லாமே கெட்டவையாகத் தோன்றவும், தருமனுக்கு எல்லாமே நல்லவையாகத் தோன்றவும் காரணம் பார்வைகள்தான். நாம் பார்க்கும் விதத்தை வைத்தே நன்மையும் தீமையும்.

நமது கோணம் மட்டுமே சரி என்று எண்ணாமல், திறந்த மனதுடன் எதையும் அணுகினால் வெற்றி நமக்கு வலை விரிக்கும். மற்றவர்களின் பலத்தை நாம் ஒருபோதும் சுட்டிக் காட்டுவதில்லை; பாராட்டுவதில்லை. அதேசமயம் அவரது பலவீனத்தைக் குறிவைத்துத் தாக்குகிறோம்; சாதகமாக்கிக் கொள்ள முயல்கிறோம். ஒரு பலவீனத்திலிருந்து பெறப்படுவது எப்படி பலமானதாய் இருக்கும் என்று நாம் ஒருபோதும் சிந்திப்பதே இல்லை!

இஷ்டப்படு!

எந்த ஒரு செயலையும் ஒரு கட்டாயத்தின் பேரில் செய்தால், அதன் விளைவு பூரணமாக இருக்க வாய்ப்பில்லை. ஆர்வத்தின் அடிப்படையில் அமையுமானால், மனப்பூர்வமாக இருக்குமானால் வேலை முழுமையான முடிவைத் தரும். 'கஷ்டப்பட்டு செய்யாதே; இஷ்டப்பட்டு செய்' என்று சும்மா யாரும் சொல்லவில்லை.

எல்லாவிதமான திறமைகளும், ஜீவிதங்களும் நம்முள் ஒளிந்து கிடக்கின்றன. இல்லாததே இல்லை. நடமாடும் ஒவ்வொருமே காந்திதான், புத்தர்தான், ஏசுதான். என்றாலும் உண்டு, உறங்கி, நடக்கும் செயல்களுக்கான குறைந்த சக்தியிலேயே நாம் காலம் கடத்துகிறோம்.

தொகுப்பு: **ஆதித்யா**

படம்: **பொள்ளாச்சி சுந்தரம்**

Dr. ஜோக்ஸ்



"உங்களுக்கு பிளட்பிரஷர், தலைவலி, மயக்கம், காஸ் கோளாறு, கை கால் குடைச்சல் எல்லாமே இருக்கு. பெயர் சொல்லுங்க, மருந்து எழுதிக் கொடுக்கறேன்."

"ஆரோக்கியசாமி டாக்டர்..."

- என்.எஸ்.பாலசுப்பிரமணியன்



"டாக்டர் சொன்னார், என் காது ட்ரம்ல ஓட்டை இருக்காம்!"

"வாய்தான் ஓட்டைன்னு நினைச்சேன், காதுமா?"


- வெ.சீதாராமன்



"பேஷண்ட்டோட ப்ளட் டெஸ்ட், சுகர் ரிப்போர்ட், ஈசிஜி எல்லாம் பார்த்தப்புறமும், டாக்டர் ஏன் ஆபரேஷனை ஆரம்பிக்க மாட்டேங்கறார்?"

"பேங்க் பாஸ் புக்கையும் பார்க்கணுமாம்."

- சாயம் வெ.ராஜாராமன்



"குழந்தைக்கு ஜுரம், அதான் அவனைப் பாடித் தூங்க வைக்கறேன்!"

"பாவம், அவனுக்கு ஒரே நேரத்துல ரெண்டு அவஸ்தையா?"

- வெ.சீதாராமன்

தியான சுலோகம்

ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமத்தின் தியான சுலோகம் ஆரம்பிக்கிறபோதே சிந்தூர அருண விக்ரஹாம் என்கிறது.

த்ரிநயனாம் என்பது தியான சுலோகத்தின் அடுத்த வார்த்தை - மூன்று கண்களை உடையவள் என்பது அப்புறம்தான் வருகிறது. தாரா நாயக சேகராம் - நட்சத்திரங்களுக்கெல்லாம் நாயகனாக (தாரா நாயகன்) இருக்கக்கூடிய நிலவை தன் திருமுடியில் தரித்தவள் - இவ்வாறு பல விதமான வர்ணனைகளும் அப்புறம்தான் வருகின்றன.

முதலில் சொல்லப்படுவது சிந்தூர வர்ணத்தவள் என்பதுதான். சிந்தூர வர்ணத்தினளாக இருக்கக் கூடியவள் என்பதற்கு என்ன தனிச் சிறப்பு...?

பரமேசுவரியை வர்ணிக்கிறபோது, எத்தனையோ சுவரூபங்கள் உண்டு. மூர்த்

கருணை ஸ்வரூபம்

சுதா சேஷய்யன்

தங்கள் என்று சொல்லுவோம். சிவபெருமானுக்கு எத்தனையோ பல மூர்த்தங்கள் - மஹேசுவர மூர்த்தம், சிவலிங்க மூர்த்தம், நடராஜ மூர்த்தம் - ஒவ்வொரு மூர்த்தமும் வித்தியாசமாக இருக்கும். ஒவ்வொன்றுக்கும் ஒரு வடிவம் உண்டு. அதே மாதிரி அம்பிகையை வர்ணிக்கிறபோது அவளுக்கும் பலப் பல மூர்த்தங்கள்.

கரியவள்

இந்த மூர்த்தங்களிலேயே மலை மகள் என்று சொல்கிறபோது, ஹிமவான் மகள் என்று சொல்கிறபோது உமா தேவி என்கிற தகுதியில் கரிய திருமேனி படைத்தவள்; தாக்ஷாயணி என்று சொல்கிறபோது கரிய திருமேனி படைத்தவள். ஆனால், சில மூர்த்தங்களில் மட்டும் அம்பிகை கரிய திருமேனி படைத்தவள் அல்ல; செம்மையான திருமேனி படைத்தவள். எந்தத் திருமேனி என்று கேட்டால், ராஜராஜேஸ்வரியாக இருக்கிறபோது செம்மை வர்ணம் கொண்டவள்; காமாக்ஷியாக இருக்கிறபோது செம்மையான திருமேனி படைத்தவள். ராஜராஜேஸ்வரி, காமாக்ஷி, லலிதாம்பிகை, திரிபுரசுந்தரி - இந்த நான்கும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான மூர்த்தங்கள் என்பது மட்டும் அல்ல. இந்த நான்கிலேயும் அம்பிகை செம்மையான திருமேனி படைத்தவள்.

மற்ற சமயங்களில் கரு நிறமாக இருக்கக் கூடியவள் சில தோற்றங்களில் மட்டும் ஏன் சிவப்புத் திருமேனியுடன் இருக்கிறாள் என்றால், காரணத்தை சங்கர பகவத்பாதர் சொல்லுவார்: ஜகத் த்ராதும் கருணா; க சித் அருணா.

ஜகத்தைக் காக்க வந்தவள், இந்த உலகைக் காப்பாற்றுவதற்காக அந்தக் கருணையை தன்னுள் ஏற்றிக் கொண்டவள், அருண ஸ்வரூபமாகத் தன்னை மாற்றிக் கொண்டாள்.

சாதாரணமாக, தோற்றத்துக்கான நிறம் என்பது சிவப்பு. ஏதாவது ஒன்று தோன்றியது. புதிதாக உருவாயிற்று என்று சொல்கிறபோது - உலகில் எங்கு வேண்டுமானாலும் பார்க்கலாம் - ஸநாதன தர்மத்தில் மட்டுமல்ல - தி கலர் அஃப் ஜெனஸிஸ் - உதயத்தின் நிறம் - அருண வர்ணம்தான்.

உலகின் பழைய நாகரிகங்களில்கூட, எந்த நாகரிகத்தை எடுத்தாலும், தி கலர்

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி,
திருவானைக்கோயில்

ஸ்ரீ லலிதா-5





அஃப் ஜெனஸிஸ் - தோற்றத்தின் நிறம் - என்பது சிவப்புதான்.

இதைக் காட்டுவதற்காகத்தான் சிருஷ்டி கர்த்தாவான பிரம்மா எங்கு தோன்றினார் என்றால் மஹாவிஷ்ணுவின் நாபிக் கமலத்தில் - அந்த கமலம் என்ன நிறம்...? இலேசான சிவப்பு - வெளிர் சிவப்பு நிறம். நல்ல செக்கச் செவேல் என்று இராது! ரொம்ப சிவப்பாக, அதித சிவப்பாக இருந்ததென்றால், அது தோற்றத்துக்கான நிறம் அல்ல. அது முழுக்க முழுக்க ராஜஸம் குடி கொண்டுவிட்ட நிறம். அப்படிப்பட்ட முழுமையான ராஜஸம் இருக்கிறபோது, மென்மையான தொடக்கம் இருக்க முடியாது; அது கொஞ்சம் உக்கிரமானது. அதே சமயத்தில் வெளிர் சிவப்பு - தாமரைப் பூ சிவப்பு என்பது தோற்றத்துக்கான நிறம். இதை இயற்கையிலே பார்க்கலாம், காலையில் சூரியன் உதயமாகிற போது, இலேசான சிவப்பு வரும். அந்த இலேசான சிவப்பு தோன்றிய பிறகுதான் சூரியன் உதயமாகும். ஆகவே, தி கலர் அஃப் ஜெனிஸிஸ் இந்த வெளிர் சிவப்பு தான்.

அம்பிகை என்ன பண்ணினாளாம், 'ஆன்மாக்கள் எல்லோரும் உலகில் பிறக்க வேண்டும். ஆன்மாக்கள் உலகில் தோன்றினால்தான் உலகம் தோன்றும்; உலகம் படைக்கப்படும், உலகில் ஆன்மாக்களின் வாழ்க்கை நடைபெறும்' என்று செயல்பட்டாளாம்.

சரி, ஏன் படைக்கப்பட வேண்டும்? அப்படிப் படைக்கப்பட்டால்தான், பூமியில் வாழ்ந்தால்தான் பூமி வாழ்க்கையை வாழ்ந்து வாழ்ந்து, அந்த வாழ்க்கைச் சக்கரத்தில் கடைசியில் பரமாத்மாவை இந்த ஆன்மாக்கள் அடைய முடியும். ஆகவே, அதற்கு முதல் படியாகத் தன்னைத் தானே மாற்றிக் கொள்கிறாள் அம்பாள்.

பரமாத்மா என்பது ஒன்றுதான். லலிதா ஸஹஸ்ரநாமத்துக்கு இன்னொருத்தர் ரொம்ப அழகான விளக்கம் கொடுத்தார். அவரும் மிகப் பெரிய அம்பாள் உபாஸகர். அத்வைதத்தினுடைய எல்லையில் நின்றவர். அப்பய்ய தீக்ஷிதர். அப்பய்ய தீக்ஷிதரும் லலிதா சஹஸ்ர நாமத்தைப் பற்றி பல விஷயங்களைத் தமது கிரந்தங்களில் சொல்வார். அப்படிச் சொல்கிறபோது, "பரமாத்மா என்கிறதுக்கு 'ஜெண்டர்' சொல்ல முடியுமா என்று கேட்டால், முடியாது" என்பார். ஆண் அல்ல; பெண்ணும் அல்ல; அலியும் அல்ல.. ஆனால் இது என்ன பண்ணிற்றாம் இந்த பரமாத்மா... உலகத்தைப் படைக்க வேண்டும் என்பதற்காக தர்மம் - தர்மி என்று இரண்டாகப் பிரிந்ததாம்.

தர்மம் என்பது தர்மத்தை நிலை நிறுத்துவதற்காக ஏற்பட்ட அறச் செய்கை. தர்மி என்பது அதை நடத்துவதற்காக வரக்கூடிய வடிவம். இதுதான் வித்தியாசம் - தர்மம் என்பது காரியம் - செயல். அந்த தர்மத்தைச் செய்வதற்காக எது வடிவம் எடுக்கிறதோ அது தர்மி.

அப்பய்ய தீக்ஷிதர் சொல்கிறார் : 'தர்மம் - தர்மி இத' - இது இரண்டாகப் பிரிந்தது... என்றார்

ராஜ ராஜேஸ்வரி, காமாக்ஷி லலிதாம்பிகை திரிபுரசுந்தரி - இந்த நான்கு தோற்றங்களிலும் அம்பிகை செம்மையான திருமேனி படைத்தவள்

தர்மம் - தர்மி

அப்படி தர்மியாகப் பிரிந்து நின்றதும், அதே பரமாத்மா ஒரு வடிவம் ஆணாகவும், ஒருவடிவம் பெண்ணாகவும் பிரிந்தது. (தர்மியே இப்படி இரு வடிவங்களாகப் பிரிந்தது) அப்படி ஆணாகப் பிரிந்தது உலகத்தை ரக்ஷிப்பதற்காக விஷ்ணு ஸ்வரூபமாக மாறியது. பெண்ணாக நின்றது பரமாத்மாவின் பட்டமகிஷியாக பரமேஸ்வரியாகத் தன்னை மாற்றிக் கொண்டது.

பரமாத்மா என்றால் பரமாத்மாதான் சாக்ஷாத் பரமாத்மா! அந்த பரமாத்மாவுக்கு ஆண்பால் பெண்பால் எதுவும்

கிடையாது. நிர்குண பிரும்மமாக இருக்கக் கூடிய பரமாத்மா. என்ன வடிவம்...? தெரியாது! கெமிஸ்ட்ரியில் ஏதாவது ஒரு பொருளை வர்ணிப்பதற்குச் சொல்வோம். 'கலர்லெஸ், டேஸ்ட்லெஸ்,



ஓடர்லெஸ்' - ஒன்றுமற்றது என்று! குணமற்ற, நிறமற்ற என்று சொல்வது போல்தான் நிர்குண பிரும்மத்துக்கு எவ்வித வடிவமும் நிறமும் குணமும் கிடையாது. வடிவமே கிடையாது என்று சொன்ன பிறகு எந்தக் குணத்தையும் கொண்டுபோய்ப் பொருத்த முடியாது. அப்படி இருப்பதுதான் பரமாத்மா. எல்லா இடங்களிலும் சர்வ வியாபகமாக இருக்கக்கூடிய பரமாத்மா. ஆனால், அந்த பரமாத்மா, இவ்வுலகத்தைப் படைக்க வேண்டுமென்பதற்காக தன்னை ஒரு சின்ன வடிவத்திற்குள் சுருக்கிக் கொண்டால்தான் இந்த உலகத்தைப் படைக்க முடியும். அதற்காக பரமாத்மா தன்னையே ஒரு பெண் வடிவமாக மாற்றிக் கொண்டது. அப்படி மாற்றிக் கொண்ட வடிவம் தான் அம்பிகை பரமேஸ்வரி. ஆகவேதான் தோற்றத்துக்கான செவ்வடிவிலே அவள் வருகிறாள். அந்த வடிவில் வருகிறபோது அவள் கருமை நிறமாக வர முடியாது. காரணம் கருமை தாமஸத்துக்கான நிறம். தோற்றத்துக்கான நிறத்தில் வரவேண்டும் என்பதனாலே 'ஜகத்ராதும் கருணா க சித் அருணா' - இந்தப் பூமியின் மீது வைத்த கருணையினால் அம்பிகை பரமேஸ்வரி அருண நிறத்தவளாக வந்தாள். அப்படி வந்தவள்தான் லலிதாம்பிகை. அதனால் தான் தியான ச்லோகம் ஆரம்பிக்கிறபோதே இந்த நிறத்தைப் பெருமைப் படுத்திச் சொல்கிறது.

அப்படி படைபுக்காக, படைக்க வேண்டும் என்பதற்காக வடிவமெடுத்தவளை, பாராயணம் செய்யும்போது முதலில் எந்த நாமத்தில் தொடங்கினார்கள் என்றால், ஸ்ரீ மாதா என்று தொடங்கினார்கள்.

(தொடரும்)

"நான் ஒரு பப்பாளிப் பிரியன்!"

இன்றைக்கு யாரைப் பார்த்தாலும் தும்மல், ஜலதோஷம்... எங்கு திரும்பினாலும் டையாபடீஸ், பி.பி... என்றாலும் சில பேர் மட்டும் கனகச்சிதமாகத் தங்களைக் காத்துக் கொள்வார்கள். குறிப்பாக, நமது வி.ஐ.பி.க்கள். எப்படி, என்ன செய்கிறார்கள் என்றே தெரியாது... ஆனால் உடம்பை ஃபிட்டாக வைத்திருப்பார்கள். அந்த ரகசியத்தைத் தெரிந்து கொள்வோமா?

''எனது ஒவ்வொரு காலையும் ஒரு செம்பு இளம் வெந்நீருடன் ஆரம்பமாகிறது'' என்கிறார் நக்கீரன் கோபால். இந்தப் பிரபல பத்திரிகையாளரின் தினசரி நடவடிக்கைகள் என்னென்ன?


''காலைக் கடன்கள் முடிந்த பிறகு 20 நிமிடங்கள் சிறிதளவு நல்லெண்ணையை வாயில் வைத்துக் கொப்புளித்தபடி இருப்பேன். இவ்வாறு ஆயில்புல்லிங் செய்தபடியே 'ட்ரெட் மெஷின்' எனப்படும் நடை இயந்திரத்தில் 30 - 40 நிமிடங்கள் நடைப்பயிற்சி.

அடுத்து, நான் ஒரு ஹாக்கி ப்ளேயர் என்பதால் அரைமணி நேரம் மொட்டை மாடியில் 'ட்ரிப்ளிங்' செய்வேன். பின்பு சிறிது நேரம் செய்தித்தாள் வாசிப்பு. இந்நேரத்தில் மாதுளை ஜூஸ் 1 கிளாஸ் குடிப்பேன்.

எட்டு மணிக்குக் குளியல். அரைமணி நேரம் கழித்து, இருபது நிமிடங்கள் யோகா. சிறையில் இருந்த நாட்களில் யோகாதான் எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. குளிப்பதற்கு அரை மணி முன்போ, குளித்த அரை மணி நேரத்துக்குப் பின்போதான் யோகா பழக வேண்டும். அதன்பின் வஜ்ராசனத்தில் அமர்ந்து ஐந்து நிமிடங்கள் பிராணாயாமம்.



V.I.P. ஹெல்த்



காலை உணவாக ஊற வைத்த அவலுடன் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து 1 கப் அளவு எடுத்துக்கொள்வேன். கூடவே பத்துப் பப்பாளித் துண்டுகள், ஓட்ஸ் 1 டம்ளர் அல்லது ப்ரட் சாண்ட்விச். ஒன்பது முப்பதுக்கு அலுவலகம்.

பதினொரு மணிக்குக் கறிவேப்பிலை அரைத்துக் கலந்த மோர் ஒரு கிளாஸ் அருந்துவேன்."

'இடையில் டீ, காபி உண்டா?' என்றதற்கு,

"முன்பெல்லாம் ஒரு நாளைக்கு 20 - 30 டீ குடித்துக் கொண்டிருந்தேன். சிறைக்குப் போன பின்பு எல்லாம் மாறிவிட்டது. இப்போதெல்லாம் விருந்தாளிகள் வரும்போது மட்டும் டீ சாப்பிடுகிறேன்" என்று தொடர்கிறார்...

"பன்னிரண்டு மணிக்கு ஏதாவது ஒரு கீரை ஜூஸ். இடையிடையே வெந்நீரிலிட்ட சீரகத் தண்ணீர் மட்டும்" என்று மேசையில் சீரகத் தண்ணீர் கிளாஸைக் காட்டுகிறார்.



இரண்டரைக்கு மதிய உணவு. அரை கப் சாம்பார் அல்லது கீரை சாதம். எங்கள் வீட்டில் அதிகபட்சம் எல்லா நாட்களிலும் கீரை இருக்கும். வாரத்தில் மூன்று நாட்கள் பூண்டுக் குழம்பு இருக்கும். வாரா வாரம் ஞாயிற்றுக்கிழமை அசைவம்தான்!

மதிய உணவில் பெரும்பாலும் அவியல்கள்தான். வயது ஏற ஏற பொரியல் அயிட்டங்களைத் தவிர்ப்பது நல்லதாயிற்றே!

மதிய உணவுக்குப் பிறகு அரைமணி நேரம் கழித்துச் சில பப்பாளித் துண்டுகளைச் சாப்பிடுவேன். உணவு முடித்த கையோடு பழங்கள் எதையும் சாப்பிடக் கூடாது. அப்படிச் சாப்பிட்டால் ஜீரண சக்தி முழுமையடையாமல் போய்விட வாய்ப்பு அதிகம்" என்றவர், பப்பாளியின் மகத்துவம் குறித்தும் பேசினார்...

"நாம் எப்போதுமே எளிமையான விஷயங்களை அலட்சியப்படுத்தி விடுகிறோம். பப்பாளியில் இரும்புச்சத்து அதிகம். எந்த வயதிலும், எந்த நபரும் பப்பாளி சேர்த்துக் கொள்ளலாம். மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் தரமான பழவகை பப்பாளி" என்றவர், மறுபடி ஆரோக்கியத்துக்குத் தாவினார்...


"மதிய உணவுக்குப் பின் சிறிது நேரம் ஓய்வு மட்டுமே எடுத்துக்கொள்வேன்; உறங்க மாட்டேன். இரவு உணவாக இரண்டு சப்பாத்தி அல்லது ஒரு கப் சாதம், ஒரு பழம் மட்டுமே எடுத்துக் கொள்வேன்.

இரவு 11.30 - 12.00க்குள் உறங்கப் போய்விடுவேன். இது தவிர வாரம் ஒரு முறை ஆயில் மசாஜ் செய்துகொள்வேன்.

உணவுப் பழக்கமும், உடற்பயிற்சியும்தான் என்னைக் காட்டிலும் மேட்டிலும் சிறையிலும் தொழிலிலும் சளைக்க வைக்காமல், நடந்து செல்ல உதவுகிறது" என்றவர், டிரெட் மெஷினில் ஏறி நடக்க ஆரம்பிக்கிறார்... ஐந்து... பத்து... பதினைந்து... நிமிடங்கள் நகர நகர... நடையின் வேகம் கூடிக்கொண்டே போகிறது... அந்த வேகம் அவரிடம் இப்போதைக்குக் குறைவதாகத் தெரியவில்லை.

- அருணா.செந்தில்குமரன்

படங்கள்: பொள்ளாச்சி சுந்தரம்



இப்படியும்

பத்மராஜன். இவர் ஒரு சுயேச்சை வேட்பாளர். சேலம் மாவட்டம் ஆத்தூர் காரர். கின்னஸ் புத்தகத்தில் இவரது பெயர் இடம்பெற வேண்டும் என்பதற்காகவே எங்கு தேர்தல் நடந்தாலும் ஓடி ஓடி வேட்பு மனுச் செய்வார். இப்போது? மதுரை இடைத் தேர்தலில் 80ஆவது முறையாக வேட்பு மனுத் தாக்கல் செய்திருக்கிறார். கலாம் முதல் கருணாநிதி வரை, வாஜ்பாய் முதல் ஜெயலலிதா வரை தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்டு லிம்கா சாதனை புத்தகத்தில் இடம்பெற்று விட்டார்.

- வீ.எஸ்.ராஜகோபால், பெங்களூர்



ரேடியோ கொடு!

சிற்றூராட்சித் தலைவர் தேர்தலில் போட்டியிடும் அன்பர் ஒருவருக்கு வாக்கு சேகரிக்கச் சென்றிருந்தேன். அங்கு தாய்க்குலங்களிடம் 'சென்ற சட்டமன்றத் தேர்தலில் யாருக்கு வாக்களித்தீர்கள்? ஏன் வாக்களித்தீர்கள்?' எனத் தாய்க்குலத்திடம் கேட்டேன்... 'இலவச கலர் டி.வி. தரேன்னாங்க. இலவச அரிசி தரேன்னாங்க. இலவச நிலம்... இலவச கேஸ் அடுப்பு இப்படி எல்லாமே தரேன்னாங்க. அதான் உதயசூரியனுக்கு வோட்டுப் போட்டோம்' என்று பதில் சொன்னார்கள்.

நானும் உடனே நண்பரைக்காட்டி... "தலைவர் தேர்தலுக்காகப் போட்டியிடும் இவர் வெற்றி பெற்றால் உங்களுக்குக் குடிநீர்... சாலை வசதி... தொகுப்பு வீடு எல்லாமே தர ஏற்பாடு செய்வார்" எனக் கூற, தாய்க்குலம், 'எங்களுக்கு இலவச கலர் டி.வி.தான் தரலே. இலவச ரேடியோவாவது தர ஏற்பாடு பண்ணுங்களேன்'' என்று கூற, சிலையாய் நின்று விட்டோம்!


- கே.ஜி.எஸ்., கிருஷ்ணபுரம்

பிள்ளையார் சுழி!

இந்தியா விடுதலை பெற்று, அமைச்சரவை முதன் முதலாகப் பதவி ஏற்றபோது, முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு பொருளாதாரத்தில் பேரறிஞராக விளங்கிய டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியாரை நிதியமைச்சராக்கினார். அப்போது சண்முகம் காங்கிரஸிலும் இல்லை. தீவிர விடுதலைப் போராட்ட வீரரும் இல்லை. கோவையைச் சார்ந்த அப்பெரியவரின் மதிநுட்பம் ஒன்றைக் கருதியே நேரு அவரைத் தேர்வு செய்தார். அவர் முதன்முதலாக நிதியமைச்சராகப் பொறுப்பேற்றதன் விளைவுதானோ என்னவோ... இதுவரையிலான மத்திய அமைச்சரவைகளில் நிதித்







ஒருவர்!

துறையின் பொறுப்பு தமிழகத்தவர்க்கே அதிக முறை வழங்கப்பட்டிருக்கிறது.

- நாஞ்சில் சு.நாகராஜன், பறக்கை

பொத்தானை அழுத்து!

கடந்த உள்ளாட்சித் தேர்தலின் போது எங்கள் தெருவில் 105 வயதான பாட்டி ஒருவர் வோட்டுப் போட விரும்பினார். வீட்டினரும் பிரயாசைப் பட்டு அழைத்துச் சென்றனர். தேர்தல் பார்வையாளர் பாட்டியின் வயதைப் பார்த்து வியந்ததுடன் வோட்டுப் போடும் முறையை விளக்கமாகக் கற்றுக் கொடுத்தார்.

வோட்டு மெஷின் அருகே போன பாட்டி, அந்த ஹாலின் மின்சார ஸ்விட்ச் போர்டில் ஒரு ஸ்விட்சை ஆஃப் செய்துவிட்டு வந்தார் பாட்டி.

'ஏன் அப்படிச் செய்தீர்' எனக் கேட்க, 'ஏதோ பொத்தானை அழுத்தணும்னு சொன்னீங்க. அந்த கூண்டுக்குள்ளே ஒரு டப்பாதான் (வாக்கு செலுத்தும் மிஷின்) இருந்தது. சரி, கரண்ட் பொத்தானையாவது அழுத்தி வைக்கலாம்னு அழுத்தினேன்.' என்றார் பாட்டி அப்பாவியாக.

- யூ.பைஸ் அஹமத், நாமக்கல்



யோசித்துச் செயல்படுங்கள்!

சென்ற உள்ளாட்சித் தேர்தலில்



ஒன்றிய கவுன்சிலர் பதவிக்குப் போட்டி யிட்ட என் அண்ணன், இருந்த ஒரு ஏக்கர் நிலத்தையும் விற்றுத் தேர்தல் செலவு செய்தார். கடைசியில் ஒரே ஒரு வோட்டு வித்தியாசத்தில் தோற்றுப் போனார். தேர்தலில் ஜெயித்து லட்சக் கணக்கில் சொத்து சேர்ப்பவர்களும் உண்டு. தேர்தலில் தோற்று, இருக்கிற சொத்துகளை இழப்பவர்களும் உண்டு. அரசியலில் ஈடுபடும் முன் பலமுறை யோசித்துச் செயல்பட வேண்டும்.

- க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி




குமரனும் தெய்வானையும் நல்ல

அந்த யானைகளைப் பார்க்கப் பார்க்க மனம் பரவசத்தில் துடிக்கிறது. தொட்டுப் பார்க்கக் கைகள் பரபரக்கின்றன. கொழுக் மொழுக்கென்றிருக்கும் அந்த இரண்டு குட்டி யானைகள் திருச்செந்தூர் முருகப்பெருமான் கோயிலுக்குச் சொந்தமானவை. நன்கொடையாக அளித்தவர் சென்னையைச் சேர்ந்த தொழிலதிபர் தேவதாச சுந்தரம்.


''என்னதான் சென்னையில் நான் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தாலும், என் உள் மனம் எப்போதும் திருச்செந்தூர் முருகப் பெருமானையே சிந்தித்துக் கொண்டிருக்கும்'' என்று கூறும் சுந்தரம், சி.டி.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்னும் நிறுவனத்தை நடத்தி வருகிறார். ''சிறு வயதிலிருந்தே என் சொந்த ஊருக்கு அருகிலுள்ள திருச்செந்தூருக்கு அடிக்கடி சென்று முருகனைத் தரிசித்து வருவேன். எனக்கு மட்டுமல்ல என் மனைவி, பிள்ளைகளுக்கும் முருகன் மீது அலாதி பக்தி!

என் சொந்த வாழ்விலும், தொழிலும் கிடைத்திருக்கும் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணம் முருகனின் அருள்தான். கடந்த சில மாதங்களுக்கு முன்பு, திருச்செந்தூர் முருகப் பெருமான் கோயிலுக்குச் சொந்தமாக யானைகள் இல்லை என்று கேள்விப்பட்டேன். திருச்செந்தூர் திருக்கோயிலிலிருந்து வந்த புருஷோத்தமன் என்ற யானை, உடல்நலமின்றி கடந்த 1996-ஆம் ஆண்டு இறந்து விட்டது. அதேபோல சாந்தி என்ற மற்றொரு யானையும் கடந்த ஜூலை மாதம் இறந்து





* குமரன், தெய்வானை நடுவே தேவதாச சுந்தரம்...



நன்கொடை

இருக்காங்களா?

விட்டது.

இதனால் திருக்கோயிலின் திருவிழாக்களில் வாடகை யானையே பயன்படுத்தப்பட்டு வந்தது. நாமே ஏன் கோயிலுக்குச் சொந்தமாக யானைகளை வழங்கக் கூடாது என்று யோசித்தேன். என் குடும்பத்தினரையும் கலந்தாலோசித்தேன். ஆறுமுருகனிடம் அளவு கடந்த அன்பும், பக்தியும் கொண்ட என் குடும்பத்தினர் உடனடியாகச் சம்மதம் தெரிவித்தனர். திருச்சி சமயபுரத்திலுள்ள சுகுமாரன் என்பவரிடமிருந்து ஓர் ஆண் யானைக் குட்டி, ஒரு பெண் யானைக்குட்டி என இரண்டு குட்டிகளை வாங்கினேன்.

கோயிலுக்குக் கொடுக்கும் முன்பாக திருச்செந்தூரிலுள்ள சிவகொழுந்தீஸ்வரர் எனும் சிவாலயத்தில் 15 நாட்கள் வரை யானைகளைப் பராமரித்தோம். சில நாட்களே நாங்கள் யானைகளுடன் பழகினாலும், எங்கள் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களைப் போலத்தான் எண்ணினோம். குமரன், தெய்வானை என்று பெயர் சூட்டினோம். யானைகளை வழங்கிவிட்டு, சென்னைக்கு வந்த பின்பும் அவை எவ்வாறு பராமரிக்கப்படுகின்றன என்று அவ்வப்போது தொலைபேசிமூலம் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். தம் மகளைத் திருமணம் செய்து புகுந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அங்கே அவள் எப்படி இருக்கிறாளோ என்று ஏங்கித் தவிக்கும் பெற்றோரின் நிலையில் தான் எங்கள் மனநிலை உள்ளது'' என்று உருகுகிறார் தேவதாச சுந்தரம்.

இந்த யானைக் குட்டிகளைப் பராமரிக்க பத்து லட்ச ரூபாயும் வழங்கியுள்ளார் இவர்.

- ராகவ்குமார்

பக்திச் சுனை அமுதம்- காசினிவேந்தினி இராமாநுஜம் - உடையவர் அரங்கம், D - 107F - சங்கீதா காலனி, அண்ணா மெயின் ரோடு, கலைஞர் நகர், சென்னை - 78 - 96 பக்கங்கள், விலை ரூ. 15/-

நூலாசிரியரும் அவர் தம் குடும்பத்தினரும் தீவிர ஷீரடி சாயி பக்தர்கள். பாபாவின் பெருமைகளைக் கவிதைகளாக்கி இருக்கிறார். புத்தகத் தயாரிப்பில் இன்னும் கவனம் செலுத்தி இருக்கலாம்.





அக்கம் பக்கம்




ஏழைக்கும் ஏ.சி!

திருவனந்தபுரம் மீனவர்களுக்காக, 'அலைகள்' என்ற பெயரில் புதிய எஃப்.எம். ரேடியோ தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பண்பலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கடற்கரைப் பகுதியில் ஏராளமானவர்கள் எப்போது பார்த்தாலும் ரேடியோவும் காதுமாகவே திரிகிறார்கள். வழக்கமான சமாசாரங்களுடன், கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு உபயோகமான வானிலைத் தகவல்கள், மொத்த மற்றும் சில்லறை மீன் மார்க்கெட் விலை விவரங்கள், எந்தப் பகுதிகளில் மீன் பிடிக்கச் சென்றால் நிறைய மீன்கள் கிடைக்கும் என்கிற டிப்ஸ் போன்றவற்றையும் இந்தப் பண்பலை வானொலி தருகிறது.

மத்திய ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவின் புதிய சாதனை, 'கரிப் ரத்' என்ற பெயரில் ஏழை மக்களுக்கான ஏ.சி. ரயில் விட்டிருப்பது. "வழக்கமாக, ஏழை மக்களை ரயில் நிலையங்களில் போலீசும், டி.டி.ஆர்.களும் ஏ.சி. பெட்டிகளின் கிட்டே போகக்கூட விடமாட்டார்கள். அவர்களும் இந்த நாட்டுக் குடிமக்கள்தானே! அவர்களுக்கென்றே ஸ்பெஷலாக ஒரு ஏ.சி. ரயில் விட்டிருக்கிறேன்" என்கிறார் லாலு. பீகார் சகர்சா ரயில் நிலையத்திலிருந்து பஞ்சாப் அமிர்தசரஸுக்கு விடப்பட்டிருக்கும் இந்த ரயிலின் பயண தூரம் 1500 கி.மீ. இதற்கு வழக்கமான கட்டணம் ரூ.1300; இந்த ரயிலில் 600 ரூபாய்தான்.

பெல்லாரி பகுதியில் இரும்புத் தாது ஏராளமாக உள்ளது. சமீபகாலமாக சட்டத்துக்குப் புறம்பாக இரும்புத் தாது தோண்டி எடுக்கும் பணி அதிகரித்துள்ளது. 2008-ல் சீனாவில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக்ஸ் போட்டிகளை நடத்துவதற்காக, புதிதாகப் பல விளையாட்டு அரங்குகள் கட்டப்படுவதுதான் காரணம். இதற்காக ஏராளமான இரும்பு தேவைப்படுகிறது. எனவே, பணமுதலைகள் லைசென்ஸ் பெற்றும், பெறாமலும் இரும்புத் தாது தோண்டி எடுத்து, சீனாவுக்கு ஏற்றுமதி செய்து பணம் கொழிக்கின்றனர். சமீபத்தில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், பெல்லாரியில் போஸ்டிங் வாங்குவதற்காக ஐம்பது லட்ச ரூபாய் லஞ்சம் கொடுத்தார் என்பதுதான் பெல்லாரியில் தற்போது பரபரப்பான பேச்சு.

- சி.எம்.





சிரிப்புச் சந்தை 5

பாகம்-3

கண்டுவின் சந்நியாசம்!

அமரர் கல்கி



இரண்டு வருஷத்துக்குப் பிறகு கண்டு திடீரென்று ஒருநாள் என் எதிரே முளைத்தான். என் தோள்களும் முதுகும் வெகு பாடுபட்டன.

"நான் உன்னைக் கடைசியாகப் பார்த்தபோது என்ன சொன்னேன்?" என்று கேட்டான்.

"தூங்கிப் போய்விடாதே என்று சொன்னாய். இப்போது தூக்க மருந்து சாப்பிட்டாலும் எனக்குத் தூக்கம் வர மாட்டேனென்கிறது!" என்றேன்.

"சினிமா உலகில் பெரிய புரட்சியை எதிர்பார்த்துக்கொண்டிரு என்று சொன்னேனோ, இல்லையோ? அது நடக்கப் போகிறது!"

"பேஷ்!"

"என்ன பேஷ்! பேஷாவது பேஷ்? உன்னைப் போன்ற உற்சாகமில்லாத பிரகிருதியை நான் பார்த்ததேயில்லை! உலகத்திலே இல்லாத மகா அதிசயம் நடக்கப் போகிறது என்கிறேன்; நீ பேஷ் என்கிறாய்?"

"பின்னே என்ன சொல்லவேணும், அப்பா?"

"ஒன்றும் சொல்ல வேண்டாம்; எழுந்திருந்து கூத்தாடணும்!"

"ஆகட்டும்; சினிமாப் புரட்சி எந்த மட்டும் இருக்கிறது?"

"பாதி நடந்தாற்போலத்தான்; கதையும் ஸினேரியோவும் தயாராகிவிட்டது. 'டயலா'க்கும் முக்கால்வாசி எழுதியாகிவிட்டது. கொஞ்சம் கேட்கிறாயா?

காதலி! கரிய மேகங்களும் கண்டு வெட்கும்படியான ஜாஜ்வல்யமான கன்னங்களிலே குமிழ்விட்டுக் கொப்பளிக்கும் அழகு வெள்ளத்தின் ஆழத்திலே ஆழத்திலே ஆழத்திலே..."

"கண்டு உனக்கு எப்போது தெத்துவாய் ஏற்பட்டது?" என்று கேட்டேன்.

"என்ன கேட்டாய்?" என்று வேறு உலகத்திலிருந்து இந்த உலகத்துக்கு வந்தவனைப் போல் கண்டு கேட்டான்.

"ஆழத்திலே, ஆழத்திலே, ஆழத்திலே என்று சொல்லிக்கொண்டே போனாயே... ஒருவேளை தெத்துவாய் வந்துவிட்டதோ" என்று கேட்டேன்.

"உன்னிடம் இதைப் பற்றியெல்லாம் பேசிப்



பிரயோஜனமில்லை என்று தெரியும். தெரிந்தும் பேசினேனே? என் புத்தியை... அடித்துக் கொள்ள வேணும். அடாடா! மணி ஐந்தாகிவிட்டதே! லுல்லு அங்கே காத்துக் கொண்டிருப்பாளே?"

"லுல்லு என்பது யார் அப்பா?"

"அட நாராயணா! லுல்லுவைத் தெரியாதா? அடுத்த வருஷம் இந்த நாள் எல்லாம் லுல்லுவின் பெயர் உலகப் பிரசித்தியடையப் போகிறது. சினிமா உலகத்திலேதான் சொல்கிறேன். நீ செவிடாய்ப் போனாலும்கூட உன் காதில் அந்தப் பெயர் விழுந்தான் விழும்!"

"லுல்லு என்பது யார் அப்பா?"

"சினிமா உலகில் பாதிப் புரட்சியை நான் நிறைவேற்றி விட்டேன்: பாக்கி பாதிப் புரட்சியை லுல்லு நிறைவேற்றப் போகிறாள்! அவளைக் கதாநாயகியாக வைத்துத்தான் நான் கதையும், ஸினேரியோவும் எழுதியிருக்கிறேன். இன்னும் ஐந்தாறு மாதம் மட்டும் தூங்காமலிரு; அப்புறம் பார் அற்புதத்தை!'' என்று சொல்லிவிட்டு சுண்டு நடையைக் கட்டினான்.

என் முதுகைத் தட்டக்கூட அவன் மறந்துவிட்டுப் போனது எனக்கு அளவில்லாத, அளவில்லாத, அளவில்லாத... அட சுண்டு! அளவில்லாத ஆச்சர்யத்தை அளித்தது.

பிற்பாடும் சில மாத காலம் சுண்டு அடிக்கடி என்னைச் சந்தித்ததோடு 'லுல்லு' 'லுல்லு' என்று சொல்லி என் பிராணனை வாங்கி விட்டான். காது செவிடாய்ப் போய் விட்டாலே தேவலை என்று தோன்றியது. லுல்லுவின் அசல் பெயர் லீலா மனோகரி என்று அறிந்தேன்; சுப்பிரமணியன் என்னும் பெயர் சுண்டு என்று திரிந்திருக்கும்போது, லீலா மனோகரி லுல்லு ஆகக்கூடாதா?

லுல்லுவும் அவன் தாயாரும் அநாதைகள் என்றும் ஏதோ சினிமாவில் சில்லறைப் பாத்திரங்களாக குரூப் டான்ஸ்களில் ஆடியும் ஜீவனம் நடத்துகிறார்கள் என்றும் தெரிந்தது.

அத்தகைய லுல்லுவிடம் சுண்டு தம் உள்ளத்தை முழுதும் பறிகொடுத்திருந்ததோடு, அவளை உலகம் மெச்சும் சினிமா நட்சத்திரமாகச் செய்துவிடுவதென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்ததையும் அறிந்தேன்.

சுண்டுவின் சுபாவம் எனக்குத் தெரியுமாதலால் லுல்லுவிடமும், அவள் தாயாரிடமும் "ஐயோ! பாவம்" என்று இருந்தது. இவனுடைய வெறும் வாய் புரடாக்



களைக் கேட்டு அவர்கள் ஏமாந்து போய் விடப் போகிறார்களே என்று இரக்கப்பட்டேன். அவர்களை ஒரு நாள் நேரில் பார்த்து எச்சரிக்கலாமா என்றுகூடத் தோன்றியது.

நல்லவேளையாக, அந்த எச்சரிக்கைக்கு அவசியமில்லாமல் போயிற்று.

ஒருநாள் கண்டு தலைவிரி கோலமாய் அதாவது கிராப்புத் தலையை வாராமல் ஓடிவந்து, "அப்பனே! இந்த உலகம் இருக்கிறதே, மகா சண்டாள உலகம்; மகா மோசமான உலகம்; அயோக்கிய உலகம்; அக்கிரம உலகம்; மோச உலகம்; நாச உலகம்! இந்த உலகத்தில் இனி ஒரு நிமிஷங்கூட என்னால் வாழ்க்கை நடத்த முடியாது. இதை ஒரே அடியாக விட்டொழித்துத் தலை முழுகிவிடப் போகிறேன்'' என்றான்.

"சரி!" என்றேன்.



"சரி என்று ஒரு தடவை சொன்னால் போதாது. நூறு தடவை சொல்ல வேணும்!" என்றான்.

"நூறு தடவை சரி!" என்றேன்.

''இந்த மோச உலகத்தைத் துறந்து சந்நியாசம் வாங்கிக்கொள்வது என்று தீர்மானித்து விட்டேன்; யார் தடுத்தாலும் கேட்க மாட்டேன்'' என்றான்.

"அடடா! லுல்லுவின் கதி என்ன ஆகிறது?" என்றேன்.

''லுல்லு! லுல்லு! நல்ல லுல்லு! அவளாலேதான் அப்பா, நான் சந்நியாசம் வாங்கிக்கொள்ளப் போகிறேன். லுல்லு செய்த மோசடியினால் தான்!''

கொஞ்சம் கொஞ்சமாக விசாரித்து ஒருவாறு விஷயம் இன்னதென்று தெரிந்துகொண்டேன்.

லுல்லுவுக்காகக் கண்டு கதையும் 'டயலாக்'கும் எழுதி ஒரு டாக்கி முதலாளியிடம் எடுத்துக்கொண்டு போனான். தன்னை டைரக்டராகவும் லுல்லுவைக் கதாநாயகியாகவும் எடுத்துக்கொண்டால் அந்த அற்புதமான கதையைக் கொடுப்பேன் என்றான். இது சம்பந்தமான பேச்சுவார்த்தை நடந்தபோது, லுல்லு மேற்படி டாக்கி முதலாளியைச் சந்திக்க நேர்ந்தது. சில தினங்கள் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடந்தன. கடைசியில் மேற்படி டாக்கி முதலாளி லுல்லுவைக் கதாநாயகியாக எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக தம்முடைய சொந்த நாயகியாகவே ஏற்றுக் கொள்ள முன்வந்தார்! லுல்லுவுக்கும் மேற்படி முதலாளிக்கும் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. கண்டு உலகத்தைத் துறந்து சந்நியாச ஆசிரமத்தை மேற்கொள்ள எண்ணியதற்குக் கொஞ்சம் காரணம் இருக்கத்தான் செய்தது!

ஆனால் கண்டுவாவது, சந்நியாசம் வாங்கிக்கொள்வதாவது! நாலைந்து நாளில் லுல்லுவை மறந்துவிட்டு இன்னோர் உல்லுவைப் பிடித்துக்கொண்டு திரிவான் என்று நான் எண்ணினேன். அவனிடமும் சொன்னேன். கண்டு வெகு கோபத்துடன் என்னை முறைத்துப் பார்த்துவிட்டுப் போய் விட்டான்.

ஒரு மாதத்துக்கெல்லாம் கண்டுவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. ''என் பேச்சை நீ நம்பவில்லையல்லவா? இத்தனாந் தேதி, இன்ன மணிக்கு, இந்த இடத்துக்கு வந்து பார்'' என்று எழுதியிருந்

தெலுங்கிலிருந்து இறக்குமதி பண்ணப்பட்ட கதை. வாசனை கொஞ்சம் தூக்கலாவே அடிக்குது.வாலிபத்தில் காதல் வரலாம். ஆனால் அது கடமைக்குத் தடையாக இருக்கக் கூடாதுங்கறதுதான் படத்தோட மெசேஜ்.நாயகன் நவ்தீப். அழகா இருக்கார். பட், தொடர்ந்து நல்ல கதையுள்ள படங்கள் அமையணுமேன்னு பயமா இருக்கு. புதுமுகம் ஷீலாவுக்கு நடிப்பு வருது. ஆனா அம்மணி, கவர்ச்சில காட்ற அக்கறையைக் குறைச்சா நல்லது. பப்லு வழக்கமான வில்லன். ஆரம்பத்துலயும் முடிவுலயும் வர்ற சுகாசினி,



இளவட்டம்

அட்வைஸ் ராணி. 'இது மாதிரி ஒரு மாமனார் நமக்கு இல்லையே'ன்னு ஏங்க வைக்கற விஜயகுமாரோட முடிவு பரிதாபம். திரைக்கதைய இன்னும் வலுவா அமைச்சிருந்தா இளைஞர்களுக்கான நல்ல பாடமா படம் அமைஞ்சிருக்கும். 'மணிசர்மா' இசையில பிரமாதமா ஒண்ணும் இல்ல. அதேமாதிரி குழந்தைகளை நாயகன் காப்பாத்தற ஹைலைட் சீனை இன்னும் கொஞ்சம் நல்லா பண்ணியிருக்கலாம். நகைச்சுவைக்கு ரொம்பவே பஞ்சம். அடுத்த படத்துலயாவது டைரக்டர் கவனமா இருப்பாரா?

- லஜ்ஜாவதி

தான்.

என்னதான் செய்யப் போகிறான் என்று பார்ப்பதற்காக நான் குறிப்பிட்ட இடத்துக்குப் போயிருந்தேன்.

கண்டு தன் அழகான கிராப்புத் தலையை மழுங்க மொட்டையடித்துக் கொண்டு, காவி வஸ்திரம் தரித்துக் கொண்டு கையில் கமண்டலத்துடன் காட்சியளித்தான்.

''அடப்பாவி! சொன்ன வாக்கை நிறைவேற்றி விட்டாயா?'' என்று சத்தமிட்டேன்.

உடனே, "ஸைலன்ஸ்" என்ற ஓர் இடி முழக்கக் குரல் கேட்டது.

''போ! அப்பால் போ!" என்று பல குரல்கள் கட்டளையிட்டன.

யாரோ ஒருவன் ஓடி வந்து என்னை அப்பால் இழுத்துப் போனான்.

"ஷூட்" என்றது மறுபடியும் அந்த இடி முழக்கக் குரல்.

லல்லுவினால் நிராகரிக்கப்பட்ட கண்டு, வாழ்க்கையில் வெறுப்படைந்து "மாய உலகம்' என்னும் படத்தில் கபட சந்நியாசி வேஷம் போட்டுக்கொண்டு நடிக்கிறான் என்று அறிந்த பிறகுதான் என் மனம் ஒருவாறு நிம்மதி அடைந்தது.

போகட்டும்! கண்டு எந்த வழியிலாவது நாலு பணம் சம்பாதித்து யோக்கியமாக வாழ்க்கை நடத்தினால் சரி!

ஆம்; நூறு தடவை சரி!

சுபம்.

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES


Old No. 102, New No. 138, USMAN ROAD,

T. NAGAR, CHENNAI - 600 017.

PH: 24344442, 24327764 TUESDAY HOLIDAY

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN



P.R. ஜுவெல்லரியின் 21-வது ஆண்டு விழா

22.10.2006

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்!

1வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாங்கள் வாடிக்கையாளர்கள் னைவரும் குறைந்த செலவில் பயன்பெற வருக வருக என ரவேற்கிறோம். அதிர்ஷ்ட சீனக் காசுகள். சிகப்பு ரிப்பனினால் ட்டப்பட்ட 3 ஐ சிங் காசு வைப்பதால் பண வாய்ப்புகள் பெருகும். லை ரூபாய் 30/- வீட்டில் உள்ள அனைவரும் பாக்கெட், பர்ஸ், ஹண்ட் பேக், சூட்கேஸ், பீரோ, பாதுகாப்பு பெட்டகம் போன்ற எல்லா டங்களிலும் வைக்கலாம். தபாலில் பெற ரூ. 40/- M.O. அனுப்பவும்.

மேலும் எங்களிடம் பெங்சூய், சீன வாஸ்து பொருட்கள் குறைந்த லையில் கிடைக்கும். தொங்கும் மணிகளும் காசுகளும் ரூ. 100/- ரமீடு. ரூ. 100/- செல்வ குபேரர் ரூ. 40/- முதல்.

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் **P.R.** ஜுவல்லரிக்கு வந்து ராசிக்கல் மாதிரம் வாங்கிப் பயன்பெறுங்கள்.

ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் விலை ரூபாய் 500/-

கல்ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

மேஷம், விருச்சிகம் - பவழம், ரிஷபம், துலாம் - வைரம், மிதுனம், கன்னி - மரகதபச்சை, கடகம் - முத்து, சிம்மம் - மாணிக்கம், தனுசு, மீனம் - புஷ்பராகம், மகரம், கும்பம் - நீலம்.

முகவரி தெளிவாக எழுதவும்.

எங்களது சிறப்புப் பேட்டியை விஜய் டீ.வி.யில் புதன், வெள்ளி காலை 9.30 மணிக்கு காணத் தவறாதீர்கள்.



ஷாப்பிங்

டாக்டர் லோரின் கொரானை எல்லோரும் பைத்தியக்காரர் என்கிறார்கள். அவர் சொல்வதை யாரும் நம்ப வேண்டாம் என்று கூச்சலிடுகிறார்கள். எதற்காகத் திட்டுகிறார்கள்? யார் இந்த லோரின் கொரான்? இவர் ஒரு மனநல மருத்துவர். அமெரிக்காவில் இருக்கிறார். நிறைய ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்.

சமீபத்தில் மனச்சிதைவு நோய்கள் என்னும் வரிசையில் புதிதாக ஒரு நோயைச் சேர்க்கப் போவதாக அறிவித்துள்ளார். இதுதான் பிரச்னையைக் கிளப்பிவிட்டிருக்கிறது. அந்த நோயின் பெயர் 'Compulsive Shopping'. 'இந்த நோயால் தாக்கப்பட்டவர்கள் யோசிக்காமல் கொள்ளாமல் எப்போதும் எதையாவது வாங்கி வீட்டில் ரொப்பிக் கொண்டே இருப்பார்கள். Compulsive Shoppers எனப்படும் இவர்கள் அத்தனை பேரும் மனநோயாளிகள்' என்கிறார் லோரின்.


பதற வேண்டாம்; இவர் சொல்லும் விஷயங்கள் என்னவென்று முதலில் பார்ப்போம்.

இன்று, நேற்று முளைத்ததல்ல, இந்த நோய். கிட்டத்தட்ட நூறு ஆண்டுகள் பழைமையானது. கம்பல்ஸிவ் ஷாப்பிங் என்னும் பெயர்தான் புதிது. முன்பெல்லாம் இதை ஓநியோமேனியா என்று சொல்வார்கள். யுவன்களை, யுவதிகளை அதிகமாகத் தாக்கும், எதைப் பார்த்தாலும் வாங்கலாம் போல் தோன்றும், கையில் காசில்லாவிட்டால் கடன் வாங்கியாவது வாங்கத் தோன்றும். இது நோய்தான் என்று சம்பந்தப்பட்டவர் உட்பட யாருக்கும் தெரியாது.


அமெரிக்காவில் இந்த நோய் வெகு பிரபலம். வாராவாரம் தீபாவளிதான் அவர்களுக்கு. ஏற்கெனவே வீட்டில் ஏ.சி. இருந்தாலும் வந்ததுதான் வந்தோம் இன்னொரு ஏ.சி.யும் வாங்கிப் போடலாம் என்று அட்டையைத் தேய்த்து விடுவார்கள். ராட்சத சைஸ் டீ.வி. இரண்டு இருந்தாலும் ப்ளாஸ்மா டீ.வி. இல்லையே என்று அதையும் வாங்குவார்கள். வீட்டில் மீன் இருக்காது. இருந்தாலும் சல்லிசாகக் கிடைக்கிறதே என்று பெரிய சைஸ் மீன் தொட்டியை வாங்கிக் கொள்வார்கள்.

சிலருக்கு எலெக்ட்ரானிக்ஸ் பொருள்கள் மீது தீராக் காதல் இருக்கும். ஒயர் தொங்கும் அத்தனை சமாசாரங்களையும் வாங்கிவந்து விடுவார்கள். சிலருக்கு ரோபோ; சிலருக்குச் செருப்பு; சிலருக்கு ஹேர்பின்; சிலருக்குப் புத்தகங்கள்.

இப்படி எல்லாவற்றையும் வாங்கி மூட்டை கட்டி டாக்ஸி பிடித்து வீட்டுக்கு வரும்போதுதான் தெரியும் - வீட்டில் குந்துமணி அளவுகூட இடம் இல்லை



கண்டுபிடிப்பு









இந்த நோயின் முக்கிய அறிகுறிகள் என்னவென்று பார்ப்போம். ஒன்று, எதை வாங்குகிறோம் என்கிற உணர்வே இல்லாமல் எதையாவது வாங்குவது. இரண்டு, 'அட, இதை நானா வாங்கினேன், எப்போ வாங்கினேன்னே தெரியாதே!' என்று விழிப்பது. மூன்றாவது, நிறுத்த முடியாமல் வாங்கிக் கொண்டே போவது. சாதா போன், மொபைல் போன், கலர் போன், ஆடியோ போன், வீடியோ போன் என்று ஒன்று மாற்றி ஒன்று வாங்கிக் கொண்டே போவது.

விளைவு? 'அதீத சோர்வு, மன அழுத்தம்


செய்யும் மனநோயாளிகள்!

என்று, அதே டாக்ஸியில் ஏறி பிரைவேட் லாக்கரைத் தேடி ஓடுவார்கள். ஷாப்பர்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்ட வசதி இது. குதிரை லாடம், கம்ப்யூட்டர், கட்டில் எதை வேண்டுமானாலும் வாங்கி இந்த லாக்கரில் வைத்துக்கொள்ளலாம்.

தேவையா இல்லையா, இது ஏற்கெனவே இருக்கிறதா இல்லையா, இதை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்றெல்லாம் யோசிக்க அவகாசம் இருக்காது. தயங்காமல் அள்ளிக் கொள்வார்கள். இவர்கள்தான் கம்பல்ஸிவ் ஷாப்பர்கள். இவர்களைத்தான் நோயாளிகள் வரிசையில் சேர்த்திருக்கிறார், இந்த அமெரிக்க டாக்டர்.

என்று தொடங்கி மனநோய்வரை போய் விடும் அபாயம் இருக்கிறது' என்கிறார் லோரின் கொரான். The American Journal of Psychiatry-ல் கம்பல்ஸிவ் ஷாப்பிங் குறித்து பல ஆய்வுக் கட்டுரைகள் வெளியாகி இருக்கின்றன. ஆண்களைவிட பெண்களுக்கே இந்த நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாம். பெண்களில் குறிப்பாகத் திருமணமாகாத இளம் பெண்கள்.

தேவைப்படும் பொருள்களை தேவைப்படும் சமயத்தில் வாங்குபவர்கள் சமர்த்தர்கள். ஆனால், தேவையில்லாமல் வாங்குவோர் 'வாங்கு வாங்கு' என்று மண்டைக்குள் கத்தும் சாத்தானை தாஜா செய்ய முயலலாம். ●



நான் திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரரை முழு மனதுடன் நம்புகிறவன். ஒரு நாள் சாலையில் நடந்து கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் என்னைப் பலமாகப் பிடித்து இழுத்தார். நிலை தடுமாறி அவரின் இழுப்பிற்குச் சென்று திரும்பிப் பார்த்தேன். ஒரு கார் எனக்கு மிக அருகில், மிகுந்த வேகத்தில் சென்று கொண்டிருந்தது. மனம் படபடத்தது. அவருக்கு நன்றி கூறிவிட்டுப் பெயரை விசாரித்தேன். 'அருணாச்சலம்' என்றார்.

- வீ.விஷ்ணுகுமார், கிருஷ்ணகிரி

விசேஷம்!

நான் தினமும் செல்லும் கோயிலில் ஓர் அரச மரமும் உண்டு. ஒரு பெண்மணி ஒரே ஒரு விளக்கை அங்கே வைத்துவிட்டு, அரச மரத்தைச் சுற்றுவதோடு கத்தமும் செய்வார். நான் காரணம் கேட்டபோது அவர் சொன்னதாவது : 'பாற்கடல் கடைந்தபோது ஒவ்வொன்றாக வெளிவர, ஸ்ரீதேவிக்குப் பிறகு மூதேவியும் வெளி வந்தாளாம். திருமணக் காலம் வந்தபோது யாரும் மூதேவியை ஏற்றுக்கொள்ளவில்லையாம். கடைசியில் தேவலர் என்ற முனிவர் ஏற்றுக்கொண்டு, அவளை ஓர் அரச மரத்தடியில் இளப்பாறச் சொல்லிவிட்டுச் சென்று விட்டாராம். திரும்பி வந்து ஏற்றுக் கொள்ளவில்லையாம். கவலை கொண்ட மூதேவிக்குக் கைகொடுத்த ஸ்ரீதேவி, 'இனி இங்கேயே நீ வாசம் கொள். சனிக்கிழமைகளில் மட்டும் நான் உடன் இருக்கிறேன். பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் உறைந்துள்ள இந்த மரத்தை யார் அசுத்தப்படுத்தினாலும் அவர்களைப் பிடித்துக்கொள்' என்றாளாம். ஆகையால் அரச மரத்தை சனிக்கிழமை சுற்றுவது மட்டும் மிகவும் விசேஷம்.'

- கே.ராஜகோபால், சென்னை

மெய்சிலிர்ப்பு!


என் ஆறு வயதுப் பேத்திக்கு அடிக்கடி வயிற்று வலி வர, டாக்டரிடம் சென்றோம். டெஸ்ட் செய்து அப்பண்டிசைடிஸ் என்று கூறி, ஆபரேஷனுக்கு நாளும் குறித்தார். பேத்தியோ என்னைக் கட்டிக் கொண்டு அழுதாள், ஆபரேஷன் வேண்டாமென. செய்வதறியாது தவித்த என் மனதில் அன்னைதான் தோன்றினார். அவரிடம் சரணடைந்தேன். என் வேண்டுகோளுக்கு செவிசாய்த்ததுபோல் ஆபரேஷன் தியேட்டருக்குச் செல்ல நினைக்கையில், சீஃப் டாக்டர் வந்து பரிசோதனை செய்து 'ஆபரேஷன் வேண்டாம். மருந்து எழுதித் தருகிறேன் சாப்பிடட்டும்' என்று கூறி எங்கள் வயிற்றில் பால் வார்த்தார். இன்றுவரை என் பேத்தி (16 வயது) வயிற்றுவலி என்று அவதிப்படவில்லை. இதை எழுதும்போதே மெய்சிலிர்க்கிறது.

- சரஸ்வதி இராசேந்திரன், மன்னார்குடி

வெறும் தேர்!

தேரோட்டத் திருவிழா தேரின்,

அருணா







பீடத்தில் சர்வ அலங்கரிப்பட்ட இறைவன், இறைவியின் திருவுருங்கள் காணப் பெறும். தேரோடும் வீதி நெடுக தூப, தீட வழிபாடு நடக்கும். ஆனால இறைத திருவடிவங்கள் இல்லாத வெறும் தேர் ஒன்று, தேரோடும் திருவீதியில் வலம் வரும் அதிசயமும் நடைபெறுகிறது. எங்கே? உலகையே கவர்ந்திர்க்கும் திருப்பதி திருமலையில்தான். அங்கு பிரமோற்சவம் நடைபெறும்போது, மலையப்ப சுவாமி ஒவ்வொரு வேளையிலும் ஒவ்வொரு வாகனத்தில், மாறுபட்ட அலங்காரங்களுடன் வலம் வரும்போது, அவருக்கு முன்னால் அலங்காரத் தேர் ஒன்று வெறுந் தேராகப் போய்க் கொண்டிருக்கும். அதில் பிரம்மன் இருப்பதாக ஐதிகம். பிரம்மோற்சவத்தை அவரே நடத்துகிறாராம். அதனால்தான் ஆளில்லாத முதல் தேர்.

- கோட்டை உமேஷ்,
கன்னியாகுமரி

ச்சலா!




அனுபவம்



சாயிநாதனே!

ஒருமுறை கோயம்புத்தூரிலுள்ள என்னுடைய இளைய மகன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். வீட்டில் பூஜை செய்ய சாமான் வாங்கிக்கொண்டு வீட்டுக்குத்



திரும்பும் சமயத்தில், பலத்த காற்றும், மழையும் பெய்தது. அதோடு இடி மின்னலும் சேர்ந்துகொண்டன. மனதினுள் "ஓம் சாயி நாதாய நம: ஓம் சாயி, ஸ்ரீ சாயி, ஜெய ஜெய சாயி" என்று சொல்லிக் கொண்டே ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி நடந்தேன். உள்ளே நுழைந்த அடுத்த நொடியில் வெகு பிரகாசத்துடன் மின்னல் ஒன்று கேட்டைத் தாக்கியது. கொஞ்சம் தாமதித்திருந்தால், அந்த மின்னலுக்கு இரையாகியிருப்பேன். அந்தச் சமயத்தில் என் உடலெல்லாம் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. அப்போது நான் "ஹே சாயிராம்! என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி" என்று வாய்விட்டே சொன்னேன். இந்நிகழ்ச்சி இன்னும் என் மனதை விட்டு நீங்கவே இல்லை.

- சி.சந்தானம்,
மதுரை



எழுத்துத் துறையில் ஒருவருடைய வாரிசாகவோ, உதவியாளராகவோ இருந்து தனித்துவமான அடையாளம் பெற்ற படைப்பாளிகள் மிகக் குறைவு. பஞ்சு அருணாசலம் மாதிரி ஓரிருவரைத் தவிர.

கண்ணதாசனிடம் உதவியாளராக இருந்து இன்றுவரை தமக்குரிய படைப்பு முகத்தை இழக்காதவர் பஞ்சு அருணாசலம். கதாசிரியராக, வசன கர்த்தாவாக, பாடலாசிரியராக, தயாரிப்பாளராகக் கிளைகளை அவர் விரித்துக்கொண்ட போதிலும் அந்தந்த துறை சார்ந்த தெளிவும் ஊக்கமும் அவரிடம் நிரம்பி இருப்பது வெளிப்படை.

1960ல் 'நானும் மனிதன் தான்' திரைப்படத்தின் மூலம் பாடலாசிரியராக அறிமுகமான பஞ்சு அருணாசலம், தொடர்ந்து எழுதி

யுகபாரதி

தொடர்ந்து

வருகிறார். திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதும்போது, திரைக்கதையின் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் பிரதிபலிக்கும்படி அதிக அக்கறை எடுத்துக் கொள்வதாக அவரே அவரைப் பற்றிக் கூறியிருக்கும் பார்வை கோணலற்றது.

'பொன்னெழில் பூத்தது
புதுவானில்
வெண்பனி தூவும்
நிலவே நில்
என் மனத் தோட்டத்து
வண்ணப் பறவை
சென்றது எங்கே?

சொல் சொல் சொல்' - 'கலங்கரை விளக்கம்' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள இந்த ஒரு பாடலேகூட அவருடைய செழித்த தமிழுக்குச் சிறப்பான உதாரணமாக எனக்குப் படும். 'புதுவானில்' என்ற சொல்லுக்கு 'நிலவே நில்' என்ற சொல்லை இணையாகப் பயன்படுத்தியிருப்பது பாடல் எழுதுவோருக்கு அவர்மீது அன்பு கூடும் வாய்ப்பை நல்கும்.

ஒரு காலத்தில் மிகப் பிரமாண்டமான புழமோடு இருக்கும் ஒருவரே, சிறப்பான பாடல்கள் முழுவதையும் எழுதியிருக்கக் கூடுமென்ற ரசிகனின் யூகம் எந்த அளவு பாதகம் வாய்ந்தது எனில், ஏனைய படைப்பாளிகளின் பெயர்கள் பிரசித்தி பெறாத அளவுக்கு எனலாம். திரைப் பாடல் துறையைச் சார்ந்தவர்களாலேயே கூட இன்ன பாடல் இன்னாருடையது என்று தெளிவாகக் கூற முடியாத குழப்பம், அந்தோ... பரிதாபம்!

'ஆறிலிருந்து அறுபதுவரை' திரைப் படத்தில் ஒரு பாடல் 'பரிதாபம் அந்தோ பரிதாபம்' என்று ஆரம்பிக்கும் காட்சிக்கும் சூழலுக்கும் பொருத்தமான விவ

நடிக்கிறதை விட்டுட்டு நாமளும் பாட்டெழுதப் போயிடலாமா?

ரணை. காட்சியைப் படமாக்கி விட்ட பிற்பாடு பாடல் உருவாக்கப்பட்டதுபோல அத்தனை, நேர்த்தி. அதே படத்திலுள்ள 'கண்மணியே காதல் என்பது' என்ற பாடல், பஞ்சு அருணாசலம் என்ற பெயர் எனக்கு அறிமுகமாகும் முன்னமே என்னை ஆட்கொண்ட பாடல்.

'கண்மணியே காதலென்பது
கற்பனையோ? காவியமோ?
கண்வரைந்த ஓவியமோ?' - ஏதோவொரு மொட்டை மாடி நடுநிசியில் வானொலியோடு உறங்கும் இளைஞர்கள் யாருக்கும் பிடித்துப் போகிற பாடலிது.

இசை மூலம் எல்லையில்லா இப்பேருலகத்தை ஆட்சி

வரும் அலட்சியப் போக்கு!

செய்ய இயலும் என்று நிரூபித்த / நிரூபித்து வரும் இளையராஜாவை தமிழ்த் திரைக்கு அறிமுகம் செய்த ஒற்றைச் செயல், பஞ்சு அருணாசலத்தின் மொத்த பாடல் பெருமையைக் காட்டிலும் பிரதானமானது.

'அன்னக்கிளி' படம் மட்டும் வராது போயிருந்தால்... கடந்த முப்பது ஆண்டுகளாக நாம் சுவாசித்த காற்றுக்கு ஈரப்பதம் இல்லாது போயிருக்கும். திசை கடக்கும் ஓர் இசை நதியின் தோற்றுவாய் போல பஞ்சு அருணாசலத்தின் பங்களிப்பு தமிழ்த் திரைக்கு அமைந்திருக்கிறது.

வில்லன் நடிகராக அறியப்பட்ட ரஜினிகாந்தை, படங்களின் மூலமும் வசனத்தின் மூலமும் சூப்பர் ஸ்டாராக உயர்த்திய பெருமையும் இவரையே சாரும் என்று இணையதளக் கட்டுரையொன்றில் எழுதியிருந்தார்கள். ரஜினிகாந்தின் அதிகபட்ச படங்களுக்கு வசனமெழுதிய பஞ்சு அருணாசலம், தயாரித்த படங்களின் பட்டியலைப் பார்த்தாலே அவ்வுண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

'புவனா ஒரு கேள்விக்குறி' படத்தில் சிவகுமாரின் கதாபாத்திரத்தை ரஜினியும் ரஜினி ஏற்ற கதாபாத்திரத்தை சிவகுமாரும் செய்திருக்க வேண்டுமென அன்றைய திரை விமர்சகர்கள் கருத்து தெரிவித்த போதும் அந்த மாற்றமே புதுமையென்று வாதிட்டுச் சாதித்தும் காட்டியவர் பஞ்சு அருணாசலம்.

'தம்பிக்கு எந்த ஊரு' படத்தின் 'காதலின் தீபம் ஒன்று' பாடல் மிகச் சொற்பமான நேரத்தில் உருவாக்கப்பட்ட பாடலென்று எஸ்.பி.பி. ஒரு நேர்காணலில் தெரிவித்தார். அப்படியும், அப்பாடலின் வரிகள் கவிரசம் சொட்டும் தனிச்சுவை



யுடையவை.

'நேற்று போல்
இன்று இல்லை
இன்று போல்
நாளை இல்லை
அன்பிலே வாழும்
நெஞ்சில்
ஆயிரம் பாடலே' - என்று காதல் மனதையும் இயல்பையும் இதமாக வடித்திருப்பார். 'என்னை நான் தேடித் தேடி உன்னிடம் கண்டுகொண்டேன்' என்ற சிந்தனை, பாடலுக்குள் தொலைந்த பலருக்கும் பரிச்சயம் - பளிச்சென்று சூரிய வெளிச்சத்தில் தமது பிம்பத்தை விசிறிவிடும் கண்ணாடியைப் போல.

'சுட்டாலு உன்னாரு ஜாக்கிரதா' என்ற தெலுங்குப் படத்தைத் தமிழில் 'போக்கிரி ராஜா'வாக எடுக்க விரும்பிய ஏவி.எம். சரவணன், அப்படம் தொடங்கும் போது அப்படத்தில் ரஜினி நடிக்கத் தயங்கிய நிகழ்ச்சியை 'அந்தநாள் ஞாபகம்' நூலில் விவரித்திருப்பார். நடிக்கத் தயங்கிய ரஜினிக்கு அப்படத்தின் வெற்றி எத்தகைய புகழைக் கொடுத்தது என்பதை நாமறிவோம். சரவணனே சொல்வதுபோல, அப்படத்தின் வசனங்கள் வெற்றிக்குப் பேருதவி புரிந்தன. பஞ்சு அருணாசலத்தின் திரைத்துறை அனுபவம், அசாத்தியமான பல வெற்றியைப் பலருக்கும் நல்கியிருக்கிறது. 'எங்க முதலாளி' திரைப்படத்தில்,

'மகத்தான உறவுகளை
மனதார நம்பியது
குற்றமில்லை
என் மனதில் பாவம்
சுமக்கவில்லை
இதுதான் உறவு என்றால்
இதுதான் உலகமென்றால்
போடா எதுவும்
தேவையில்லை'

- போகிற போக்கில் வாழ்வியலை விமர்சனம் செய்யும் வார்த்தைகளுக்குள் இம்மியும் பிசகாத ஈர்ப்பைப் பற்றி எழுதி எழுதி கைகள் ஓயலாம். 1963-ல் வெளிவந்த 'ஏழைப் பங்காளன்' திரைப்படத்தில் ஒரு பாடல்! 'தாயாக மாறவா தாலாட்டு பாடவா' என்பது பல்லவி. அதில்,

'செல்வத்தில் பிறந்திருந்தால்
சீராட்ட ஆளிருக்கும்
இல்லாத மனிதருக்கு
இயற்கை துணையிருக்கும்' - என்று எழுதியிருப்பார். 'இயற்கை துணையிருக்கும்' என்பதில் இயற்கையாக அவரிடமுள்ள அந்த அழகுகளை ரசிக்கலாம். 'மாங்கனி, அர்த்தமுள்ள இந்து மதம், திரைப்படப் பாடல்கள், பஞ்சு அருணாசலம் ஆகியவை தமிழகத்துக்கு கண்ணதாசன் விட்டுச் சென்ற நன்கொடை' என நா.காமராசன் வியந்தது மிகையன்று. கண்ணதாசன் சொல்லச் சொல்ல எழுதி, படியெடுத்த அனுபவம் மாத்திரமே இவரைப் பாடலாசிரியராக உருவாக்கியிருக்க முடியாது. அதையும் தாண்டி இவரிடமிருந்த நுட்பம், ஆர்வம் ஆகியவை பல துறைகளிலும் இவர் சிறக்கக் காரணம்.


• பஞ்சு அருணாசலம்

ரஜினி நடித்து வெளிவந்த 'மாப்பிள்ளை' திரைப்படத்தில் 'மானின் இரு கண்கள்' எனும் பாடல், முற்று முழுக்கச் சந்த நயத்தை முதன்மைப்படுத்தியது. அப்பாடலில் 'எந்தப்புறம் பார்த்தாலும் அந்தப்புரம் போலாக' என்று வரும். எந்தப்புறம், அந்தப்புரம் என்ற இரட்டைச் சொல்லில் அழகை வெளிப்படுத்தும் திறமே அலாதியான ப்ரியத்தை இவர்மீது கொள்ளத் தூண்டுகிறது. 'காற்றினிலே வரும் கீதம்' படத்திலும் அதே மாதிரியான அழகு! 'ஒரு வானவில் போலே... வந்தாய்' எனும் பாடலில்,

'கலைமானின் உள்ளம்
கலையாமல்
களிக்கின்ற கலைஞன்
எங்கே?' - என்று கேட்டிருப்பார். உள்ளம் கலையாமல் என்பதற்கு ஈடாக உள்ளம் கவிழாமல், உள்ளம் கரையாமல் என்றெல்லாம் சொல்லப் பார்த்து, கடைசியில் கலையாமலுக்கு நிகரான சொல்லை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

பொருத்தமான வரிசையில், பொருத்தமான சொல்லை இடுவதுதான் கவிதையென்று கருதுவோமானால் இது கவிதையன்றி வேறென்ன?

'சின்னஞ்சிறிய வண்ணப் பறவை' என்னும் 'குங்குமம்' திரைப்பாடலும், 'பருவமே புதிய பாடல் பாடு' என்னும் 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' திரைப்பாடலும் நெஞ்சைவிட்டு நீங்க மறுப்பவை. தெளிவான பட்டியல் தயாரித்தால், அதில் இடம் பிடிக்கும் அநேக வெற்றிப் பாடல்கள் இவருடையன என்பதை அறியலாம். பாடல் வெற்றி அடையும் அளவுக்குப் பாடலாசிரியர்கள் பிரசித்தி பெறாமைக்கு ஊடகப் பதிவுகளில் தொடர்ந்து வரும் அலட்சியப் போக்கே காரணம்! குறைந்தபட்சம் வானொலி, பத்திரிகைகளாவது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள், தமிழ்க் கொலைக்கு நடுவே கவிஞர்களின் பெயரையும் சொன்னால் தேவலாம்.

ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு மேலாக - கண்ணதாசன் தொடங்கி இன்றுவரை திரைத்துறையில் ஆளுமை செலுத்திய படைப்பாளிகளோடு மிக நெருங்கிய நட்போடு இருந்துவரும் இவர், தமது அனுபவங்களை நூலாக்கினால் வளரும் தலைமுறைக்கு அது வாசலாகும்.

'பூப்போல பூப்போல பிறக்கும்', என்னும் 'நானும் ஒரு பெண்' பாடலில்,

'மலர்போல சிரிக்கின்ற
பிள்ளை - கண்டு
மகிழாத உயிரொன்றும்
இல்லை
மடிமீது தவழ்கின்ற
முல்லை
மழலைச் சொல் இன்பத்தின்
எல்லை'

- ''குழல் இனிது' குறளை உள்வாங்கிக் கொண்டு படைக்கப்பட்ட இப்பாடல் போல பஞ்சு அருணாசலத்தின் அநேக பாடல்களில் உள்ள இலக்கியத் தெறிப்புகளை என்னால் விளக்க இயலும் என்றாலும் 'பக்க'த்துணை இல்லாத காரணத்தை முன்வைத்து நிறைவு செய்கிறேன். இந்நிறைவு எழுத்துக்கு மட்டும்; எண்ணத்துக்கு அல்ல.

(காற்று வீசும்)

வர்றான் செம்புலி!

''உறவுகளைக் கொச்சைப் படுத்தற படங்களோட வரிசைல கண்டிப்பா என் படம் சேராது'' என்கிறார் வி.என்.ஆர். 'சுஜா' படத்தின் ஹீரோ. 'உங்களுடைய முதல் படமான 'காதலே ஜெய'த்தை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையே' என்றால், ''உண்மை தான். அன்றைய சூழலுக்கு அந்தப் படம் ஒத்துவரவில்லை. ஆனால் இப்போது தயாராகிக் கொண்டிருக்கும் 'சுஜா' முற்றிலும் மாறுபட்ட படம். கனமான பாத்திரம் எனக்கு. டபுள் ரோல் பண்றேன். டைரக்டர் கணபதி வெளுத்து வாங்கியிருக்கிறார். இந்தப் படம் ரசிகர்களின் பாராட்டிலிருந்து நிச்சயம் தப்பாது'' என்றவர், சிக்கலில் இருக்கும் தமது 'செம்புலி' படம் குறித்தும் பேசினார்.

''செம்புலி பிப்ரவரிக்கு ரிலீஸாயிடும். மிருகங்களை வச்சு எடுத்ததால சென்சார்ல சின்ன பிரச்னை. இப்போ கிட்டத்தட்ட எல்லாம் சரியாயிடுச்சு'' என்று புன்னகைக்கிறார் வி.என்.ஆர்.

- விக்டர்



• 'சுஜா' படத்தில் வி.என்.ஆர்...

மெடல்களின் கனம் தாங்காமல் சற்றுக் குனிந்தபடிதான் நிற்க முடிகிறது அவர்களால். அவர்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் கோப்பைகளால், நமக்கும் அவர்களுக்குமான தூரம் அதிகமாகத் தெரிகிறது. வெவ்வேறு துறைகளில் விளையாட்டில் சாதனை புரிந்துகொண்டிருக்கும் முகப்பேர் டி.எஸ்.கிருஷ்ணா நகர் வேலம்மாள் பள்ளியின் மாணவிகள்தான் அவர்கள். அப்ஸரா, துர்கா, உத்ரா... மாநில, தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பலமுறை பங்குபெற்ற இவர்களின் பேச்சில் ஆர்வத்தின் சாயலோ, வெற்றியின் அலட்டலோ இல்லை. பரீட்சைக்குப் படிப்பதுபோல கவனமாய், மெலிதாய்ப் பேசுகிறார்கள்.



• அப்ஸரா

ஒன்பதாம் வகுப்பும் படிக்கும் அப்ஸரா, வாள்சண்டை (fencing) வீராங்கனை.

"இது ஒரு வித்தியாசமான விளையாட்டு. மின்சார உபகரணங்களை வைத்துத்தான் விளையாட முடியும். ரொம்ப காஸ்ட்லியான, அதிகப் பயிற்சி தேவைப்படுவது. இதில் வேகம் ரொம்ப ரொம்ப முக்கியம். (வாளைச் சுழற்றிக் காட்டுகிறார். நமக்கு வயிறு கலங்குகிறது.) தமிழ்நாடு கோச் விஸ்வநாதன் சார்தான் எனக்கும் கோச்" என்னும் அப்ஸரா, பென்சிங்கில் மாநில, தேசியப் போட்டிகளில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் பலவற்றைத் தட்டி வந்தவர். தமிழகத்திலிருந்து சென்று ஒரே போட்டியில், மூன்று மெடல்களைத் தொடர்ந்து வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒலிம்பிக் மெடலிஸ்ட் ஆவதும், ஐ.ஏ.எஸ். படிப்பதுதான் இவரின் கனவுகள்.



• துர்கா

துர்காவின் பேச்சைப் பார்த்தால், பள்ளியில் படிக்கிற பெண் மாதிரித் தெரியவில்லை. ஏதோ இமயமலை அடிவாரத்திலிருந்து வந்தவர் போலப் பேசுகிறார்.

"யோகத்தில் எட்டு நிலைகள் இருக்கின்றன. யமா, நியமா, ஆசனா, பிராணாயாமா, பிரத்தியாகாரம் உள்ளிட்டவற்றில்... எட்டாவது நிலைக்குப் போவதற்கான ஒன்றுதான் ஆசனம். மொத்தம் 84 லட்சம்

ஆசனங்கள் உள்ளன" என்றவரிடம் 'நீங்கள் எத்தனை ஆசனங்களைச் செய்வீர்கள்?' என்றால்,

"நான் ஆயிரம் ஆசனங்கள் வரை செய்வேன். யோகாவில் ஆரம்பமும், முடிவும் ஒரே மாதிரி இருக்க வேண்டும்; கால அளவில் வித்தியாசம் இருக்கக் கூடாது. மூச்சு, முகபாவமும் ரொம்ப முக்கியம்" என்கிறார்.

'பத்தாவது படிக்கும் உங்களுக்குள் இத்தனை விஷயங்கள் எப்படி?'

"என் அம்மா ஒரு யோகா டீச்சர். தெரிந்த மற்றும் பக்கத்திலுள்ள குழந்தைகளுக்கெல்லாம் யோகா சொல்லித் தருகிறார். அதுதவிர, நிறைய யோகா பற்றிய புத்தகங்கள் என் அம்மாவிடம் உண்டு. அந்தப் புத்தகங்களும் அம்மாவிடம் யோகா பற்றிய சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வதும்தான் எனக்கு பொழுதுபோக்கே" என்று சிரிக்கும் துர்கா, 'யோக நக்ஷத்திரா' விருது பெற்றவர். SGFI (School Games Federation of India) மூலம் யோகாவுக்காகத் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட அளவில் 6 குறைவு. அளந்துதான் பேசுகிறார்.

"தினமும் எட்டு மணி நேரம் பயிற்சி செய்கிறேன். தூங்கும் நேரம், படிக்கும் நேரம் தவிர பிராக்டீஸ்தான் எனக்குப் பொழுதுபோக்கு.

சர்வதேச தரப்புள்ளியில் 2028 புள்ளிகள் பெற்றுள்ளேன். வரும் அக்டோபர் 18, 19 தேதிகளில் நடைபெறப் போகும் உலக யூத் க்ளப் சாம்பியன்ஷிப் போட்டியே என் கண் முன்னால் இருக்கிறது. நிச்சயம் சாதிப்பேன்" என்னும் உத்ரா, மாநில அளவில் இரண்டாமிடம் பெற்றவர். தேசிய அளவில் 17 வயதுக்குட்பட்டவர்கள் பங்குபெறும் விளையாட்டில் சாம்பியன் பட்டம் வென்றவர்.

அப்ஸரா, துர்கா, உத்ரா... இந்த மூவரின் வெற்றிக்குப் பின் பெற்றோரும், நண்பர்களும் இருப்பதுபோலவே பள்ளி நிர்வாகமும் பக்கபலமாக நிற்கிறது. மூவ

வேலம்மாளின் த்ரீ ரோஸஸ்!

முறையும், மாநில அளவில் மூன்று முறையும் சாம்பியன்ஷிப் பட்டம் பெற்றுள்ளார்.



• உத்ரா

அப்பாவின் நண்பர் ஒருவரால் ஏழு வயதில் ஆரம்பமான உத்ராவின் செஸ் அத்தியாயம், இன்று மாவட்டம், மாநிலம், சர்வதேசம் என நீண்டு கொண்டே போகிறது. இவரின் விரல்களில் உள்ள மூவ் (move), வார்த்தைகளில் ருக்கும் இலவசக் கல்வி வழங்கியும், சிறப்பு வகுப்புகள் எடுத்தும், இவர்களது முன்னேற்றத்தில் துணை புரிகிறது.

- சிபிமனு

படங்கள் : பொள்ளாச்சி சுந்தரம்

திருமாவின் ஆட்டோகிராஃப்!

அன்றைய தினம் காலை சென்னை மாநகரின் சுவர் இருந்த இடங்களில் எல்லாம் தொல்.திருமாவளவன் நடிக்கும் 'ஆட்டோ கிராஃப்-II' படத் தொடக்க விழாவின் அறிவிப்பு போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது.

திருமாவளவன் சைக்கிளில் ஒரு காலைத் தரையில் ஊன்றியபடி நின்றிருக்க, அந்தச் சைக் கிளின் முன், பின், பக்கவாட்டுப் பகுதிகளில் ஏகப்பட்ட கட்சிகளின் கொடிகள். எல்லாமே அவர் முன்பு இருந்த, இப்போது இருக்கிற, இனி இருக்கப் போகிற கட்சிகளின் கொடிகள்.

'சென்னை அறிவாலயத்தில் இன்று பாடல் பதிவுடன் படத் தொடக்க விழா. கலைஞர் தமது பொற்கரங்களால் குத்து விளக்கு ஏற்று கிறார். வசனமும் அவரே. கதை, திரைக்கதை, இயக்கத்துடன் கதாநாயகனாக நடிக்கிறார் திருமாவளவன். அப்பாவிப் பொதுமக் களே வருக! வருக!' என்று அறிவித்தது போஸ் டர்.

அன்று காலை பத்து மணிக்கு அறிவாலயம் நிரம்பி வழிந்தது. கலைஞர் குத்துவிளக்கு ஏற்றி னார். முதல் காட்சிக்கு தயாநிதி மாறன் 'கிளாப்' அடித்தார். திருமாவளவன் சைக்கிளை மிதித்த வாறு கிளம்ப, அவருக்கு முன்னால் கேமரா பயணித்தது. பின்னணியில் பாடல் ஒலித் தது-

'ஞாபகம் வருதே ஞாபகம் வருதே...
தேர்தலுக்குத் தேர்தல் கூட்டணி மாறிய
நினைவுகள் எல்லாம் ஞாபகம் வருதே...

ஏதோ ஒரு தொகுதியை இழந்ததுபோல
ஏதோ மீண்டும் கிடைத்ததுபோல
தாயே என்னைத் துரத்தியதுபோல
தந்தை என்னை அணைத்ததுபோல
ஞாபகம் வருதே ஞாபகம் வருதே...

முதன் முதலாகத் தாவிய கட்சி
முதன் முதலாகத் தொலைத்த
கொள்கை
முதன் முதலாகப் பேசிய வீரம்
முதன் முதலாக விட்ட
வெட்கம்
முதன் முதலாகக் கிடைத்த
சீட்டு
முதன் முதலாக வைத்த
வேட்டு...
ஞாபகம் வருதே ஞாபகம்
வருதே...

படப்பிடிப்பு முடிந்ததும் பத்திரிகையாளர்கள் திருமாவள வனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் கேட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும்:

'இப்படி அடிக்கடி சினிமாவில் நடிக்க ஆரம்பித்து விடுகிறீர்களே, கட்சியை யார் கவனிப்பது?'

''அதை அருமைத் தலைவர் கலைஞரும் அவரது தொண்டர்



களும் கவனித்துக்கொள்வார்கள். இந்தப் படத்தை என் கூட்டணித் தலைவர்களுக்கும் உயிரினும் மேலான சிறுத்தைகளுக்கும் பரிசாகத் தரப்போகிறேன்."

'இந்தப் படத்தில் நீங்கள் பல்வேறு வித்தியாசமான தோற்றங்களில் நடிக்கப் போவதாகப் பேசிக் கொள்கிறார்களே?'

"ஆமாம். கமல்கூட தசாவதாரத்தில் பத்து வேடங்களில்தான் நடிக்கிறார். நான் இந்தப் படத்தில் இருபது வேடங்களில் நடிக்கிறேன். அதில் பத்து வேடங்கள் என்ன என்பது எனக்கே கடைசி வரையில் தெரியாது."

'இதற்கு முன்பு நீங்கள் நடித்த 'அன்புத் தோழி' என்ன ஆனது?'

"முடிந்து போனதைப் பற்றிப் பேச வேண்டாம். இனி நடக்கப் போவதைப் பற்றிப் பேசுங்கள்."

"இந்தப் படத்துக்கு ஏன் ஆட்டோகிராஃப்-II என்று பெயர் வைத்தீர்கள். தமிழில் வைத்திருந்தால் வரிச்சலுகை கிடைத்திருக்குமே."

அப்போது இடையே குறுக்கிடுகிறார் முதல்வர் கருணாநிதி...

"ஆட்டோகிராஃப் என்பதே தமிழ் வார்த்தைதான். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தமிழ் நூல்களில் இந்த வார்த்தை இருக்கிறது. ஆங்கிலேயர்கள் அந்த வார்த்தையைக் களவாடி தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டுவிட்டார்கள். ஆகவே இந்தப் படத்துக்கு வரிவிலக்கு அளிப்பது மட்டுமின்றி, இந்தப் படம் வெளியிடப்படும் திரையரங்குகளுக்கும் பத்து ஆண்டுகள் வரிவிலக்கு அளிக்கப்படும்" என்கிறார்.

கரகோஷத்தில் அறிவாலயமே கிடுகிடுக்கிறது. திருமாவளவன் மெய் மறந்து நின்று விடுகிறார். பின்னணியில் அடுத்த பாடல் ஒலிக்க ஆரம்பிக்கிறது...

'ஒவ்வொரு தேர்தலுமே
சொல்கிறதே...
இளிச்சவாய் மக்கள் உள்ளவரை
வெற்றியே...'

- யுவராஜ்



'சுபஸ்ரீ' போட்ட

இடம் : நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே சுமார் 20 கி.மீ. தூரத்தில் உள்ள கவுண்டம்பாளையம்.

நாள் : ஆகஸ்ட் 26, 2006, சனிக்கிழமை.

என்ன நடந்தது இங்கே?

மின் உற்பத்தித் தயாரிப்பில் ஒரு புதிய திருப்புமுனையே நிகழ்ந்தது.



நீர், காற்றாடி ஆலைகள் எனத் துவங்கி, குப்பைக் கழிவிலிருந்தும் மின்சாரம் தயாரித்துவிட்டோம். ஆனால் கோழியின் எச்சத்திலிருந்து மின்சாரம் தயாரித்த செய்தியைக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

விவசாயியாக, கோழிப் பண்ணை முதலாளியாக, யோசித்து யோசித்துச் செயல்பட்ட துரைராஜுவின் நீண்ட காலக் கனவு நனவான திட்டம் இது. சுபஸ்ரீ பயோ எனர்ஜீஸ் நிறுவனத்தை இதற்காகவே உருவாக்கி, நிர்வாக இயக்குநர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார் துரைராஜு.

ஏன் திருச்செங்கோட்டில் போய் இந்த நிறுவனத்தை அமைக்க வேண்டும்?

நாமக்கல் மாவட்டத்தில் கோழிப் பண்ணைகள் ஏராளம். இந்த மாவட்டத்தின் சுற்று வட்டாரத்தில் மட்டுமே சுமார் இரண்டு கோடிக்கு மேல் கோழிகள், பண்ணைகளில் முட்டையிட்டு வருகின்றன.

மிகப்பெரிய அளவில், நீண்ட தொழில் கூடங்கள் போல் அமைந்துள்ள இப் பண்ணைகளில், தீவனம் உண்டு, நீர் குடித்து, முட்டையும் இட்ட கோழிகளின் கழிவு ஒவ்வொரு பண்ணையிலும் கீழே குவிக்கப்பட்டு, அதனால் சுற்றுச் சூழலுக்கும் கேடு வரக்கூடிய நிலை உண்டாயிற்று.

பார்த்தார் துரைராஜு. கோழிகளின் எச்சத்திலிருந்து மின்சாரம் தயாரித்துவிட்டால் மட்டும் போதாது... மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட கோழிக் கழிவிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கும் தொழில் முறையையும் கண்டறிந்தார்.

ஆக, ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் இந்த முயற்சியில் ஈடுபட்டார் துரைராஜு. சுபஸ்ரீ பயோ எனர்ஜீஸ் நிறுவனம் அப்போதுதான் உருவாயிற்று.

ஆசியாவிலேயே கோழிக் கழிவிலிருந்து இந்த அளவுக்குப் பெரிதாக மின்சாரம் தயாரிக்கும் திட்டம் முன்னெப்போதும் இருந்ததில்லை. எனவே மரபுசாரா எரிசக்தித் துறையும் துரைராஜுவுக்குப் பச்சைக் கொடி காட்டியது.

முற்றிலும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியிருப்பதுதான் இந்தத் தொழிற்சாலையின் கூடுதல் சிறப்பு.

முன்னோட்ட திட்டம் ஒன்றை 2000ஆம் ஆண்டில் தொடங்கி, தொடர்ந்து பல ஆய்வுகளைச் செய்து, கோழி எச்சத்திலிருந்து பயோகாஸ் தயாரித்து அதன் மூலம் இன்ஜின்களை இயக்கச் செய்தார்கள்.

மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தித் துறையினரின் ஆறு கோடி மானியம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சேலம் கிளையின் 14 கோடி ரூபாய் கடனுதவி, சுபஸ்ரீ பயோ எனர்ஜீஸ் முதலீடு உட்பட, சுமார் 40 கோடி ரூபாய் வரை, இத்தொழிற்சாலையில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மின்சக்தி உற்பத்தித் திட்டத்துக்கு தினமும் 325 டன் கோழிக் கழிவு பயன்படுத்தப்படுகிறது. ஆரம்பத்தில் 2 மெகாவாட் மின்சக்தி உற்பத்திக்குத் திட்டமிடப்பட்டாலும், அதன் திறனை 3.5 மெகாவாட் அளவுக்கு விரைவிலேயே அதிகரிக்கும் திட்டமும் வைத்திருக்கிறார்கள்.

சக்சஸ் ஸ்டோரி

உற்பத்தியாகும் மின் சாரத்தை, தமிழ்நாடு மின்சார வாரியத்துக்குக் கொடுத்துவிட ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது சுபஸ்ரீ நிறுவனம்.

கவுண்டம்பாளையத்தில் சுமார் 60 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த மின் உற்பத்தி நிலையம், வெற்றிகரமாக இயங்க, மத்திய அரின் மரபுசாரா எரிசக்தித் துறையே காரணம் என்கிறார் நிர்வாக இயக்குநர் துரைராஜ். "அவர்கள் என் முயற்சியையும், ஆர்வத்தையும் பார்த்துப் பாராட்டினார்கள். அதற்குண்டான உதவித் தொகையை வழங்க முன்வந்தார்கள்!" என்கிறார் அடக்கமாக.

ஒரு சிறு மின் உற்பத்தி நிலையத்துக்கு 60 ஏக்கர் நிலம் எதற்கு என்று கேள்வி எழுவது இயற்கை. அதற்குப் பதிலும் தயாராகவே வைத்திருக்கிறார் துரைராஜ்.

"மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட கோழி எச்சத்திலிருந்து, இயற்கை உரம் தயாரிக்கும் தொழில்நுட்ப முறையையும் கண்டுபிடித்திருக்கிறோம். இதன் மூலம் தினமும் 150 டன் அளவுக்கு இயற்கை உரம் தயாரிக்க முடியும்."

விவசாயத்துக்கும் தோட்டப் பயிர்களுக்கும் தேவையான பி.எஸ்.ஓ.-6 என்ற இயற்கை உர விற்பனையையும் அன்றே தொடங்கி விட்டார்கள் இந்த ஆர்வலர்கள்.

இந்த இயற்கை உரம் மேம்படுத்தப்பட்டு, எல்லாப் பயிர்களுக்கும் தேவைப்படும் சத்துகள் கொண்டதாகத் தயாரிக்கப்படுகிறது.

பி.எஸ்.ஓ.-6 இயற்கை உர உற்பத்தியை முன்னாள் சி.பி.ஐ. இயக்குநரும், தம்மை ஒரு விவசாயி என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுபவருமான டி.ஆர்.கார்த்திகேயன் தொடங்கி வைத்தார்.

இடுபொருள்களை எந்த நிலையிலும் பரிசோதிக்க சோதனைக்கூடம், கம்போஸ்ட் செய்யும் வசதி எல்லாமே இங்கு இருக்கின்றன. உரத்தை டைஜஸ்டரில் செலுத்தி, அதன் மாசுகளை அகற்றிவிட்டு, ஆர்கானிக்


பிள்ளையார் சுழி!

சாதனங்களை அதோடு கலந்து செறிவூட்டி, அதைச் சக்தி வாய்ந்த உரமாக ஆக்குகிறார்கள். உலர வைக்க ஐந்து ஏக்கர் பரப்பளவில் களம் - நீண்ட சதுரமாகத் தெரிகிறது. டைஜஸ்டரில் செலுத்தப்பட்ட உரத்தில், அதிகமாக உள்ள காஸ் வெளியேறிவிடுகிறது (இந்த டைஜஸ்டரில் மணிக்கு 7 முதல் 8 டன் வரை ஒரு சமயத்தில் உரத்தைச் செலுத்தலாம்.)

'க்யோடோ ப்ரோகோல்' என்ற சர்வதேச அறிக்கையின்படி, வளர்ந்த நாடுகள் தங்கள் மாசு அளவைக் குறைக்க முடியாத தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது, வளரும் நாடுகள் அந்தக் குறையைப் போக்கும் தொழில்நுட்பத்தை மேற்கொண்டு செயல்படுத்தினால், அதற்கு உரிய ஊக்கத் தொகையைக் கணக்கிட்டு வழங்கிவிட வேண்டும். அந்த வகையில் பார்த்தால், இத் தொழிற்சாலை மாசுக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வந்திருப்பதால், அதற்கு உண்டான ஊக்கத் தொகை கிடைக்க வழி இருக்கிறது.

- சாருகேசி

படம் : யோகா



நடக்குமென்பார்;

மேஷம்

உற்சாகமான வாரம். தனம், கல்வி, வாக்கு மேலோங்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பணக்கஷ்டம் வராது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன சந்தோஷம் கிட்டும். ஆடை, ஆபரண, அலங்காரப் பொருட்கள் சேரும். வீடு மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் நல்ல சன்மானம் கிட்டும். ஆஞ்சநேயர் சுவாமியை சனிக்கிழமை தோறும் வழிபட்டு வருதல் நற்பலனை அளிக்கும்.

ரிஷபம்

இருள் போய் வெளிச்சம் வரும் வாரம். மனத்தில் தைரியமும், துணிவும் ஏற்படும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும். பணச் சிக்கல் தீரும். பொருள் வரவு ரெடி. உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். நண்பர்களால் அனுகூலம் ஏற்படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். தடை விலகித் திருமணம் நடக்கும். ராகு/கேது வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

மிதுனம்

மகிழ்ச்சிகரமான வாரம். சுபகாரியம் நடக்கும். தன விருத்தி ஏற்படும். பணக் கஷ்டம் இராது. தெய்வ பிரார்த்தனை நிறைவேறும். செலவுகள் சுபமானதாக இருக்கும். குழந்தைகள் வழியில் மகிழ்ச்சி நிலவும். நண்பர், உறவினர் அனுகூலம் ஏற்படும். வேலையில் நல்ல பெயர் ஏற்படும். பரிகாரம் தேவை இல்லை.

கடகம்

மனக்கவலை தீரும் வாரம். பொருளாதாரச் சிரமங்கள் குறையும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கல்வியில் கவனம் செலுத்தவும். யாருக்கும் ஜாமீன் போடக்கூடாது. கணவன், மனைவிக்குள் அனுசரணை தேவை. வீடு, வாகனம் மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்து வருதல் நற்பயனை அளிக்கும்.

சிம்மம்

புத்துணர்ச்சியான வாரம். மனக்குழப்பம் தீரும். பொருளாதாரக் கஷ்டம் விலகும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். வராத பாக்கிகள் வந்து சேரும். உடல் ஆரோக்கியம் சீராகும். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. செலவுகள் பயனுள்ளதாக இருக்கும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் தரும்.

கன்னி

மனப்பிரம்மை தீரும் வாரம். பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். பணவிருத்தி ஏற்படும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். திருமணத் தடை விலகும். புதிய வேலைவாய்ப்பு வந்து சேரும். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். பரிகாரம் வேண்டாம்.

துலாம்

மேன்மையான வாரம். குடும்ப உறவு நன்றாக இருக்கும். பணக்கஷ்டம் இருக்காது. உடல்நிலை நன்றாக இருக்கும். கணவன், மனைவி உறவு சிறப்பாக இருக்கும். செலவுகள் பயனுள்ளதாக இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் ஏற்படும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வரவும்.

விருச்சிகம்

பணச் செலவான வாரம். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். குழந்தைகளால் மன சந்தோஷம் கிட்டும். படிப்பில் முன்னேற்றம் காணலாம். நண்பர், உறவினர்களால்

தஞ்சை பரத்வாஜ்



ராசிபலன்

நடக்கும்!

15.10.2006 முதல் 21.10.2006 வரை

ஆதாயம் கிட்டும். புதிய தொழில் முயற்சி கைகூடும். வேலை மாற்றம் ரெடி. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அயல் நாட்டு அழைப்பு கிட்டும். ஆடை, ஆபரணப் பொருட்கள் வாங்குவீர்கள். குரு/ராகு/கேது வழிபாடு உத்தமம்.

தனுசு

சுபகாரியம் கைகூடும் வாரம். மன சந்தோஷம் மிகுதியாக இருக்கும். கல்வியில் முன்னேற்றம் கிட்டும். புண்ணிய ஸ்தலம் செல்ல நேரிடும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வருதல் நல்லது.

பரத்வாஜ் பதில்கள்
அடுத்த இதழில்...



மகரம்

எதிலும் கவனமுடன் செயல்படுவது நற்பலனைத் தரும். வேலைப்பளு அதிகரிக்கும். கூட்டாளிகளால் இடையூறுகள் ஏற்படும். வாக்குவாதம் தவிர்க்கவும். உடல் நிலையில் கவனம் தேவை. இல்லற வாழ்வில் விட்டுக் கொடுத்து அனுசரணையாக நடந்துகொள்ளவும். ஜாமீன் போடக்கூடாது. ராகு/கேது/சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கும்பம்


முன்னேற்றமான வாரம். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். பண வசதி பெருகும். வேலையில் நற்பெயர் கிட்டும். கல்வி வளம் மேலோங்கும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வந்து அணுகும். மனச்சலனம் தீரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு/கேது வழிபாடு நல்லது.

மீனம்

எண்ணிய எண்ணங்கள் யாவும் வீட்டுக் கதவைத் தட்டும். மனத்தில் புத்துணர்ச்சி ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராகும். வராத பாக்கி வசூலாகும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும். வெளிநாட்டு வியாபாரம் நற்பலனைத் தரும். கடன் தொல்லை நீங்கும். பரிகாரம் தேவை இல்லை.

"ஓடக்கூடாது! நிதானம் அவசியம்! காலையில் பூஜையிருப்பதால் செங்கற்களும் மணலும் வேண்டும். சாக்குப்பையில் ஒவ்வொன்றாக செங்கற்களை எடுத்து வை! பிறகு மணல் அள்ளிப் போடலாம். இங்கேயே வைத்துவிட்டுப் போனால் யாராவது எடுத்து வருவார்கள்" லட்சுமி பாட்டியின் அறிவுரை பரத்தைத் தடுத்து நிறுத்தியது.

கிராமத்தில் பாட்டியுடன் கோயிலுக்குச் சென்ற அந்த இளந்தளிருக்கு, பழக்கப்பட்ட நகர வாழ்க்கையிலிருந்து ஒரு மாறுதல். அதிக ஆட்கள் அரவமும் வாகனங்களின் இம்சையுமில்லாத சாலையில் விரைய ஓர் இயற்கையான நாட்டம்... பாட்டியின் மெது நடை, பொறுக்க முடியாமல் தாத்தாவுடன் அமர வேண்டுமோ என்ற உள்ளத் தவிப்பும்கூட... பாட்டியின் கைப்பிடி இறுகினாலும் அதில் இருந்த பாசத்தை அவனால் உணர முடிந்தது; வலி தெரியவில்லை...



"பாட்டி இந்தப் பூஜை எதற்கு?"

"உன் தாத்தாவுக்கு எழுபது வயது முடிந்துவிட்டது. எனக்கு அறுபத்தைந்து வயதாகிறது. பீமரத சாந்தி என்று சொல்லி எங்களின் ஆயுள் அபிவிருத்திக்கு உன் தகப்பனார் முதல் சித்தப்பாக்கள் வரை எல்லோரும் சேர்ந்து செய்கிறார்கள்."

அவர்களின் விருப்பம் அது என்று

சீதாராம்

போட்டிக் கதை



முதுமையின் இறைஞ்சல்...

சொல்லாமல் சொல்லிப் பாட்டி சிரித்தது. பரத்துக்குப் புதுமையாக இருந்தது.

"இந்தச் செங்கற்களை நான்கு புறங்களிலும் அடுக்கி வைத்துவிட்டு நடுவில் மணலைப் பரப்பி, வறட்டிகளையும் சுள்ளிகளையும் நடுவில் இட்டு, மந்திரத்தைச் சொல்லி அக்னியை எழுப்புவார்கள். அந்தச் சூடு தரைக்குப் பரவாது; தரையும் கெடாது."

கற்களைப் பொறுக்கியபடியே, தம் மனத்தில் இருந்த கேள்விக்குப் பதில் சொல்லிய பாட்டியின் சாதுர்யத்தை பரத் ரசித்தான்.

கண்களை அகல அகல விரித்துக் கொண்டு அவர் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தான். கோயில் பிராகாரத்தைச் சுற்றி வரும்போதுதான் அவரிடம் எவ்வளவு அமைதி...! லிங்கம், நாயன்மார்களைப் பற்றித் தொடர்ந்து கேட்டபோதெல்லாம் எரிந்து விழாமல் பதிலளித்துவிட்டு, நாம் புரிந்துகொண்டோமா என்று எப்படி கவனிக்கிறார்...!

பாட்டி அதிகம் படித்ததில்லை என்று கேள்விப்பட்டிருந்தான். ஆனால் அவர்தான் எவ்வளவு விஷயங்களைக் கோர்வையாக நமக்குத் தெரிவிக்கிறார்...!

வீட்டிலும் மற்றவர்களைப்போல் தொலைக்காட்சிப் பெட்டியை நாடுவதில்லை. டீ.வி. பார்க்காமல் இவரால் எப்படி இருக்க முடிகிறது...! சந்தேகம் அவன் மனத்தில் எழாமல் இல்லை.

'புழுக்கம்', 'காற்றேயில்லை!' என்று வந்தவர்கள் எல்லாம் அலுத்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருக்கும்போது எந்தவிதச் சலனத்தையும் அந்த மூதாட்டியிடம் அவன் காணவில்லை.

பூஜை அறையில் பஞ்சு மாலை செய்வது, ஸ்லோகம் படிப்பது முதல் கிழிந்த தம் துணிகளைத் தாமே தைத்துக்கொள்வது, சமையல் அறையில் அனைவருக்குமான உணவு சமைத்துப் பரிமாறுதல் வரை தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த பாட்டியை இந்த இரண்டு நாட்களில் சற்றும் சோர்ந்துபோன நிலையில் பரத் பார்க்கவில்லை.

'நீ சாப்பிட்டது போதும்' என்று அம்மாகூட சலிப்படைவது உண்டு. ஏதேதோ கதைகளைச் சொல்லித் தன் வாயில் சோற்றை அடைக்கும் பாட்டிதான் எவ்வளவு பொறுமைசாலி...! வெறும் சாதாரண நூல் புடைவையில் எளிமையாக எப்படிக் காலம் தள்ளுகிறார்...!

'இவருக்கென்று ஆசைகள், தேவைகளே இல்லையா...!' பரத்துக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம்!

அப்படிப்பட்ட பாட்டி மனம் கோண நடப்பது தவறு என்று பரத்தின் உள்மனம் சொல்லத் தொடங்கியது.

இன்னும் நாலைந்து நாட்களில் இந்தக் கிராமத்தையும் பாட்டியையும் விட்டுவிட்டு, பெற்றோருடன் ஊர் திரும்ப வேண்டும் என்ற நினைப்பு வேறு பரத்துக்கு வெறுப்பைத் தந்தது. மறுநாள் பாட்டியைத் திருமணக் கோலத்தில் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் பரத்துக்குத் தூக்கமே வரவில்லை. 'என்னையும் விரைவில் எழுப்பிவிடுங்கள்' என்று பத்து முறையாவது தாயாரிடம் சொல்லிவிட்டுத்தான் படுத்துக் கொண்டான்.

விடியற்காலையில் எழுந்த மந்திர சப்தம் பரத்தை ஓர் உலுக்கு உலுக்கியது. 'வேத கோஷம்தான் மனதுக்கு எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது.. மந்திரத்துக்கு அழகே அந்தச் சப்தம்தான்' என்று பாட்டி எவ்வளவு அழகாக கோயிலைச் சுற்றி வரும்போது குறிப்பிட்டார்..! அந்தச் சூழலில் ஒரு நிமிடம் மனதைப் பறிகொடுத்தவன், அரக்கப் பறக்கக் குளித்துவிட்டு பூஜை நடக்கும் இடம் நோக்கி விரைந்தான்.

சமித்துக்கள் எரியும்போது எழும் புகை, கண்களுக்கு மிகவும் நல்லது என்ற பாட்டியின் வார்த்தைகள் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்க, அருகில் சென்று அமர முயன்றான்.

"நெருப்புப் பொறி பறக்கும்! சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொள்!" அவனை எச்சரித்த புரோகிதருக்குத் தூக்கக் கலக்கமில்லாமல் அவன் வந்ததே நம்ப முடியாததாக இருந்தது.

"நமஸ்தே!" என்றவனை மேலும் ஆச்சரியத்துடன் நோக்கினார்.

"வடநாட்டில் வளரும் பேரன்! அங்கிருக்கும் பழக்கம்போல் பெரியவர்களைப் பார்த்ததும் வணக்கம் சொல்கிறான்!"

பாட்டி பரத்தைப் பெருமையுடன் அறிமுகப்படுத்திவிட்டு, அருகில் அமரச் செய்தார்.

"பதினெட்டோட பதினாறு சேர்ந்தா என்ன ஆகும்?"

"ஊரைவிட்டு ஓடிப்போகும்."

- எஸ்.கே. கலைவாணி



"நல்ல வளர்ப்பு!" என்ற சான்றிதமுடன் புரோகிதர் தலையை அசைத்தார்.

பரத் மௌனமாகப் பாட்டியின் தோற்றத்தைதான் ரசித்துக் கொண்டிருந்தான்.

அந்தச் சிவப்புப் புடைவையில் காது தோடும் மூக்குப் பொட்டும் மின்ன அவர் எவ்வளவு அழகாக இருக்கிறார்... முகச் சுருக்கங்கள் இல்லை. செயற்கை அலங்காரங்களும் கிடையாது. பெரிய குங்குமப் பொட்டும் இலேசான மஞ்சள் பூச்சும் அவரிடம் ஒரு தெய்வீகக் களையை உண்டு பண்ணியிருந்தன. கூப்பிய கரங்களும் கழுத்து மாலையுமாக தாத்தாவின் அருகில் சாந்தமாய் அமர்ந்திருந்ததைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

பூஜை முடிந்ததும் பேரனை மற்ற குழந்தைகளுடன் அக்னியை வலம் வரச் சொல்லி நமஸ்கரிக்கவும் செய்தார்.

வேகவேகமாக அவர் சொன்னபடி முடித்துவிட்டு வந்த பரத்தைத் தம் பக்கம் இழுத்துக் கொண்டார்.

"நன்றாக வேண்டிக் கொண்டாயா?"

தலையை அசைத்தான் பரத். "நீங்கள் கூறியதுபோல் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்காமல் நன்றாக விளையாடுவதற்கும் படிப்பதற்குமான மனநிலை வரவேண்டும் என்று பொதுவாக வேண்டிக் கொண்டேன்."

கற்பூரம்போல் ஒருமுறை சொன்னதை அப்படியே பிடித்துக் கொண்ட பேரனை "சமர்த்து!" என்றபடி அணைத்துக் கொண்டார்.

ஒருநிமிடம் மௌனமாக இருந்த பரத், சிறிது தயங்கினாலும் பாட்டியை உரிமையுடன் வினவினான்.

"பாட்டி! நீங்களும் சுற்றி வந்து நமஸ்கரித்தபோது மனத்தில் எதையோ வேண்டிக்கொண்டது போல் இருந்தது. என்ன வேண்டிக் கொண்டீர்கள்?" பாட்டி திடுக்கிட்டாள்.

"அப்படி ஒன்றும் இல்லை! எனக்கென்ன வேண்டும் இந்த வயதில்?"

"இல்லை! ஏதோ வேண்டிக்கொண்டீர்கள் என்பது எனக்குப் புரிந்தது. என்ன என்று எனக்கு மட்டும் சொல்லுங்கள்; பொய் சொல்லக்கூடாது என்று நீங்கள் தானே சொல்லித் தந்தீர்கள்!"

பாட்டியிடம் கற்றதைப் பேரன் அவருக்கே திருப்பிப் படித்தான்.



பாட்டியின் முகம்தான் பாவமாய் மாறியது. கூற வேண்டிய நிர்ப்பந்தம்.

பரத் கண்களில் அப்படி ஓர் ஆர்வம் மின்னியது.

"தாத்தாவை உன்னிடம் அழைப்பதற்கு முன் என்னை முதலில் உன்னிடம் கண்டிப்பாக அழைத்துக் கொள் என்று கடவுளிடம் வேண்டிக் கேட்டுக் கொண்டேன்."

பரத் கண்களில் திடீரென ஒரு மருட்சி! ஒருவித அச்சம்!

"இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்கக்கூடாது என்று நீங்கள் தானே சொன்னீர்கள்!"

"ஆமாம்! உன் வயதில் உனக்குக் கேட்பதற்கு நிறைய இருக்கின்றன. எனக்கு இது மட்டும்தான் வேண்டும். அதுதான் மன நிறைவைத் தரும் என்பதால் அதை மட்டும் விரும்பிக் கேட்டுக் கொண்டேன்."

அந்த ஹோமமும் பூஜையும் நீண்ட ஆயுளுக்காகச் செய்வது என்ற கேள்விப் பட்டிருந்த பரத்துக்கு அவரது இறைஞ்சல் புதுமையாக இருந்தது. மனத்தில் மட்டும் ஒரு சங்கடம் ஆட்கொண்ட உணர்வு. மலங்க மலங்க விழித்துக்கொண்டு நின்றான்.

"வயதானால் புரிந்துகொள்வாய்!" பாட்டி அவன் தலையை அனுதாபத்துடன் வருடிவிட்டாள். பாட்டியின் வேண்டுதல் புரிந்ததோ இல்லையோ, அவரைப் பற்றி முழுதும் விளங்கியது போல் பரத்துக்குத் தோன்றியது.

வியப்புகள் மதிப்புகளாய் மாறிக் கொண்டிருந்தன. ●

நடிப்பு என் சாய்ஸ்!

தீபாவளிக்கு அதிரடியாக வருகிறான் தலைமகன். சரத்தின் நூறாவது படம். தமது வாழ்க்கையை ஒரு பத்திரிகையாளனாகத் துவங்கிய சரத்குமார், தலைமகனிலும் ஒரு பத்திரிகையாளராகவே பவனி வருகிறார். தீவிர படத் தயாரிப்பில் இறங்கிவிட்ட ராடன் நிறுவனத்தின் சார்பாக இப்படத்தைத் தயாரிக்கிறார் ராதிகா சரத்குமார். 'தலைமகன்' ஆரம்பிக்கப்பட்ட புதிதில் பாலாஜிதான் டைரக்டராக இருந்தார். படப்பிடிப்பு தாமதமாகவே பாலாஜி விலக, சரத்தே நடிப்போடு சேர்த்து இயக்கத்தையும் கவனிக்கிறார். நேர்மைக்கு உதாரணமாக இப்படத்தில் தோன்றும் சரத்குமார், வித்தியாசமான கெட்டப்பில் அசத்தியிருக்கிறாராம். குஷ்புவும் கே.எஸ்.ரவிக்குமாரும் கெஸ்ட் ரோலில் நடிக்க, நயன்தாரா ஹீரோயினாகி இருக்கிறார்.

தலைமகனுக்குப் பிறகு 'கண்ட நாள் முதல்' ப்ரியா இயக்கும் படத்தைத் தயாரிக்கவிருக்கும் ராதிகா, அடுத்தடுத்து கௌதம் மேனன், ரவிக்குமார், தினேஷின் இயக்கத்தில் ராடனை உயரத்துக்குக் கொண்டுபோகவிருக்கிறார். தலைமகனின் திரைக்கதையை இயக்குநர் சேரன் செதுக்கியிருக்க, பால்ஜே - ஸ்ரீகாந்த் தேவா இவரும் இசையமைத்திருக்கின்றனர். முழுக்க முழுக்க கமர்ஷியல் நோக்கில் படத்தைத் தந்திருப்பதாகக் கூறும் சரத், இயக்கத்தைவிட தமக்கு நடிப்பதில்தான் அதிகக் காதல் என்கிறார்.

- நந்தினி


STAR
VIJAY
சின்னத்திரை நட்சத்திரங்களின்
அதிரடி ஆட்டம்!
வெள்ளித்திரை நட்சத்திரங்களின்
அதிரடி தீர்ப்பு!!
GARNIER
FRUCTIS
ஜோடி no.1
VIJAY
வெள்ளி - சனி 8 PM
GARNIER FRUCTIS
RELIANCE Mobile
NOKIA
Connecting People
Coca-Cola
indya.com

கண்ணாடி கதவுகள்



பாமாவுக்கு முகூர்த்த புடைவையைத் தேர்ந்தெடுக்குமாறு மாப்பிள்ளை வீட்டார் ராதா வீட்டுக்குப் பட்டுப் புடைவைகளை அனுப்பி வைக்கின்றனர். புடைவையைத் தேர்ந்தெடுக்க பாமா வீட்டுக்குச் செல்கிறாள் ராதா. அங்கு கம்பெனியில் நடந்த ஒரு தவறுக்காக பாமா, ஷ்யாமை வரம்பு மீறித் திட்டிக் கொண்டிருக்கிறாள். ராதாவைப் பார்த்து பாமா அதிர்ச்சியடைய, ராதாவோ அதுபற்றிச் சிறிதும் கவலைப்படாமல் "ஷ்யாம் உனது கம்பெனியின் ஊழியர். அவரைத் திட்டுவது உனது உரிமை... இதைப் பற்றி நான் கேள்வி கேக்கவும் மாட்டேன்; கோபப்படவும் மாட்டேன்" என்று சொல்லிவிட்டு, தாம் தேர்ந்தெடுத்த புடைவையைக் காட்டி ராதாவிடம் ஒப்புதல் வாங்கிச் சென்றுவிடுகிறாள். 'என்னை இழந்த வருத்தத்தில் கம்பெனியில் தவறுகளைச் செய்கிறாய்... உன் மனைவியைப் பார்த்தாவது நல்ல விஷயங்களைக் கற்றுக்கொள்..' என்று பாமா சொல்ல, ஷ்யாம் அவமானமும், எரிச்சலும் அடைகிறான்.

மறுநாள் ராதாவுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருக்கிறது. பீரோவில் வைத்த முகூர்த்த புடைவை காணாமல் போய்விடுகிறது.




ஆசை

அதை எடுத்தது ஆனந்தாயிதான் என்பதை யூகித்த ராதா, முதல்முறையாக எரிமலையாகக் குமுறுகிறாள். 'வைத்த இடத்தில் முகூர்த்த புடைவை இல்லாவிட்டால் நடப்பதே வேறு' என்று எச்சரிக்கிறாள்.

அருண் வீட்டில் நிலைமை சிக்கலாகிவிடுகிறது. நகையைத் திருப்பித் தராவிட்டால் வீட்டில் நிம்மதி பறிபோய்விடும் என்பதை உணர்கிறான். அருணிடம் பணத்தை வாங்கிய புரோக்கர் காணாமல் போய்விடுகிறான். அவனைத் தேடி அலைகிறான் அருண். புரோக்கரையும் காணாமல், பணத்தையும் திரும்பப் பெற முடியாமல் கவிதாவைப் பார்ப்பதையே தவிர்க்கிறான்.

மகேஷை யதேச்சையாகச் சந்திக்கும் கல்பனா, 'ஏன் வீட்டுக்கு வருவதில்லை?' என்று கேட்க, மாதவன் தேஜாவின் மேல் முறையற்ற ஆசை வைத்திருப்பதையும், அதனால் தம்மை வரவேண்டாம் என்று சொல்லிவிட்டதையும் கூறுகிறான். கல்பனா அதிர்ச்சியடைகிறாள்.

தம் அதிர்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல், தேஜாவுக்கு உடனடியாக மாப்பிள்ளை பார்க்க வேண்டும் என்று மாதவனிடம் வற்புறுத்துகிறாள். தேஜாவின் ஜாதகப்படி அவளுக்குச் சொந்தத்திலேயே இரண்டாம் தாரமாகப் போகும் யோகம்தான் இருக்கிறது என்று சொல்லுமாறு ஒரு ஜோசியரைப் பணம் கொடுத்து அழைத்து வருகிறான் மாதவன். ஜோசியர் மாதவன் சொல்லியபடியே கல்பனாவிடம் சொல்ல, 'இப்படிச் சொல்வதற்கு இவர் எவ்வளவு பணம் கொடுத்தார்' என்று கேட்கிறாள் கல்பனா.



காதுக்குள்

மனித உடலில் இன்றியமையாத ஓர் உறுப்பு காது. பல்வேறு பிரச்னைகளால் அது பிடிக்கப்படும் அபாயம் உண்டு. குறிப்பாக, காதில் சீழ் வடிதல். இது குழந்தைகளிடம் இன்று மிக அதிகம் காணப்படும் ஒரு பிரச்னை. இதுகுறித்த நமது சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கிறார் சென்னை, சாந்தோம் 'சைனஸ் அண்ட் நோஸ்' மருத்துவமனையின் காது, மூக்கு, தொண்டை நிபுணரான டாக்டர் துளசிதாஸ் அவர்கள்.

காதில் எப்படி சீழ் பிடிக்கிறது டாக்டர்?

“இதனால் அதிகம் பாதிக்கப்படுவது அடித்தட்டு மக்கள்தான். சளி பிடிப்பது தான் காதில் சீழ் பிடிப்பதற்கு போடப்படும் பிள்ளையார் சுழி. சளியிலுள்ள கிருமிகள் மூக்குப் பின்புறத்தில் உள்ள காதையும் மூக்கின் பின் பகுதியையும் இணைக்கும் குழாய் (Eustachian tube) மூலம் காதுக்குச் சென்றுவிட நேரும்போது காதில் சீழ் பிடிக்கிறது. அதேபோல் எடுத்த எடுப்பிலேயே காதிலிருந்து சீழ் வந்து விடாது. முதலில் காதின் நடுப்பகுதியில், சவ்வின் உட்புறத்தில் சீழ் பிடித்துக் கடுமையான காது வலி ஏற்படும். அதுவே பின்னர் சவ்வை உடைத்துச் சீழாக வெளிவரும்.


சளி மட்டுமல்லாது சுகாதாரமற்ற பாலைக் குடிப்பதன் மூலமும் சிறு குழந்தைகளுக்குக் காதில் சீழ் ஏற்படலாம். அழுக்கடைந்த ஃபீடிங் பாட்டில் மூலம் குழந்தைக்குப் பால் புகட்டும்போது சரியான பொசிஷனில் இல்லாமலோ, அளவுக்கு அதிகமாகவோ குழந்தை பாலைக் குடிக்கும் போது புரையேற நேரலாம். அப்போது அந்தப் பால் Eustachian Tube வழியாகக் காதைச் சென்று அடைந்துவிட்டால், சுகாதாரமற்ற பாலில் உள்ள கிருமிகளால் தொற்று ஏற்பட்டு காதில் சீழ் பிடிக்க நேரிடும்.

சைனஸ் பிரச்னை உள்ளவர்கள், மார்ச்சளி பிரச்னை உள்ளவர்களுக்கும் காதில் சீழ் பிடிக்கும் வாய்ப்புகள் அதிகம். காரணம், இந்த இருவகை நோயாளிகளுமே சளித் தொல்லைகளால் பாதிக்கப்படுவது தான்.”

இதன் அறிகுறிகள் என்ன டாக்டர்?

“காதில் சீழ் பிடிப்பதற்கு முன்னர் காதில் பயங்கர வலி இருக்கும். காது அடைத்தது போன்ற உணர்வு ஏற்படும். அப்போதே நாம் உஷாராகி காது, மூக்கு, தொண்டை நிபுணரைப் பார்த்துவிட வேண்டும். கொஞ்சம் தாமதித்தாலும் காதில் சீழ் பிடித்து, அது வெளியே வர ஆரம்பித்துவிடும். காதில் சீழ் வர ஆரம்பித்துவிட்டாலே காது சவ்வில் ஓட்டை விழுந்துவிட்டது என்று அர்த்தம். பிறகு குணப்படுத்துவது சிக்கலாகிவிடும்.

நம் மக்கள் பெரும்பாலும் காது வலி வந்தால் காது, மூக்கு, தொண்டை நிபுணரிடம் செல்வதில்லை. மெடிக்கல் ஷாப்பில் ஏதோ ஒரு சொட்டு மருந்தை வாங்கிக் காதில் விட்டுக்கொள்கிறார்கள். அப்போதைக்கு வலி குறைந்ததும் அமைதியாக இருந்து விடுகிறார்கள். உண்மையில் எப்போது காதில் சீழ் வர ஆரம்பிக்கிறதோ, அப்போது முதல் வலியே இருக்காது. இங்குதான் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஆனால் இதை உணராது வலி நின்றுவிட்டதென்று மேற்கொண்டு காதில் சீழ் வடிதலுக்கு ட்ரீட்மெண்ட் எடுக்கா



கதகளி!

மல் விடுவது மிகவும் ஆபத்தானது. இது வேறு பல விளைவுகளை ஏற்படுத்திவிடும். காது செவிடாவதில் ஆரம்பித்து, மூளைக் கட்டி வரை கொண்டு போய் உயிருக்கே உலை வைத்து விடலாம்."

காதில் சீழ் வடிதலுக்கு என்ன ட்ரீட்மென்ட் தரப்படுகிறது?

"முதலில் மருந்துகள் மூலமாகத்தான் மருத்துவம். சளிக்குக் காரணம் சைனஸா என டெஸ்ட் செய்து ஆன்டிபயாடிக், வலி நிவாரணிகள், சளி மருந்துகள், காது சொட்டு மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படும். இதன் மூலம் காது வலி குறைகிறதா, காது கேட்கும் திறன் இயல்பான நிலைக்குத் திரும்புகிறதா என்று கவனிக்கப்படும். வலியோ, செவித்திறனோ மேம்படவில்லை எனில் மெரினாடமி என்று சொல்லப்படும் ஒரு சிறு அறுவை சிகிச்சை, காது சவ்வில் செய்யப்படும். இதன் மூலம் நடுக்காதில் உள்ள சீழ் சுத்தம் செய்யப்பட்டு, அது நார்மல் லெவலுக்குக் கொண்டு வரப்படும்."

காதில் சீழ் பிடிக்காமலிருக்க என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?

"குழந்தைகளுக்கு சாக்லெட், ஐஸ்க்ரீம், கூல் ட்ரிங்க்ஸ் போன்ற எளிதில் சளி பிடிக்கும் அயிட்டங்கள் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். அதேபோல் அவர்களுக்குத் தரப்படும் உணவுப் பொருட்கள் சுத்தமாகவும் ஆரோக்கியம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். நமது வீட்டையும் சுற்றுபுறத்தையும் அசுத்தமின்றி நல்லவிதமாக வைத்துக்கொள்வது மிக முக்கியம்.

பச்சிளம் குழந்தைகள் கவனமுடன் பராமரிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு முடிந்தவரை தாய்ப்பால் தர வேண்டும். மற்ற பாலைத் தந்தாலும் சுகாதாரமான முறையில் வசதியான, சரியான முறையில் அமர்ந்து தரவேண்டும். இதன்மூலம் குழந்தைக்குப் புரை ஏறுவதைத் தடுக்க முடியும். சிறிது நேரம் தோளில் போட்டுத் தட்டினால் ஏப்பம் வந்துவிடும்.

பெரியவர்கள் சளி அண்டாது பார்த்துக் கொள்வது நல்லது. சைனஸ் மற்றும் மார்ச்சளி போன்ற தொந்தரவுகளால் பாதிக்கப்பட்டிருப்போர் சிகிச்சை எடுத்துக் கொள்வதன் மூலம் காதில் சீழ் வடிதலிலிருந்து தப்பிக்கலாம்."

- சௌந்தர்யா

படம் : **பொள்ளாச்சி சுந்தரம்**



• டாக்டர் துளசிதாஸ்

● ஆர். கர்ணன்,
தனக்கர்குளம்

? நடிகர்கள் (இப்போது பிரபு) அரசியலில் குதிக்க முக்கிய காரணம் என்ன...?

! மக்களிடையே பிரபலமாக இருப்பது என்பதே ஒரு வித போதைதான். ஒரு காலகட்டத்தில் சினிமா பாப்புலாரிட்டி இறங்கு முகமாகும். அதைத் தாங்கிக்கொள்ள மன வலிமையற்றவர்கள் அரசியலில் குதிப்பார்கள். சிலர் வெற்றி அடைவார்கள்; பலர் மேலும் ஏமாற்றத்தில் ஆழ்ந்து போவார்கள்.


● ஆர். ராமன்,
சென்னை - 63

? ரயில்வேயை லாபமாக்கிக் காட்டிய லாலுவால் ஏன் பீஹாரை முன்னேற்ற முடிய வில்லை? இத்தனைக்கும் அவர் பீஹாரின் ராஜா வாயிற்றே?

! ரயில்வே துறைக்குப் பொறுப்பேற்ற சமயம் பீஹார் அனுபவமே பாடம் புகட்டியிருக்கலாம். சர்வாதிகாரத்தை ஒதுக்கி, சர்வ அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு நல்ல முடிவெடுத்திருக்கலாம்.



● அட்வைஸ் அண்ணல்!



● பீஹார் ராஜா!



● அரசியல் ஆசை!

● ஸ்ரீவித்யா காளிதாஸ்,
சிதம்பரம்

? 'பெரியாறு அணை நீர்த் தேக்க அளவை உயர்த்த அனுமதிக்க முடியாது' என கேரள நீர்ப்பாசன அமைச்சர் பிரேம சந்திரன் பிடிவாதமாக இருக்கிறாரே...?

! 1) உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளபடி தமிழகமும் கேரளமும் சமரசமாகப் போவதைத் தவிர வேறு வழியில்லை. 2) இருக்கிற குறைந்தபட்ச நீரை அதிகபட்ச விளைச்சலுக்குப் பயன்படுத்தும் விஞ்ஞான முன்னேற்றம் இன்று ஏற்பட்டுள்ளது. தமிழக அரசின் கவனம் இத்திசையில் செல்ல வேண்டும்.

● பெ.பொன்ராஜ்பாண்டி,
மதுரை-16

? தமிழகத்தில் அ.இ.மு.க. - இ.மு.க.வுக்கு மாற்று சக்தி வேண்டும் என்று மக்கள் நினைக்கின்றனர்; அந்த மாற்று சக்தியாக பா.ஜ.க.வைக் கருதுகின்றனர் என இல.கணேசன் கூறுகின்றாரே!

! அந்தக் கட்சி பல வருஷங்களாக இதையேதான் சொல்லிக்கொண்டிருக்கிறது. அந்த மாற்று சக்தியை உருவாக்கப்போகும் சிவன் தான் இதுவரை கண்களுக்குத் தென்படவேயில்லை.


● கே.எல். கந்தரூபி,
கன்னியாகுமரி

? இலவசங்களை, கவர்ச்சிகரமான திட்டங்களை மாநில முதல்வர்கள் அறிவிக்...

● கோக் குளறுபடி!



- தராசு



நீங்கள் கேட்டவை

ராதிகா விளம்பரம் பார்த்தீங்களா?

வேண்டாம் என்கிறாரே பிரதமர் மன்மோகன் சிங்?

! நிதியமைச்சராக இருந்தவரல்லவா; இலவச கவர்ச்சியின் பின்னால் உள்ள ஆபத்து புரிந்திருக்கிறது. ஆனால் நம்முடைய அரசியல்வாதிகளின் மூலதனமே அதுதானே! பிரதமர் உள்பட எல்லோரும் இதைத்தானே கையாள்கிறார்கள்.

● இல. ஜோதிபிரகாஷ்,
பெரியகொழப்பலூர்*

? ஜில்லுனு ஒரு காதல் - சில்லுனு ஒரு காதல், சம்திங் சம்திங் - உனக்கும் எனக்கும், எம்டன் மகன் - எம் மகன் என்று மாறியதால் தமிழ் வளருமா?

! நோ! நெவர்! தலைப்பின் அர்த்தம்தான் அடியோடு மாறும்.

● ஆர். நாகராஜன், சென்னை - 117

? வெளிநாட்டு முதலீடு அதிக அளவில் தற்போது தமிழகத்துக்கு வரக் காரணம் தி.மு.க. அரசுதானே?

! மத்திய அரசின் அன்னிய முதலீட்டு கொள்கை மாற்றமே முதல் காரணம்; தமிழகத்தில் உள்ள இளைஞர்களின் திறமை வளம் அடுத்த காரணம்; தி.மு.க. அரசின் சுறுசுறுப்பும் ஒத்துழைப்பும் மூன்றாவது காரணம்.

● வீர.செல்வம், பல்லவனம் (பூம்புகார்)

? தமிழக அரசின் வருவாயில் முப்பது சதவிகிதத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கும்படி கம்யூனிஸ்ட் கட்சி குரல் கொடுக்கிறதே?

! ஜனநாயகம் அடிமட்டத்திலிருந்து தொடங்கி உயர்மட்டம் வரை செழிக்க உள்ளாட்சி அமைப்புகளுக்கு முக்கியத்துவம் தரப்படத்தான் வேண்டும். ஆனால், உள்ளாட்சி அமைப்புகளும் வரி வசூலிக்கின்றன என்பதை மறக்கக்கூடாது. திறமையான நிர்வாகத்துக்கு ஊக்கமளிப்பதோடு, திறமையற்ற நிதிநிர்வாகத்தைத் தட்டிக் கேட்கவும் வேண்டும். பொத்தாம் பொதுவான நிதி ஒதுக்கீடு நல்லதல்ல.

● ச. தமிழ்ச்செல்வி, காரைக்கால்

? "கோகோ கோலாவில் நச்சுப் பொருள் எதுவும் இல்லை" என்று ராதிகா சொல்லும் விளம்பரத்தைப் பார்த்தீர்களா...?

! இதில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. கோகோ கோலாவில் பயன்படுத்தப்படும் நீர் நச்சுத் தன்மையுடையது என்பது ஓர் ஆராய்ச்சியின் முடிவு. கோகோ கோலா போன்ற பானங்களே உடலுக்குத் தீங்கு விளைவிக்கின்றன என்பது மற்றோர் ஆய்வின் முடிவு. ராதிகா சொல்வது ஒருவேளை முதல் அம்சத்தில் சரியானாலும் இரண்டாவது ஆய்வின் அடிப்படையில் தவறானது. ○

❒ ரூ 100 பரிசு பெறுபவர்:
ஆர். ராமன்,
10, அண்ணா தெரு,
புது பெருங்களத்தூர்,
சென்னை - 600 063

★ ரூ 50 பரிசு பெறுபவர்:
எல். ஜோதிபிரகாஷ்,
104, பிராமணர் தெரு,
பெரியகொழப்பலூர்,
632 313

ஜி.எஸ்.எஸ்.

நெக்லஸ் பாலிடிக்ஸ்!

உக்ரைன் பாராளுமன்றத்தில் ஒரு சுவையான நாடகம் சமீபத்தில் அரங்கேறியது. எதிர்க்கட்சித் தலைவி டைமோஷென்கோ, "நாட்டின் வறுமையைத் தீர்க்க அரசு எந்த உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை" என்று பேச, அவைத் தலைவர் குஷ்ரேவ், "உங்கள் கழுத்தில் உள்ள சங்கிலியின் ஒரேயொரு முத்தை விற்றால், ஒரு சராசரி உக்ரேனியக் குடும்பம் ஒரு வருடத்துக்குச் சாப்பிடலாம்" என்று கூறியிருக்கிறார்.

உடனே வெகு வேகமாக அவைத் தலைவரை நோக்கி நடந்தார் டைமோஷென்கோ. தம் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழற்றி அவைத் தலைவருக்கெதிரே நீட்டினார். இதைச் சிறிதும் எதிர்பார்த்திராத குஷ்ரேவ், முதலில் திகைத்துப் போனாலும் பிறகு சமாளித்துக் கொண்டார். "இதை நாட்டிலுள்ள ஏழைகளுக்குத் தானம் செய்து விடுங்களேன்" என்றார்.

உடனே டைமோஷென்கோ, "நான் ஒன்றும் கோடீஸ்வரி அல்ல. இந்த நெக்லஸ் பிளாஸ்டரால் செய்யப்பட்டதுதான். வேண்டுமானால் பத்திரிகையாளர்களிடம் இதைக் கொடுக்கத் தயார். அவர்களே இதை மதிப்பிடட்டும்" என்றிருக்கிறார்.

எது தொடர்பான விஷயத்தில் இந்த மோதல் என்பதை தெரிந்துகொள்ள வேண்டாமா? 'பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அளவுக்கதிகமான சலுகைகளும் வசதிகளும் அளிக்கும் அரசு, அவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும்' என்றது எதிர்க்கட்சி. இது தொடர்பான வாக்கெடுப்பில் இந்தக் கோரிக்கை (எதிர்பார்த்தபடி) தோற்றுப் போனது. எனினும் குறைக்கலாம் என்பதற்கு ஆதரவாக 215 வாக்குகள் எழுந்தது வியப்புதான் (எதிராக விழுந்தவை 226)!



• டைமோஷென்கோ



"உங்களின் ஒரு முத்தில் உக்ரேனியக் குடும்பமே சாப்பிடலாம்!"

கலவரம்

"ஹலோ, போலீஸ் கன்ட்ரோல் ரூமா?" என்று தன் செல்போனில் பூஜா கேட்க, கைகளைக் கட்டியபடி அமைதியாக அமர்ந்திருந்த ஆகாஷ் புன்னகை செய்தான்.

"யெஸ். என்ன வேணும் சொல்லுங்க?" என்று எதிர்முனையில் கம்பீரமாக ஆண் குரல் ஒலித்தது.

"என் பேரு பூஜா. பெசன்ட் நகர்ல இருக்கேன். எனக்கு உங்க உதவி வேணும் சார்."

"என்ன பிரச்னை?"

"எனக்குக் கல்யாணமாகிடுச்சி. கணவரோட சேர்ந்து வாழ முடியலை. பிரிஞ்சி வந்துட்டேன். முறையா ஃபேமிலி கோர்ட்ல விவாகரத்து கேட்டு வழக்கு தொடர்ந்திருக்கேன்."

"சரி..."

"இந்தச் சூழ்நிலையில எனக்குத் தாலி கட்டின ஆகாஷ் திடீர்னு என் வீட்டுக்கு வந்திருக்கார். உரிமை கொண்டாடி திமிரா பேசறார். நடந்துக்கறார். மிரட்றார். அவரை வீட்டை விட்டுப் போக வைக்கணும்."

"உங்க அட்ரஸ் சொல்லுங்க."

பூஜா வரிவரியாகச் சொன்னாள்.

"அடையாறு மகளிர் காவல் நிலையத்துக்கு உடனே தகவல் கொடுக்கறோம் மேடம். அங்கேர்ந்து உடனே வருவாங்க. உங்களுக்கு அந்த நபரால ஏதாவது ஆபத்து ஏற்படும்னு நினைச்சா... நீங்க உடனே துணைக்கு யாரையாச்சும் கூட்டி வெச்சிக்கங்க."

"சரிங்க சார். தேங்க்யூ" என்று போனை அணைத்தான்.

ஆகாஷ் சிரித்தபடி எழுந்தான்.

"போலீசுக்கு நீ தகவல் கொடுத்ததும் புறப்பட்டுடுவேன்னு நினைக்காதே. காபி சாப்பிடணும். நீ போட்டுத் தரமாட்டே. நானே போட்டுக்கறேன். பால் இருக்கா?"

ரெஃப்ரிஜிரேட்டர் திறந்து பால் எடுத்தான். சமையலறைக்குச் சென்று, பாத்



தொடர்கதை

ம்!

12

பட்டுக்கோட்டை பிரபாகர்

திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்துவிட்டு, "பூஜா, உனக்கும் ஒரு கப் போட்டுத் தரட்டுமா?" என்றான்.

"அவசியம் இல்லை" என்றாள் பூஜா.

"சரி, இப்ப போலீஸ் வருவாங்க. வந்து? என்னைத் துப்பாக்கியால சுட்டுடுவாங்களா?"

"பேசாதே! இங்கேர்ந்து நீ போனாப் போதும்!"

"பூஜா... நீ ரொம்ப குழந்தைத்தனமா நடந்துக்கறே! நீ திமிரு பிடிச்சவன்னு எனக்குத் தெரியாதா? நீ போலீசைக் கூப்பிட்டா என்ன செய்யறதுன்னு நான் யோசிக்காமயா வந்திருப்பேன்?"

குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

"கை வேலையா இருக்கேன். அங்க ஜிப்பாய் மேல என் செல்போன் இருக்கில்ல... அதுல வீடியோ ஃபைல் நம்பர் செவனை கொஞ்சம் பாரேன். ஒரே ஒரு நிமிஷம் ஓடும் ஒரு சின்ன குறும்படம் இருக்கும். பாரு, பால் பொங்கப் போவுது!"

புரியாமல் அந்த செல்போனை எடுத்து அதன் வீடியோ ஃபைல்களில் ஏழைத் தேர்வு செய்து ஓடவிட்டுப் பார்த்தவள் அதிர்ந்து போனாள்.

"ஹோ!" என்று கத்தினாள்.

அவள் கைகள் நடுங்கின.

"ஆ... ஆகாஷ்...! என்ன... என்ன இது!"

"இரு! காபி போட்டுட்டு வர்றேன்."

ஆகாஷ் நிதானமாகப் பாலை கப்பில் ஊற்றி, காபித் தூள், சர்க்கரை போட்டுக் கலந்தபடி ஹாலுக்கு வந்தான்.

பூஜா அந்த ஃபைலை அவசரமாக 'டெலிட்' உத்தரவு கொடுத்து அழித்தாள்.

"அழிச்சுட்டியா? வெரிகுட்! ஆனா இதை கம்ப்யூட்டர்ல போட்டு கம்ப்யூட்டர்லேர்ந்து சிடில போட்டுப் பத்திரமா என் லாக்கர்ல வெச்சிருக்கேனே பூஜா. அதை எப்படி அழிப்பே?"

ஆகாஷ் நிதானமாக காபியைப் பருகினான்.

"ஆகாஷ், நீ மனுஷனா, மிருகமா?"

"மிருகத்துக்குத் தன் மனைவி ஹனிமூன் வந்த இடத்துல சுதந்திரமா குளிக்கறதை ரகசியமா செல்போன்ல படம் எடுத்து வெச்சிக்கணும்னு தெரியுமா பூஜா?"

"ஆகாஷ்! எவ்வளவு கேவலமா நடந்திருக்கே நீ! எனக்கே தெரியாம... ச்சீ!"

"உங்கிட்ட பர்மிஷன் கேட்டிருந்தா சரின்னிருப்பியா? ஆமாம், இப்ப கொஞ்ச நேரத்துல பொம்பளை போலீஸ் வரும். என்ன சொல்லப் போறேம்மா?"

முகமெல்லாம் வியர்த்துப் போய் அமைதியாக நின்றாள் பூஜா.

"பாவம்! ரொம்ப டென்ஷன்ல இருக்கே! நானே சொல்லித் தர்றேன். 'அவசரப்பட்டுத் தொந்தரவு பண்ணிட்டேன், எங்க பிரச்னையை நாங்களே பார்த்துக்கறோம், உங்க உதவி எதுவும் வேணாம்!' அப்படின்னு சொல்லணும். புரிஞ்சுதா?"

பூஜா அவனைப் பரிதாபமாகப் பார்த்

தாள்.

"அடடா! என்ன மூஞ்சே வாடிப் போச்சி? கொஞ்ச நேரம் முன்னாடி பத்தாயிரம் வாலா பட்டாசு மாதிரி எப்படி படபடன்னு பேசினே... இப்ப என்ன மழையில நனைஞ்ச பட்டாசு மாதிரி சத்தமே இல்லாம நிக்கிறே?"

"ப்ளீஸ் ஆகாஷ்.... என்னைக் கேவலப் படுத்தாதே! என்னை விட்ரு. அந்த சி.டி.யைக் குடுத்துடு!"

"விவாகரத்தும் கொடுக்கறேன்னு சொல்றேன். விவகாரமான சி.டி.யையும் கொடுக்கறேன்னுதான் சொல்றேன். நீதான் விலை பேச மாட்டேங்கறே."

"என்னால நடிக்க முடியாது!"

"வேணாம். குமரன்கிட்டேர்ந்து பணம் வாங்கிக் கொடு!"

"அதுவும் என்னால முடியாது!"

"அப்போ அந்த சி.டி.யை உலக மார்க்கெட்ல வித்து ஏதோ கிடைக்கிற காசைப் பாத்துக்க வேண்டியதுதானா?"

பொலபொலவென்று கண்ணீர் உதிர... கைகளைக் கூப்பினாள் பூஜா.

"உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன் ஆகாஷ்! உன் கால்ல வேணாலும் விழறேன்."

அவன் கால்களில் விழுந்தாள் பூஜா.

"சேச்சே! எந்திரி! சீரியல் தங்கச்சி மாதிரி இப்படியா அழறது? சீரியல் கதாநாயகி மாதிரி 'இதை எப்படி சந்திக்கணுமோ அப்படிச் சந்திக்கிறேன்'னு சபதம் போட வேணாமா?"

வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது.

"போய்க் கதவைத் திற! உதவறதுக்காக போலீஸ் வந்திருக்கு! போம்மா கண்ணு!" என்றவன் சோபாவில் அமர்ந்து மேகஸினை எடுத்துப் புரட்டிக் கொண்டான்.

கண்களைத் துடைத்துக்கொண்டு பூஜா கதவைத் திறக்க, ஒரு பெண் சப்-இன்ஸ்பெக்டரும், இரண்டு பெண் கான்ஸ்டபிள்களும் நின்றிருந்தார்கள்.

"பூஜாங்கிறது..."

"நான்தான் மேடம்..."

இயல்பாக அவர்கள் உள்ளே வந்தார்கள்.

"நான் எஸ்.ஐ. ராணி! இவர்தானா? என்ன தொந்தரவு பண்றாரு? சொல்லுங்க!"

"இல்ல... வந்து..." தடுமாறினாள் பூஜா.

எழுந்து அருகில் வந்தான் ஆகாஷ்.

"மேடம், நான் ஆகாஷ். பூஜாவோட புருஷன். பூஜா விவாகரத்து கேட்டு வழக்குப் போட்டிருக்கிறது நிஜம். ஆனா எனக்கு அதுல சம்மதம் இல்லை!"

"ஏன்?" என்றார் ராணி.

"காரணம் நியாயமா இல்லை. அதாவது மேடம்... பூஜாவுக்குக் கல்யாணத்துக்கு முந்தி ஒரு காதல் இருந்தது. அது எனக்குத் தெரியாது. தெரிஞ்சப்புறம் ஏன் இதை மறைச்சேன்னு கோபப்பட்டேன். அப்புறம் சமாதானமாயிட்டேன். கோபப்பட்டதைப் பெருசா எடுத்துக்கிட்டு பிரிஞ்சு வந்துட்டா. அந்தக் காதலன் நீ விவாகரத்து வாங்கிச் சட்டப்படி பிரிஞ்சு வந்தா உன்னை ஏத்துக்கறேன்னு சொல்லிருக்கான். அதனா வழக்குப் போட்டிருக்கா. இவ இப்படிப் பண்றதில எனக்கு இஷ்டமில்லை; இவ அப்பாவுக்கும் இஷ்டமில்லை. வேணும்னா இவ அப்பா நம்பர் தர்றேன். பேசிப் பாருங்க. பழைய

ராஜீவ்காந்தி படுகொலை சம்பவத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'சயனைடு' என்ற கன்னடப் படம், தமிழில் விஸ்வாஸ் சுந்தர் தயாரிப்பில் 'குப்பி' என்ற பெயரில் ரீமேக் ஆகிறது. கன்னடத்தில் நூறாவது நாளை நோக்கி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் சயனைடு படத்தை இயக்கிய ஏ.எம்.ஆர். ரமேஷே, குப்பியையும் ரீமேக் செய்து படப்பிடிப்பை நடத்தி வருகிறார். விடுதலைப்புலிகளோடு இலங்கை ராணுவத்தினர் போராடும் காட்சிகளை மரக்காணம் பகுதியில் படமாக்கினார்கள். ரத்னவேலு ஒளிப்பதிவு செய்கிறார்.

- மனோ

விஷயங்களைக் கிளறாம சேர்ந்து வாழத் தயாரா இருக்கிற என்னை அலட்சியப் படுத்தறா, மேடம். எது சரின்னு நீங்களே அட்வைஸ் பண்ணுங்க'' என்றான் அமைதியாக ஆகாஷ்.

ராணி, பூஜா பக்கம் திரும்பினார்.

''என்னம்மா சொல்றே? இவர் சொல்றதெல்லாம் உண்மைதானா?''

என்ன சொல்வதென்று புரியாமல் தவித்தாள் பூஜா.

"வாயைத் திறந்து சொல்லேன். கேக்கறாங்க இல்ல? சேர்ந்து வாழலாம்னு சமாதானமாப் பேசத்தானே நான் வந்தேன்? உன்னை அடிச்சேனா? திட்டுனேனா? பேசினேன். அவ்வளவுதானே? நான் தொந்தரவு கொடுக்கறேன்னு அவசரப்பட்டுப் போலீஸுக்குத் தகவல் கொடுத்தியே... இப்ப சொல்லேன் உண்மையை!'' என்றான் ஆகாஷ்.



"பூஜா, சொல்லும்மா, என்ன தொந்தரவு குடுத்தாரு?''

"அது... அது...''

"அடிச்சாரா? சும்மா சொல்லு. தைரியமா சொல்லு... நாங்க இருக்கோம்.''

"இல்லை. அடிக்கலை.''

"சமாதானமாத்தானே பேசினாரு?''

"ஆமாம் ஆனா... எனக்கு இவரோட சேர்ந்து வாழப் பிடிக்கலை.''

"அது உன் இஷ்டம். யாரும் யாரையும் வற்புறுத்த முடியாது. அட்வைஸ் எல்லாம் எடுபடற காலம் மலை ஏறிடுச்சி. எதையும் சட்டம்தான் சொல்லணும். குடும்ப கோர்ட்ல வழக்குப் போட்ருக்கல்ல... அங்க பாத்துக்கோ,'' என்று திரும்பிய ராணி, "மிஸ்டர் ஆகாஷ், காரணம் சரியா, தப்பான்னு பேசறதுக்கு எங்களுக்கு உரிமை இல்லை. இவங்களுக்கு உங்களோட சேர்ந்து வாழச் சம்மதமில்லைன்னு சொல்லிட்டாங்க. நீங்க புறப்படுங்க. உங்க பிரச்னையை கோர்ட்ல பார்த்துக்கங்க'' என்றார்.

"சரி மேடம். நீங்க சொன்ன மாதிரி நல்லதுக்குக் காலம் இல்லை. இறங்கி வந்தது என் தப்பு! இனிமே நான் தொந்தரவு பண்ண மாட்டேன். புறப்படறேன் மேடம்; இப்பவே புறப்படறேன்.''

ஆகாஷ் உள்ளறைக்குச் சென்று தன் சூட்கேசுடன் திரும்பினான்.

"பூஜா... உனக்கு மனசாட்சின்னு ஒண்ணு இருந்தா, எங்கிட்ட அப்பறமா போன்ல பேசுவே! பேசலைன்னா உன் மானம் சந்தி சிரிக்கும். சிரிச்சா பரவால்லேன்னா பேசாம விட்டுடு!'' என்றவன் விடுவிடுவென்று வெளியேறினான்.

அவன் போனதும் சப்-இன்ஸ்பெக்டர் ராணி அவளிடம் வந்து, ''பாத்தா நல்லவர் மாதிரிதானே தெரியறாரு? சரி... இது உன் தனிப்பட்ட பிரச்னை. நீ ஏதாவது சொல்லணுமா? அவர் எதுவும் மிரட்டலையே?'' என்றார்.

சொல்லிவிடலாமா?

கேவலமான முறையில் ஓர் அந்தரங்கமான ஆதாரத்தை வைத்துக்கொண்டு என்னை மிரட்டுகிறான் என்று நிஜத்தைச் சொல்லிவிடலாமா?

அதை வெளி உலகில் பரப்பிவிட்டால்? செய்வானா? செய்வான்; செய்யக் கூடியவன்தான்!

"ஒண்ணுமில்லை மேடம். வந்ததுக்கு தேங்ஸ்'' என்றாள்.

போலீஸ் சென்ற பிறகு, மிகவும் தயங்கிவிட்டு குமரனை செல்போனில் அழைத்தாள் பூஜா.

(தொடரும்)

புதிய தொடர்

வாரம் ஒரு பாசுரம்!

சுஜாதா

எந்த நல்ல காரியத்தையும் விளக்கேற்றித்தான் துவக்கி வைக்கிறோம். இன்றைய தினங்களில் கம்ப்யூட்டர் விழாக்கள்கூட குத்து விளக்கேற்றித்தான் துவங்குகின்றன.

குத்துவிளக்கைத் தேடி அலைய முடியாது. நமக்கு ஓர் அகல்விளக்கே போதும்.

'தகழி' என்ற அருமையான கடைச் சங்ககாலத் தமிழ் வார்த்தையை நாம் மலையாளத்துக்கு இழந்துவிட்டோம். மண் விளக்குக்குப் பயன்பட்டு வந்த சொல் அது! கார்த்திகை மாதத்தில் வீடெங்கும் வரிசையாக ஏற்றி வைப்பார்களே அந்த விளக்கு. அம்மாதிரி விளக்கொன்றை ஏற்றி வைத்து இந்தத் தொடரைத் துவங்குவோம்.

விளக்கேற்றுவது இருள் நீங்குவதற்கு. இடர்ப்பாடுகள், சுனாமி எனும் ஆழிப் பேரலையைப் போல வந்தாலும் அதை நீக்க ஒரு பெரிய விளக்கை ஏற்றி வைத்தால் போதும். அதற்குத் தேவையான சமாசாரங்கள் என்னென்ன? முதலில் ஒரு தகளி வேண்டும்.

தலையாய எடுத்துக்காட்டாக, உலகத்தையே (வையம்) எடுத்துக் கொள்ளலாம். அதில் எண்ணெய் ஊற்ற வேண்டும்; அதற்கு (வார்கடல்) சமுத்திரத்தைப் பயன்படுத்தலாம். திரி ஏற்ற வேண்டும்; கதிரவனைப் பற்ற வைக்கலாம். அதைக் கடவுளின் பாதத்தில் வைத்தால் போதும்; காரியம் முடிந்தது.

இவ்வளவு பெரிய விளக்கை ஏற்றுவது கொஞ்சம் கஷ்டம்தான் என்றாலும் கற்பனை செய்தாவது பார்க்கலாமே. அட, சொல்லியாவது பார்க்கலாமே! காசா, பணமா? அந்தச் சொல் மாலையாலேயே இடர்ப்பாடுகள் அனைத்தும் நீங்கிவிடும் என்கிறார் பொய்கையாழ்வார்.

வையம் தகளியா வார்கடலே
நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக -
செய்ய
சுடராழியான் அடிக்கே
சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று.

(வெய்ய - வெப்பமிக்க, செய்ய- சிவந்த, சுடராழி - ஒளிச் சக்கரம், இடராழி-துன்பக்கடல்)


இதைப் பாடிய பொய்கையாழ்வார் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். திருவெஃகா என்ற பழைய பெயர் கொண்ட காஞ்சிபுரத்துக்காரர் துறவி.

இந்தப் பாடல் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் 2082-ஆவது

பாசுரம். இயற்பா என்கிற பகுதியில் முதல் திருவந்தாதியில் முதல் பாசுரம்.

இது நேரிசை வெண்பாவில் அமைந்தது. பொய்கையாழ்வார் பாடிய நூறு பாடல்களால் புறவிருள் அகன்றது என்பது வைணவர்களின் நம்பிக்கை. அதிகாலையில் கடற்கரையில் இருள் பிரியும் வேளையில் நின்று கொண்டு தொடுவானத்தில் சூரியன் உதிக்க எழுந்து உலகெலாம் வெளிச்சத்தில் நனைவதைப் பார்க்கும்போது 'சஹஸ்ரகோடி பாஸ்கர துல்யம்' என்று சொல்லும் 'கதிராயிரம் இரவிகலந்தாற்' போன்ற அந்தக் கணத்தில் பொய்கையாழ்வாரை நினைவிற் கொள்ளுங்கள்.

(படிக்கலாம்)



ம.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத்துக்கு, இலக்கிய மேடைகளில் ஆற்றொழுக்கு நடையில் அற்புதமாகப் பேசுவது, அரசியல் மேடைகளில் அடுக்குமொழியில் அரசியல் எதிரிகளை ஆவேசமாகத் தாக்குவது என இரண்டு முகங்கள் உண்டு. அண்மையில், ம.தி.மு.க. விலிருந்து தி.மு.க.வுக்குத் தாவிய விஜயா தாயன்பனை மேடையில் விளாச, கைது செய்யப்பட்டு ஜாமீனில் வந்திருக்கிறார்... ஆவேசமாக இருந்தவரைச் சந்தித்தோம்.

'பெண்களின் சுயமரியாதைக்கு மதிப்பளிக்கும் ம.தி.மு.க.' என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் வைகோவின் சீடரான நீங்கள் திருமதி விஜயா தாயன்பனை ஆபாசமாகப் பேசலாமா?

"இது அபாண்டமான குற்றச்சாட்டு. உள்ளாட்சித் தேர்தல் பிரசாரத்தில் இந்தத் தி.மு.க. அரசு செய்த இல்லுமுல்லுகளை ஆணித்தரமாக விமர்சித்தேன். நம்ப வைத்துக் கழுத்தறுக்கும் கலைஞரை தோலுரித்துக் காட்டினேன். என்னை ஏதாவது வழக்கில் சிக்க வைப்பார்களோ என்று எண்ணினேன். அதற்கேற்றவாறு தலைநகர் சென்னையில் பிரசாரம் செய்யும்போது விஜயா தாயன்பனிடம் ஒரு புகார் மனு வாங்கி, கைது செய்தார்கள். வேறு ஒரு முகாந்திரமும் இல்லை. இது நான் எதிர்பார்த்ததுதான்!"

நீங்கள் விரசமாகப் பேசியதற்கு, தக்க ஆதாரங்கள் காவல்துறையிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே!

"நான் ஒன்றும் விரசமாகப் பேசவில்லை. பதின்மூன்று ஆண்டு காலக் கட்சித் தொண்டர்களின் கண்ணீரையும், ரத்தத்தையும் காவு கேட்டவர் அந்த அம்மையார். இந்த இயக்கத்தைப்



"ம.தி.மு.க.வை

பயன்படுத்தி வாழ்ந்தவர்களில் அவரும் ஒருவர். சென்ற சட்டமன்றத் தேர்தலில் அண்ணாநகரில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கான தகுதி எங்கள் தோழர்களில் பலருக்கு இருந்தாலும், வைகோ பெருந்தன்மையாக அவருக்குச் சீட்டு கொடுத்தார். இப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்தும் அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் தி.மு.கவுக்கு விசுவாசமாகச் செயல்பட்டதை என்னைப் போன்ற தொண்டர்களால் ஜீரணித்துக் கொள்ள முடியாது. அப்படியும், அரசியல்ரீதியாகத்தான் விமர்சனம் செய்தேனே தவிர, ஆபாசமாகப் பேசவில்லை."

விஜயா தாயன்பன் மீது மட்டும் உங்களுக்கு ஏன் இவ்வளவு ஆவேசம்?

• விஜயா தாயன்பன்

''ஆசாபாசத்துக்கு அடிபணியாத ம.தி.மு.க.வின் கண்ணின் மணிகளை வலைவீசி அழைக்கின்ற முயற்சியில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். இதற்காக அதிகார பலத்தையும் பணபலத்தையும் ஆளும் கட்சி அவருக்குக் கொடுத்திருக்கிறது. மற்றபடி நான் விமர்சிக்கும் அளவுக்கு அவருக்கு எந்தத் தகுதியும் இல்லை.''

விஜயா தாயன்பன் போன்றவர்களால் உங்கள் இயக்கத்தை உடைக்க முடியுமா?

''ம.தி.மு.க.வை யாராலும் உடைக்க முடியாது. இது கண்ணீராலும் ரத்தத்தாலும் கட்டப்பட்ட இரும்புக் கோட்டை. ஆனால் யாரோ ஒருவர் விலகிச் செல்வதன் மூலம் எங்களின் கட்டுமானத்துக்கு எந்தச் சேதமும் வந்துவிடாது. விலகிச் சென்ற அம்மையாரின் வில்லங்க யுத்தியை விமர்சிப்பதைப் பெரிதுப்படுத்தி கைது நட



யாராலும் உடைக்க முடியாது!”

-நாஞ்சில் சம்பத்

வடிக்கை வரை கொண்டு வருகிறார்கள். இதற்குப் பழிவாங்கும் தி.மு.க. அரசும் துணை போகிறது. பேச்சுரிமையை முடக்கும் வகையில் செயல்பட்டுவிட்டு, மேடைக்கு மேடை 'தமிழகத்தில் ஜனநாயகக் காற்று வீசுகிறது' என்று கலைஞர் பெருமைப்பட்டுக் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை.''

சர்ச்சைக்குரியதாகப் பேசிக் கைதாவதன் மூலம், விளம்பரம் பெறுவதுதான் உங்கள் நோக்கமா?

''ஆதிக்கச் சக்திகள் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் அதன் கன்னத்தில் அறையும் சத்திய ஆவேசம்தான் என் பேச்சு. வழக்குப் போட்டு மிரட்டுவதன் மூலம் என்னை வைகோவிடம் இருந்து அப்புறப்படுத்த முயற்சி செய்கிறார்கள். ம.தி.மு.க.வின் கொள்கைகளை நாடெல்லாம், நாளெல்லாம் பேசுகிற எனக்கு விளம்பரம் எதற்காக?''

- ப்ரியன்

படங்கள்: **ராஜன்**


விலை ரூ.100
இன்னும்
சில தினங்களில்
உங்கள் கைகளில்...
ஒப்புயர்வற்ற
கல்கி
தீபாவளி மலர் 2006


ஒளிரும் தீபாவளி ! புனித ரமலான் !
அணிய சாரதா'ஸ் ஆடைகள்..!
தீபாவளி வாழ்த்துக்கள்
MS-104
SKB-504
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங், 827,மவுண்ட்ரோடு, சென்னை-2, போன்:28521177.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

